அறைவு 03 இயம் 25 January 10 - 16, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

aat @ VBC

HELLO MOBILE WORLD



122, NC Road Trincomalee
0777154663 - 0712674050

# புதிய சனாதிபதி



இலங்கையின் ஏழாவது சனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியீட்டிய மைத்திரிபால ஸ்ரீசேனா நேற்று மாலை இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் மிக்க ஆறாவது சனாதிபதியாக நேற்று மாலை 6.21ற்கு சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

இச்சத்தியப் பிரமாணத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியத் தலைவர் ரணில் விக்ரமசிங்க பிரதமமந்திரியாகப்

**திருகோணமலையில் 86,111 வாக்குகளால் முன்னிலை**

## தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவு

## "தேசிய அரசு" பரிசீலிப்போம்



"தாம் வெற்றிபெற்றால் தேசிய அரசு அமைக்கப்படுமென ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கும் மைத்திரிகால சிறிசேன ஏற்கனவே அறிவித்துள்ளபோதிலும் அது குறித்து எத்தகைய கருத்தும் எமக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. ஆனால் அது போன்ற எத்தகைய அழைப்புக்கள் வந்தாலும் அவை குறித்தெல்லாம் நாம் பரிசீலிப்போம்" - இவ்வாறு

## விசாரணைகள் வருமா





இலங்கையின் ஆட்சி மாற்றத்துக்கு உள்ளாகியுள்ள நிலையில் விடுதலைப் புலிகிளடம் இருந்து பிரிந்த காலம் முதல் அரச ஆதரவுடன் கிழக்கில் அரசியல் பணியாற்றிக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தன் மற்றும் மீள் குடியேற்றப் பிரதி அமைச்சர் முரளீதரன் ஆகியோர் மீது விசாரணைகள் நடாத்தபட வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

பொது வேட்பாளருக்கான தமது ஆதரவை முதன் முதலில் வெளிப்படுத்திய அரசியல் கட்சியும், சிங்கள அடிப்படைவாதக்

## விடைத்தாள் திருத்துனர்களுக்கு விலைகூட்டிய சிற்றுண்டி!!

விடைத்தாள் திருத்துனர்களுக்கு விலைகூட்டிச் சிற்றுண்டிகள் விற்கப்பட்டதாக திருத்துனர்கள் குறைப்பட்டுக்கொண்டுள்ளனர்.

அண்மையில் நடந்து முடிந்த க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகள் தேர்வு செய்யப்பட்ட பாடசாலைகளில் நடைபெற்று முடிந்துள்ளது.

இந்நிலையில் இப்பாடசாலைகளின் சிற்றுண்டியகங்களால் விடைத்தாளினைத் திருத்தும் பணியில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட சிற்றுண்டிகளின் விலைகள் சந்தைவிலையை விட அதிகமாக இருந்ததாக ஆசிரிய 17

## திருகோணமலை மாவட்ட முடிவே முதலில் வெளியாகியது

நடைபெற்று முடிந்த சனாதிபதித் தேர்தலின் முதலாவது மாவட்ட முடிவுகளை திருகோணமலை வெளியிட்டுள்ளது.

நேற்று அதிகாலை சுமாரு 6.30 மணியளவிலல் முதலாவது மாட்ட முடிவாகத் திருகோணமலை மாவட்ட முடிவு வெளியானது.

இம்முடிவில் பொது வேட்பாளரும் தற்போதைய சனாதிபதியுமான மைத்திரிபால ஸ்ரீசேன 89.111 வாக்குகளை அதிகமாகப் பெற்று மாவட்ட வெற்றியைப் பதிவு செய்திருந்தார்.

மொத்த வெற்றிக்கான கட்டியமாக இவ் வெற்றி பதிவாகியது. அதனைத் தொடர்ந்தே ஏனைய மாவட்டங்களின் முடிவுகள் வெளியாகின. எனினும் தபால் மூல வாக்களிப்பின் முடிவுகளை பிந்தி வெளியிட்ட மாவட்டமாகத் திருகோணமலை இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சம்பந்தன் அவர்கள் சுகவீனம் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் வாக்களிப்பில் ஈடுபடவில்லை. கிழக்கின் எதிர்க்கட்சித் தலைவர் தண்டாயுதபாணி தமது வாக்கினை செலுத்தினார்.

## மே வரை கலைக்க வேண்டாம்

நாடாளுமன்றத்தை எதிர்வரும் மே மாதம் வரை கலைக்க் வேண்டாம் என்ற வேண்டுகோள் சனாதிபதியிடம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


தேர்தல் தோல்வியை அடுத்து முன்னால் சனாதிபதியான மகிந்த ராசபக்ச இறுதி நேரத்தில் நாடாளுமன்றைக் கலைத்துவிடும் நடவடிக்கையை மேற்கொள்வார் என எதிர்வுகூறல்கள் வெளியிடப்பட்டிருந்தன.

எதிர்வரும் மே மாதத்துடன் தற்போதுள்ள நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தின் ஐந்து வருடங்கள் நிறைவு பெறுகின்றன.

புதிதாக நாடாளுமன்றுக்கு தெரிவாகித் 17

AFTER O/L....
English for You
E4U
VEAL BUSINESS COLLEGE (VBC)
No.159A, Sea View Road, Trincomalee - 026 222 76 22 / 0777 555 738
4 MONTHS COURSE

Sugirtha Stationers
காகிதாதிகள் மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள்
378/380 Court Road, Trincomalee
026 2225699 - 0775151336
அரச அங்கீகாரம் பெற்ற வினியோகத்தர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# முடிவுகளின் பின்னரான கடமைகள்....!

**தமிழர்களின்** ஏகோபித்த ஆதரவுடன் இலங்கையின் சனாதிபதி தேர்வாகியுள்ளார்.

வடக்கு கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் புதிய சனாதிபதிக்கே தமது ஆதரவைத் தமிழர்கள் வழங்கியிருந்தனர்.

இந்த ஆதரவு தனியே சனாதிபதிப் பதவியின் மாற்றத்திற்கானதொரு ஆதரவாக மட்டும் புதிய சனாதிபதியால் கருத்திற்கொள்ளப்படக் கூடாது. வெறுமனே பதவியில் மற்றொருவரை மட்டும் இருத்தி அழகுபார்க்க தமிழ் மக்கள் விரும்பவில்லை. இந்த மாற்றத்தின் ஊடாக கடந்த 40 வருடங்களாகத் தமிழர்கள் அனுபவித்துவரும் இரண்டாந்தரப் பிரசைகளுக்கான பராமரிப்பில் இருந்து விடுபடவும், சம அந்தஸ்துடன் கூடிய வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளவும் மக்கள் விரும்புவதே தெளிவாகின்றது.

அதற்கான முன்னெடுப்புக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்க வேண்டிய கடமை அவர்களுக்கு எழுந்துள்ளது.

சனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளியானதைத் அடுத்து தமிழத் தேசியக் கூட்டமைப்பு தனது ஆதரவை யாருக்கு வெளியிடப் போகின்றது என்பதைத் தமிழ் மக்களிற் பெரும்பாலானோர் எதிர்பார்த்துக்கொண்டிருந்த வேளையில் தபால் மூல வாக்களிப்பின் பின்னரே தமிழத் தேசியக் கூட்டமைப்பு தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தது.

இதனையடுத்து முன்னெப்போதும் இல்லாதவாறு வடக்கு கிழக்கில் மக்கள் அதிகூடிய அளவில் வாக்களித்தது இவ்வறிப்பினால்தான் என்பது வெளிப்படையானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வார்த்தைகளில் இருந்த ஆதரவை மக்கள் செயற்பாட்டில் காட்டித் தமது கடமையை நிறைவு செய்துள்ளனர்.

இப்போது பந்து தமிழத் தேசியக் கூட்டமைப்பின் பக்கமே உள்ளது. தமிழர்களின் ஆதரவு எந்த அடிப்படையில் எழுந்தது என்பதை அரசிற்குப் புரிய வைக்க வேண்டிய கடப்பாடு முக்கியமாக தமிழத் தேசியக் கூட்டமைப்பின் முன் உள்ளது.

புதிய சனாதிபதியும் "பழைய குருடி கதவைத் திறடி" என்ற போக்கினை முன்னெடுப்பாராயின் அப்பண்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் எதிர்காலத்தின் மீது கடும் தாக்கங்களை ஏற்படுத்தும்.

எவ்வித நிபந்தனைகளையும் விதிக்காமல் புதிய சனாதிபதிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்க முன்வந்தமையானது பெரும் விமர்சனங்களை உருவாக்கியுள்ள நிலையில் தமது ஆதரவு சரியானதொரு திசை நோக்கி நகர்வதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அதற்கான கடப்பாடு அவர்களுக்கு உள்ளது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டியதுடன் அவர்கள் அதற்கான செயற்பாடுகளை தாமாகவே முன்வந்து புதிய சனாதிபதியுடன் முன்னெடுக்க வேண்டும்.

எவ்வாறு தாமாகவே முன்வந்து எவ்வித நிபந்தனைகளும் இன்றி பொது வேட்பாளருக்கு தமிழத் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வங்கியதோ அவ்வாறே தமிழர்களின் நிலையை மேல்நிலைக்குயர்த்தும் செயற்பாடுகளை புதிய சனாதிபதியுடன் இணைந்து முன்னெடுக்கவேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உருவாகியுள்ளது.

புதிய சனாதிபதி அழைத்தோ அல்லது அழைக்காமலோ முன்வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது செயற்பாட்டை அவருடன் இணைக்க முயற்சிக்க வேண்டும்.

எதிர்வரும் 11ம் திகதி சர்வ கட்சி அமைச்சரவையை உருவாக்கும் திட்டமொன்றை புதிய சனாதிபதியின் 100 நாள் வேலைத்திட்டம் உள்ளடக்கியுள்ளது.

இந்நிலையில் சர்வகட்சி அமைச்சரவையில் தமிழத் தேசியக் கூட்டமைப்பு இணைந்துகொள்ளாது என அவ்வமைப்பின் சார்பில் சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

அமைக்கப்படவுள்ள சர்வகட்சி அமைச்சரவையானது தனது நிலைப்பாடு எதனையும் வெளிப்படுத்தாத நிலையில் அச் சர்வகட்சி அமைச்சரவையில் இணைப் போவதில்லை என்ற தமிழத் தேசியக் கூட்டமைப்பின் அறிவிப்பானது தாமாகவே முன்வந்து தெரிழவித்த ஆதரவு என்பதுடன் தமது கடமை நிறைவுற்றுவிட்டதான தோற்றப்பாட்டையே உருவாக்கியுள்ளது.

அமைச்சர் பதவிகளை ஏற்பதா? இல்லையா? என்பதை அப்போதுள்ள நிலைமைகளைக் கொண்டு தீர்மானிக்காமல் முன்னேற்பாடாகவே மேற்கொண்டுள்ள அறிவிப்பானது அரசியல் சாணக்கியம் மிக்கதா? என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

-மாயன்-

## சமாதான நீதவான்



கந்தளாய் கெமுனு மாவத்தை முகவரியில் வசித்து வரும் ஹாஜியானி மார்ஜானிஉம்மா முகம்மது அசாத் என்பவர் திருகோணமலை நீதிமன்ற வலயத்திற்கான சமாதான நீதிவானாக கந்தளாய் நீதிமன்ற நீதிபதி திஸாநாயக்கா முன்னிலையில் அண்மையில் சத்தியபிரமாணம் செய்து கொண்டார்.

ஆசிரியராக ஓய்வுபெற்ற பின் திருகோணமலை மாவட்ட சர்வோதய தேசோதய சபையில் இருமொழி பயிற்சி உபதேசகராக கடமைபுரிவதோடு கந்தளாயில் சிங்கள மற்றும் தமிழ் மொழி படநெறி வகுப்புகளை இலவசமாக நடத்தி வருகின்றார்.
இவர் இப் பிரதேசத்தின் பல சமூக செயற்பாடுகளிலும் இனமத பேதமின்றி தமிழ் சிங்கள மக்களுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடதக்கது.

## விபத்து



திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் ஆரம்பபிரிவு பாடசாலைக்கு அருகில் 2 மோட்டார் சைக்கிள்களில் பயனித்தவர்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளான சம்பவம் 07.01.2015 மாலை 6.30 மணிக்கு இடம்பெற்றது. இதன் போது மோட்டார் சைக்கிளில் பணனித்த ஒருவர் சிறு காயங்களிற்கு உள்ளான நிலையில் திருகோண மலை வைத்தியசாலையில் அனுமதிக்கப பட்டுள்ளார். (அச்சுதன்)

## பாலத்திருத்தப் பணிகள் முன்னெடுப்பு

அண்மையில் பெய்ந கடும் மழையினால் ஊற்பட்ட வெள்ளத்தில் திருகோண மலையின் குறிஞ்சாக்கேணிப் பாலம் அள்ளிச் செல்லப்பட்டது.

அப்பாலத்தைத் திருத்தும் பணிகள் முன்னெடுக்கப பட்டுள்ளன.





## உவர்மலை மூத்தோர் சங்கத்திற்கு அங்கத்தவர்கள் சேர்க்கப்படுகின்றனர்

திருக்கோணமலை - உவர்மலை மூத்த பிரஜைகள் நலன்புரிச் சங்கத்தினர் அங்கத்தவர்களைச் சேர்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர விரும்பும் உவர்மலை கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் அறுபது (60) வயதிற்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பப் படிவங்களை உவர்மலை கிராம உத்தியோகத்தரிடம் அல்லது சங்க செயலாளரிடம் பெற்றுப் பூரணப்படுத்தி சந்தாப் பணத்துடன் நலன்புரிச் சங்க செயலாளரிடம் அல்லது பொருளாளரிடம் விரைவாக ஒப்படைத்து ஆதரவு நல்கும்படி நலன்புரிச் சங்க செயலாளர் கோ. கயிலாய -நாதன் கேட்டுக்கொள்கின்றார். (விதுசா)

## அறநெறிப் பாடசாலை அனுமதிகள்

திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலைக்கு 2015ம் ஆண்டுக்கு மாணவ - மாணவிகளை இணைத்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணபபப் படிவங்களை அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களிடம் அல்லது ஆலயத்தில் இருந்து பெற்றுக் கொண்டு குறித்த திகதிக்கு முன் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

அதேவேளை அருள்மிகு விஸ்வநாத சுவாமி (சிவன்) அறநெறிப் பாடசாலைக்கும் 2015ம் ஆண்டுக்கு மாணவ - மாணவிகளை இணைத்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

படிவங்களை அறநெறி ஆசிரியர்களிடம் அல்லது ஆலயத்தின் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும், இடப்-பற்றாக்குறை காணப்படுவதால் விண்ணப்பங்கள் 31.01.2015 வரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (விதுசா)

## திருமலையில் சனாதிபதித் தேர்தல் ஏற்பாடுகள்



ஊடகவியலாளர் சசிகுமாரின் "கமெரா" கண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புச் செய்திகள்

# தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ முடியுமா?

## மட்டக்களப்பு நா.உ சீ.யோகேஸ்வரன்



புதிய ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்குரிய சூழல் ஏற்படுத்தப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், "வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோளை ஏற்று மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்துள்ளார்கள். ஆட்சி மாற்றத்தை கொண்டுவர வேண்டும் என்ற காரணத்தினாலேயே, மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்துள்ளார்கள். ஆட்சி மாற்றத்துக்காக வாக்களித்த அனைத்து மக்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

எக்காலத்திலும் இல்லாதளவுக்கு இம்முறை பெருந்தொகையான மக்கள் வாக்களிப்பில் கலந்துகொண்டதுடன், வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு தமது வாக்குகளை அளித்திருப்பது மிகவும் மகிழ்ச்சியான விடயமாகும். வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாஷைகளையும் உரிமைகளையும் மைத்திரிபால சிறிசேன தீர்த்துவைக்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் மக்கள் எம்மிடம் முன்வைத்துள்ளனர்.

எமது சமூகம் நீண்டகாலமாக இதற்காக பாடுபட்டிருக்கின்றது. அதற்கான முடிவு மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் கிடைக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் நம்புகின்றனர். வடக்கு, கிழக்கில் இராணுவ பிரசன்னத்தை இல்லாமல் செய்வதற்கு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவி ஏற்றதும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதையே வாக்களித்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேனவிடம் கோருகின்றனர்.

யுத்தத்துக்கு முன்னும் பின்னும் காணாமல் போனவர்களை கண்டறிவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்குரிய சூழல் ஏற்படுத்தப்படவேண்டும்.

யுத்தக் குற்றச்சாட்டின் பேரில் அரசியல் கைதிகளாக சிறைகளில் இருக்கின்ற எமது உறவுகளை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யவேண்டும். இவற்றையே வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். இந்த எதிர்பார்ப்பை மைத்திரிபால சிறிசேன நிறைவேற்றுவார் என்றும் தமிழ் மக்கள் நம்புகின்றனர்" என்றார்.

## வீதிகள் சுத்திகரிப்பு

கடந்த மாதம் பெய்த மழை காரணமாக, மட்டக்களப்பு நகரில் பாதிக்கப்பட்ட வீதிகள் துப்பரவு செய்யும் பணிகள் புதன்கிழமை (07.01.2015) மட்டக்களப்பு நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பில் அண்மையில் எற்பட்ட வெள்ளம் காரணமாக, வெள்ள நீருடன் சேர்ந்து வந்த மணல் வீதிகளில் படிந்ததால், நகருக்கு வரும் உல்லசப் பயணிகளும் பொதுமக்களும் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதனால், விபத்துக்களை தவிர்த்துக்கொள்வதற்கும் நகரின் அழகை மேமபடுத்துவதற்காகவும் வீதிகளில் படிந்த மணல்களை அகற்றி சுத்தம் செய்வதாகவும் மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்கள் தெரிவித்தனர்.

## இறால் பண்ணையாளர்களும் பாதிக்கப்பட்டனர்



இறால் பண்ணைகளில் வளர்க்கப்பட்டு அறுவடைக்கு தயாராகவிருந்த சுமார் 22,000 கிலோ இறால்கள் மழை வெள்ளத்தால் அடிபட்டு வாவியினுள் சென்றுள்ளதாகவும் இதனால், 30 இறால் பண்ணையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய நீர்வாழ் உயிரினங்கள் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மட்டக்களப்பு மாவட்ட நீரியல் உயிரினவியலாளர் எஸ்.ரவிக்குமார் தெரிவித்தார்.

அண்மையில் இந்த மாவட்டத்தில் பெய்த அடை மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இந்த நிலையில், ஈச்சந்தீவில் 25 ஏக்கரிலும் முதலைக்குடாவில் 15 ஏக்கரிலும் வட்டவானில் 20 ஏக்கரிலும் மகிழடித்தீவில் 25 ஏக்கரிலும் செய்கை பண்ணப்பட்ட இறால் பண்ணைகளுக்கு மேலாக வெள்ளம் மேவிச் சென்றதாகவும் அவர் கூறினார்.

## பல்கலைக்கழக அனுமதி

அண்மையில் வெளியாகிய க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் இருந்து மொத்தமாக 161 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்றுள்ளனர். அவர்களில் விஞ்ஞான துறையில் 55 பேரும் வர்த்தகத் துறையில் 42 பேரும் கலைத்துறையில் 64 பேரும் தகுதி பெற்றுள்ளதாக கல்லூரி அதிபர் அருட்சகோ. ஸ்ரீபன் மத்தியு தெரிவித்தார்.



அதிலும் வர்த்தகத் துறையில் 3ஏ பெற்று தமிழ் மொழிமூலம் மாவட்ட நிலையில் முதலிடம் பெற்றுள்ளார்.

## நீரில் மூழ்கி இருவர் பலி

நாசிவன்தீவு முகத்துவாரக் கடலில் நீராடிக் கொண்டிருந்த போது, நீரில் மூழ்கி இளைஞர்கள் இருவர் உயிரிழந்ததாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். மாத்தளையை வசிப்பிடமாகக் கொண்ட முஹம்மட் றிபாஸ் (வயது 23), வாழைச்சேனையை சேர்ந்த ஹயாத்து முஹம்மது ரிமாஸ் (வயது 22) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தனர். மேற்படி கடலில் செவ்வாய்க்கிழமை (06.01.2015) 7 நண்பர்களுடன் நீராடிக்கொண்டிருந்தனர். இதன்போது மேற்படி இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்ததாகவும் பொலிஸார் கூறினர்.

## வெள்ள நிவாரண உதவி



அண்மையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் ஆலயப்பணி புரிகின்றவர்களுக்கான நிவராணம் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (07.01.2015) ஆலய முன்றலில் இடம்பெற்றது. இதனை ஆலய தலைவர் வண்ணக்கர் பூ.சுரேந்திரராசா, செயலாளர் வண்ணக்கர் இ.சாந்தலிங்கம் ஆகியோர் வழங்கி வைத்தனர். இதன்போது இவ்வாலயத்தில் பணிபுரிகின்ற 30 பேருக்கு நிவாரணப் பொதி வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பீடத்தக்கது.

## முதல் தடவையாக தொழுகை மண்டபம்

மட்டக்களப்பு நகரில் முதல் தடவையாக பெண்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட தொழுகை மண்டபம் செவ்வாய்க்கிழமை (06.01.2015) மாலை திறந்துவைக்கப்பட்டது. பெண்களுக்கான வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் காத்தான்குடி நகரசபை உறுப்பினருமான சல்மா ஹம்சாவின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு நகர் ஜாமியுஸ்ஸலாம் ஜும்ஆ பள்ளிவாசல் வளாகத்தில் இந்த தொழுகை மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.



## குடிநீர் விநியோகம்



வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சுமார் 350 வீட்டுக் கிணறுகளில் வெள்ளநீர் சென்றுள்ளதாகவும் இந்தக் கிணறுகளை இறைத்து சுத்தப்படுத்த வேண்டியுள்ளதாகவும் வாகரை பிரதேச செயலாளர் எஸ்.ஆர்.ராகுலநாயகி திங்கட்கிழமை (05.01.2015) தெரிவித்தார். இது இவ்வாறிருக்க, அண்மையில் பெய்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வாகரை மக்களுக்கு தினமும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை விநியோகித்துவருவதாக முஸ்லிம் எய்ட் ஸ்ரீலங்கா கள நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் ஏ.எஸ்.எம்.அஸ்மி தெரிவித்தார். வீடுகளிலுள்ள கிணறுகளில் வெள்ளநீர் சென்றதால் மக்கள் குடிநீருக்காக சிரமப்பட்டனர். இந்த நிலையில், தமது நிறுவனம் வாகரை பிரதேச சபையுடன் இணைந்து குடிநீரை விநியோகித்துவருவதாகவும் அவர் கூறினார்.

## மாற்றத்திற்காகத் தான் வாக்களிப்பு



மாற்றத்திற்காகத்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பு வாக்களித்தார்களே யொழிய ஏமாற்றத்திற்காக அல்ல என கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா)தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாட்டின் தேசிய ஒற்றுமைக்கு தமிழப் பேசும் மக்கள் என்றும் எப்போதும் சவாலாக இருந்ததோ இருக்கப்போவதோ இல்லை மாறாக சுயநல பதவி மோகம் கொண்ட தென்னிலங்கை அரசியல் வாதிகளின் செயற்பாடே தேசிய அரசியலில் இருந்து தமிழ்ப்பேசும் மக்களை ஓதுக்கி வைத்துள்ளது என்பதற்கு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் சிறந்த எடுத்துக் காட்டாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## போலி நியமனக் கடிதம்

தேற்றாதீவு பகுதியை சேர்ந்த இளைஞர் மன்னார் மாவட்ட செயலகத்தில் போலியான நியமனக் கடிதம் வழங்கி ஒன்றரை வருடங்களாக அரச ஊழியராக கடமை புரிந்து வந்துள்ளார். இச்சம்பவம் குறித்து முறையீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் அரச நிதியை சம்பளமாக பெற்றிருப்பதுடன், ஒரு இலட்சம் ரூபாய் கடனாகவும் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசாங்கத்தில் இணைய தீர்மானமில்லை



மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய அரசாங்கத்தில் இணைந்துகொள்வதா, அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதா என்பது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார். பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்மவாறு தெரிவித்தார்.

மலைமுரசு
MALAIMURASU
தேசிய செய்திகள்

# 2015 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள்

| மாவட்டம் | அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | மைத்திரிபால பெற்ற வாக்கு % | மகிந்த ராஜபக்ஷ பெற்ற வாக்கு % |
|---|---|---|---|
| பதுளை | 514,941 | 49.21 | 49.15 |
| மொனராகலை | 284,565 | 37.45 | 61.45 |
| கொழும்பு | 1,311,694 | 55.93 | 43.4 |
| கம்பஹா | 1,357,143 | 49.83 | 49.49 |
| களுத்துறை | 760,365 | 46.46 | 52.65 |
| காலி | 684,327 | 43.37 | 55.64 |
| மாத்தறை | 520,041 | 41.24 | 57.81 |
| ஹம்பாந்தோட்டை | 389,427 | 35.93 | 63.02 |
| கேகாலை | 543,286 | 47.05 | 51.82 |
| இரத்தினபுரி | 687,740 | 43.01 | 55.74 |
| மஹநுவர | 866,901 | 54.56 | 44.23 |
| மாத்தளை | 312,675 | 47.22 | 51.41 |
| நுவரெலியா | 434,095 | 63.88 | 34.06 |
| திருகோணமலை | 197,161 | 71.84 | 26.67 |
| மட்டக்களப்பு | 259,166 | 81.62 | 16.22 |
| திகாமடுல்லை | 360,442 | 65.22 | 33.82 |
| குருணாகல் | 1,050,909 | 45.76 | 53.46 |
| புத்தளம் | 408,150 | 50.04 | 48.97 |
| அநுராதபுரம் | 529,133 | 45.44 | 53.59 |
| பொலன்னறுவை | 257,786 | 57.8 | 41.27 |
| யாழ்ப்பாணம் | 350,789 | 74.42 | 21.85 |
| வன்னி | 183,641 | 78.47 | 19.07 |

## மோடி வாழ்த்து கடிதம்

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ள மைத்திரிபால சிறிசேனவுக்கு இந்தியா வரும்படி பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ள சிறிசேனவுக்கு வாழ்த்து தெரிவித்து இன்று கடிதம் அனுப்பியுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இந்தியா வரும்படி அழைப்பு விடுத்துள்ளதுடன், இந்தியா இலங்கை உறவை மேம்படுத்த தங்களுடன் இணைந்து பணியாற்ற விருப்பம் என்றும்தெரிவித்துள்ளார்.

## அமெரிக்கா சேர்ந்தியங்கும்....

மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்படுவதற்கு அமெரிக்கா எதிர்பார்ப்பதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

## மீண்டும் சனாதிபதியாகும் எண்ணம் எனக்கில்லை

நாட்டின் அன்பான மக்களின் பொறுப்புகள் தன்னிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாவும், அதனை மிகச் சிறந்த முறையில் நிறை வேற்றுவேன் எனவும் ஜனாதிபதியாக இன்று பதவியேற்ற மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மீண்டுமொரு முறை ஜனாதிபதியாகும் எண்ணம் தனக்கு இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இன்று மாலை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் வைத்து இலங்கையின் ஆறாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் உரையாற்றிய போதே புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள்இவ்வாறு தெரிவித்தார்.

### நீதியரசர் ஸ்ரீபவன் முன்நிலையில் சனாதிபதி பதவியேற்பு



### சனாதிபதி முன்நிலையில் பிரதமர் பதவியேற்பு



## மலையக மக்கள் தாமாகவே சிந்தித்து வாக்களித்துள்ளனர்

மலையக மக்கள் அரசியல் அறிவுடன் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்திருப்பதாகவும் அதற்கு தாம் மதிப்பளிப்பதாகவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய மக்களுடன் இணைந்து, சுதந்திரமாக சிந்தித்து மலையக மக்கள் வாக்களித்துள்ளதாகவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் மகிந்த அரசாங்கத்தின் துணைப் பொருளாதார அமைச்சருமான முத்து சிவலிங்கம் பிபிசி தமிழோசையிடம் தெரிவித்தார்.

அடுத்த கட்டமாக, மலையகத்தில் தங்களின் தொழிற்சங்கத்தை மேலும் பலப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போவதாகவும் முத்து சிவலிங்கம் கூறினார்.



இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவை நிபந்தனையின்றி ஆதரித்த, சிறுபான்மை சமூகமொன்றை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான அரசியல்கட்சி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், நுவரெலியா மாவட்டத்தில் பெருவாரியான வாக்குகள் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கே அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## உகாண்டா தளபதி சரணடைந்தார்



உகாண்டா ஆயுதக் குழுவான லார்ட்ஸ் ரெசிஸ்டன்ஸ் ஆர்மியின் ஒரு மூத்த தளபதி சரணடைந்துள்ளார் என்பதை அந்நாட்டின் இராணுவம் உறுதி செய்துள்ளது.

அமெரிக்க - ஆபிரிக்கக் கூட்டுப் படைகளிடம் சரணடைந்த, டோமினிக் ஓங்வென் எனும் அந்தத் தளபதி மத்திய ஆபிரிக்கக் குடியரசில் அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறார் என உகாண்டா இராணுவத்தின் பேச்சாளர் கூறுகிறார்.

## நைஜீரிய நகரில் சிதறிக் கிடக்கும் சடலங்கள்

நைஜீரியாவின் வடக்கிழக்குப் பகுதியில் உள்ள பாகா நகரில் போக்கோ ஹராம் தீவிரவாதிகள் இரண்டாவது தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இதை அங்குள்ள உள்ளூர் அரச அதிகாரி ஒருவர் பிபிசியிடம் உறுதிப் படுத்தியுள்ளார்.

அந்த நகரின் பெரும் பகுதியை புதன்கிழமையன்று தீவிரவாதிகள் எரித்துள்ளனர் என்றும், கடந்த சனிக்கிழமை பாகா மீது நடத்தப்பட்ட முதல் தாக்குதலில் இரண்டாயிரம்பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்று தாங்கள் அஞ்சுவதாகவும் மூசா அல்ஹாஜ் புகார் குகாவா எனும் அந்த உள்ளூர் அதிகாரி கூறுகிறார்.

சனிக்கிழமையன்று போக்கோ ஹராம் தீவிரவாதிகள் இராணுவ முகாம் ஒன்றின் மீது தாக்குதலை நடத்தி அங்கிருந்த இராணுவத்தினரை அச்சத்தில் வெளியேறும்படி செய்திருந்தனர்.

அத்தாக்குதல் நடைபெற்று ஐந்து நாட்கள் கடந்த நிலையில் இன்னும் சாலைகளில் ஏராளமான சடலங்கள் இறைந்து கிடக்கின்றன என்றும், உள்ளூர் மக்கள் ஊர் திரும்பி கொல்லப்பட்டவர்களை புதைக்க முடியாத நிலையில் உள்ளனர் என்றும் குகாவா கூறுகிறார்.

பாகா நகரிலிருந்து வெளியேறிய ஆயிரக்கணக்கானவர்களில் பெரும்பாலானவர்கள் போர்னோ மாகாணத் தலைநகரான மைதுகுரிக்கும், வேறு பலர் சாட் நாட்டுக்கும் சென்றும் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

சாட் நாட்டுக்கு சென்றவர்களில் பலர் சாட் ஏரியைக் கடக்கும்போது அதில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

(பிபிசி)

## இங்கிலாந்தில் சதித்திட்டம்

பிரான்ஸ் பாணியில் இங்கிலாந்தை தாக்க அல்கொய்தா சதித்திட்டம் தீட்டியுள்ளதாக அந்நாட்டு உளவு நிறுவன தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரான்சில் நேற்று முன்தினம் பத்திரிக்கை அலுவலகம் தாக்கப்பட்டது உலக நாடுகள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இங்கிலாந்தையும் தாக்க அல்கொய்தா திட்டம் தீட்டியுள்ளதாக அந்நாட்டு உளவு நிறுவன தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து இங்கிலாந்தின் உளவு நிறுவனமான எம்ஐ5-ன் டைரக்டர் ஜெனரல் ஆன்ட்ஷரு பார்கர் கூறுகையில், சமீபகாலமாக இங்கிலாந்து பொலிஸார் மற்றும் எம்ஐ5 சேர்ந்து மூன்று தீவிரவாத தாக்குதல்களை தடுத்து நிறுத்தியுள்ளோம் என்கின்றார்.

## பிரபல சக்கர இசைக்குழு

பார்சிலோனாவில் ரோடா.ஃ.போனியோ என்ற இசைக்குழு தெருக்களில் இசை நிகழ்ச்சியை நடத்தி வருகிறது. நான்கு மீட்டர் உயரம் கொண்ட மிகப் பெரிய சக்கரத்தில், நான்கு பேர் அமர்ந்து கிடார், சாக்ஸபோன், ட்ரம்ஸ் போன்ற இசைக் கருவிகளை வாசிக்கிறார்கள். சக்கரம் மெதுவாகச் சுற்றிக்கொண்டே இருக்கிறது.

ஒருவர் மோட்டாரை இயக்க, மொத்த சக்கரமும் இடம் விட்டு இடம் நகர்ந்து செல்கிறது. பார்சிலோனாவில் இசை, நடன விழாக்களின்போது இந்த நகரும் சக்கர இசைக்குழு கண்டிப்பாக இடம்பெற்று, வீதிவீதியாக நிகழ்ச்சியை வழங்கி வருகிறது. ஆஸ்திரியா, சிலி போன்ற நாடுகளிலும் இந்தக் குழுவுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது.




## 2008இன் பின்னர் இருவருக்கு மரணதண்டனை நிறைவேற்றம்

உலகை உலுக்கிய பாகிஸ்தானின் பாடசாலைச் சிறுவர்களின் படுகொலையை அடுத்து மீண்டும் மரண தண்டனையை அமுலுக்கு கொண்டுவந்த 72 மணி நேரத்தில் இருவரை பாகிஸ்தான் உத்தியோகபூர்வமாக தூக்கிலிட்டது.

கடந்த செவ்வாய்கிழமை பெஷாவர் பாடசாலை மீது தலிபான் போராளிகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் 139 பாடசாலை சிறுவர்கள் உள்ளிட்ட 149 பேர் கொல்லப்பட்டனர். இதனை அடுத்து நாட்டுமக்களின் கடுமையான கொந்தளிப்புகளையும் அழுத்தங்களையும் காலகெடுவையும் தொடர்ந்து அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் உடனடியாக மரண தண்டனை அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. அதனைத் தொடர்ந்து Aqil என்கிற வைத்தியர் உஸ்மான், மற்றும் அர்ஷத் மெஹ்மூத் ஆகியோர் பைசலாபாத் சிறையில் தூக்கிலிடப்பட்டனர் என்பதனை மத்திய பஞ்சாப் மாகாண உள்துறை அமைச்சர் உறுதிப்படுத்தி உள்ளார்.

## பாரிய பூமி அதிர்வு அபாய எச்சரிக்கை விடுவிப்பு




நியூஸிலாந்தின் தென்தீவு பகுதியில் இன்று காலை பாரிய பூமியதிர்வு ஒன்று ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து நியூஸிலாந்து அதிகாரிகள் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த பூமியதிர்வு ரிக்டர் அளவுகோலில் 6.0 ஆக பதிவாகியுள்ளது. கிறிஸ்சேர்ச்சின் மேற்குப் பகுதியிலிருந்து சுமார் 100 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஆர்தூர் பாஸ் பகுதிக்கு அருகில் இந்த பூமியதிர்ச்சி இடம் பெற்றுள்ளது.

இந்த பூமியதிர்வில் காயமடைந்தவர்கள் பற்றிய விபரங்களோ அல்லது சேத விபரங்கள் பற்றியோ உடனடியாக தெரியவரவில்லை எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. 2011 ஆம் ஆண்டு நியூஸிலாந்தில் இடம்பெற்ற பூமியதிர்வில் 185 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## தீவிரவாத தாக்குதலாளிகள் கொல்லப்பட்டனர்

பிரான்ஸில் ஷார்லி எப்தோ சஞ்சிகை அலுவலகம் மீது தாக்குதல் நடத்தியவர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஆயுததாரிகள் இருவரும் கொல்லப்பட்டுவிட்டதாக அந்நாட்டு ஊடகத் தகவல்கள் கூறுகின்றன.

ஆயுததாரிகளால் பணயக் கைதியாக பிடித்துவைக்கப் பட்டிருந்த நபர் விடுவிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும் ஏஎ.ஃ.ப்பி செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

முன்னதாக, பாரிஸின் வடக்குப் பகுதியில் உள்ள களஞ்சிய கட்டடம் ஒன்றில் பதுங்கியிருந்த இரண்டு இஸ்லாமியவாத ஆயுததாரிகளையும் பிடிப்பதற்காக பாதுகாப்புப் படையினர், அந்தக் கட்டடத்தை முற்றுகையிட்டிருந்தனர்.

இருள் சூழ்கின்ற நேரத்தில், ஆயுதந்தரித்த தாக்குதல் அணியொன்று குறித்த கட்டடத்துக்குள் நுழைந்ததை அடுத்து, வெடிப்புச் சத்தங்களும் துப்பாக்கிச் சூட்டு சத்தங்களும் கேட்டன.

ஷார்லி எப்தோ சஞ்சிகை அலுவலகத்துக்குள் நுழைந்து, சகோதரர்களான சயித் குவாச்சி மற்றும் ஷெரி.ஃ.ப் குவாச்சி என்ற இந்த ஆயுததாரிகள் நடத்தியதாக சந்தேகிக்கப்படும் தாக்குதல்களில் 12 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## 30வது மாடியிலிருந்து குழந்தைகளுடன் தற்கொலை

சிலியின் தலைநகரான நாண்டியாகோவைச் சேர்ந்த இளம் தாயொருவர் தனது ஒன்று மற்றும் இரண்டு வயது நிரம்பிய பெண் குழந்தைகளுடன் ஒரு கட்டடத்தின் 30வது மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்துள்ளார்.

அக்குழந்தைகளின் தந்தைக்கு இன்னுமொரு பெண்ணுடன் தொடர்பு ஏற்பட்டதை அறிந்த அப்பெண் ஆத்திரமடைந்தே இக்காரியத்தைச் செய்துள்ளார். அயல் வீட்டார் இச்சம்பவம் குறித்து கருத்து தெரிவிக்கையில், அவளது கணவருக்கு ஏற்பட்ட தகாத உறவு காரணமாக இருவரும் கடுமையாக வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டிருந்தனர். ஒரு பெண்ணின் அலறல் சத்தம் கேட்ட போதும் கூட அவர்கள் சண்டை இடுகின்றனர் என நினைத்தோம். ஆனால் அவள் தன் இரு குழந்தைகளையும் கையில் பிடித்தபடி மேலிருந்து கீழே குதித்துவிட்டாள் என்றனர்.

இது குறித்து காவல்துறையினர் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## சிறைக்கைதியான தாய்

தனது ஐந்து வயது நிரம்பிய மகளை பாடசாலை விட்டு வீட்டுக்கு அழைத்து வர சென்றபோது அங்கு பணிபுரிந்த ஆசிரியர்கள் அவருடன் குழந்தையை அனுப்ப அனுமதிக்கவில்லை. இதனை அடுத்து அத்தாய் அப்பள்ளி ஆசிரியர்களுக்கு தகாத வார்த்தைகளைப் பிரயோகித்ததாகவும் கிட்டத்தட்ட 15 நிமிடங்கள் வரையில் அத்தாயை ஒரு வகுப்பறையினுள் விட்டு, தீயணைப்புப் படையினர் வரும்வரை காத்திருக்க வைத்ததாகவும் தெரிய வருகின்றது. இவ்வாறு நடந்தமைக்கான முக்கிய காரணம் அத்தாய் மது போதையில் நிதானம் இழந்து காணப்பட்டமையே ஆகம்.

அப்பள்ளிக்கு குழந்தையை சேர்த்து ஒரு மாத காலமே ஆகியுள்ள நிலையில் அத்தாய் இவ்வாறு நடந்துள்ளமை மிகவும் ருந்தத்தக்க விடயம் என அப்பள்ளி ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவல்லவோ பாசம்

சிறுகதை

– கீதா –

நந்தினிக்கு தன் கடமையை சரியாக முடித்த திருப்தியும், சந்தோசமும் ஒரு நிறைவை தந்தது. இருந்தாலும் மனதில் ஒரு வெறுமை படர்வதை அவளால் மறுக்க முடியவில்லை. தன் ஒரே மகன் சுமனுக்கும், சுதாவிற்கும் திருமணம் முடிந்து இன்றுதான் அவர்கள் தங்கள் தேனிலவிற்கு கிளம்பிச் சென்றார்கள். கல்யாண அமர்க்களத்தில் இருந்த வீடு இன்று மிகவும் அமைதியாக இருந்தது.

அதுவே நந்தினிக்கு ஒரு பயம் கலந்த வெறுமையை உணர்த்தியது. இனி தன் வாழ்க்கை பயணம் எப்படித் தொடரும் என்பதை எண்ணி சிறு கவலையும் தயக்கமும் சூழ்ந்தது. எல்லாம் கொஞ்ச நேரம்தான் பின் வழக்கம் போல் வேண்டாத சிந்தனையை ஒதுக்கி விட்டு தைரியமும் சந்தோசமுமாக வேலைக்கு புறப்படத் தயாரானாள்.

நந்தினிக்கு திருமணமான போது அவளின் கல்லூரித் தேர்வின் முடிவுகூட வெளி வரவில்லை. வங்கியில் வேலை, ஒரே பையன் தங்கைக்கும் திருமணம் முடிந்து விட்டது. அம்மா மட்டும்தான். இத்தனை விஷயங்களும் அவள் குடும்பத்திற்கு ஏற்றார் போல் இருக்க, பெற்றோர்கள் நந்தினி திருமணத்தை உடனே நடத்தி விட்டனர். வேலையில் இருந்த ஒரே அண்ணன்கூட ஒரு வருடம் போகட்டும் என்று சொன்னதை ஏற்றுக் கொள்ளவில்லை. பெரிய எதிர்பார்ப்பு இல்லாமல் நவீனுடன் திருமண பந்தத்தில் நுழைந்தாள்.

பொதுவாக இருக்கும் மாமியார், மருமகள் மாதிரி இல்லாமல், அவருடன் நட்புறவுடன் இருக்கவும் விரும்பினாள். ஆனால், நவீனின் தாய் மிகவும் சராசரி மாமியராகதான் இருந்தாள். நவீனும், தாய் சொல்லைத் தட்டாத மகனாகத்தான் இருந்தான். தாயிடம் கலந்து ஆலோசிக்காமல் எந்த வித முடிவும் எடுக்க மாட்டான். ஒரு விதத்தில் ஒத்துக் கொண்டாலும், எதற்கும் எல்லை உண்டல்லவா? தன் மனைவிக்கு செய்ய வேண்டியதில்கூட தாயின் அனுமதி இல்லாமல் செய்ய மாட்டான். அவ்வளவு ஏன், தாய் சொன்னதால்தான் குழந்தைப் பிறப்பைத் தள்ளிப் போடாமல் ஒரு வருடத்திலேயே சுமனும் பிறந்தான். இப்படி இருப்பவனிடம் தனிப்பட்ட அன்பையும், அரவணைப்பையும் எப்படி எதிர்பார்க்க முடியும்? நந்தினியின் மண வாழ்க்கை ரொம்பவும் சுவாரசியம் இல்லாமல் மிகவும் சராசரியாகத்தான் இருந்தது.

திருமண வாழ்வின் அர்த்தம் புரியும் முன்பே ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்டாள். அவளின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பிற்கு முக்கியத்துவம் இல்லாமலே வாழ்க்கை சென்றது. சிநேகபாவத்துடன் இருக்க விரும்பிய மாமியார் உறவும் அதன்படி அமையவில்லை. மாமனாரும் இல்லாததால், அவருக்கு உலகமே பிள்ளை நவீன்தான். எப்படியோ, சுமன் பிறந்தவுடன் நந்தனி கவனம் முழுவதும் அவனிடம் திரும்பியது.

ஆனால், சுமனுக்கு ஆறு வயது இருக்கும் போது நவீன் காமாலையால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கு பலன் இல்லாமல் உயிர் துறந்தான். எதிர்பார்க்காத இந்த சம்பவம் எல்லோரையும் சுனாமியாய் தாக்கியது என்றால் மிகையாகாது. அதிர்ச்சியிலிருந்து மீண்டுவர ஒரு மாதிரி நவீனின் வங்கி வேலை நந்தினிக்கு கிடைத்தது. மாமியார் துணையுடன் தனி ஆளாகவே சுமனை நல்லபடியாக வளர்த்து ஆளாக்கினாள். நவீனுடன் ரொம்பவும் அன்னோன்ய வாழ்கை இல்லாததால் என்னவோ அவனின் பிரிவு, நந்தினியை அதிகம் பாதிக்கவில்லை எளிதில் மீண்டு வரவும் முடிந்தது.

இதோ இப்போ சுமனுக்கும் நல்லபடியாக திருமணம் முடிந்து விட்டது. மாமியார்தான் இருந்து பார்க்க கொடுப்பனை இல்லாமல், போன வருடம் நவீனிடம் போய் சேர்ந்தாள். சுமனும், சுதாவும் தேனிலவு சென்று ஒரு வாரம் முடிந்து இன்று ஊர் திரும்புகிறார்கள். இவர்கள் திருமணம் நிச்சயம் ஆன பின்பு சுதா அடிக்கடி வீட்டிற்கு வந்து நந்தினி உடன் நன்றாக பழக ஆரம்பித்தாள். அப்போதே நந்தினிக்கு தன் மாமியாருடன் இருக்க முடியாத சிநேக உறவை மருமகளுடன் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தாள். எப்பேர்பட்ட நல்ல மாமியாராக இருந்தாலும் அம்மாவின் இடத்தை பிடிக்க முடியாது. இதை அறிந்த நந்தினி, சுதாவிற்கு ஒரு நல்ல சிநேகிதியாக இருக்க விரும்பினாள். சுதாவும் அதே கோணத்தில் இருந்ததால், சந்தோசப்பட்டாள்.

தேனிலவு முடிந்து, ஊரிலிருந்து வந்த சுதா ரொம்பவும் சந்தோசமாக நந்தினியோடு எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டாள். சுமன் அவன் அப்பாவைப் போல் இல்லாமல், சுதாவிடம் அன்னோன்யமாக இருப்பதைப் பார்த்து மிகவும் மகிழ்ந்தாள். கொஞ்ச நாள் எல்லாம் சந்தோசமாக அவரவர் வேலையும் பார்த்துக் கொண்டு வாழ்க்கை நல்லபடியாக போனது.

அன்று சுமனும், சுதாவும் வேலை முடிந்து வரும் போது மிகவும் சந்தோசமாக இருந்தனர். அலுவலகத்தில் அவனை நான்கு வருடம் வெளிநாடு அனுப்பப் போவது பற்றிக் கேள்விப்பட்ட நந்தினி எல்லையில்லா மகிழ்ச்சிக் கொண்டாள். இருந்தாலும் மீண்டும் தனிமை வாழ்வா என்று நினைத்துக் கலங்கினாள்.

காலைக் குளியலை முடித்து நந்தினி வெளியே வந்தபோது, சுமனும், சுதாவும் தீவிரமாக எதையோ விவாதித்துக் கொண்டிருந்தனர். இவளைப் பார்த்ததும் சுதாரித்துக் கொண்டு சாதாரணமாக பேச முயற்சித்தனர். சரி அவர்கள் விசயத்தில் தலையிடுவது அவ்வளவு சரியில்லை என்று நினைத்து தன் வேலையைக் கவனிக்கச் சென்றாள்.

ஆனால் வரும் நாட்களில் இதுவே தொடர்ந்தது. கூடிக் கூடிப் பேசுவதும், விவாதம் பண்ணுவதும், தன் தலையைக் கண்டதும் அமைதியாவதும் நந்தினிக்கு ஒரு கலகத்தை உண்டு பண்ணியது. வெளி நாடு போகும் வேளையில் எந்தப் பிரச்சினையும் வரக் கூடாது என்று வேண்டினாள்.

அன்று விடுமுறை தினமானதால் எல்லோரும் நிதானமாக வேலைகளை முடித்து விட்டு, எப்போதும் போல் பொதுவான விசயங்களைப் பேசிக் கொண்டிருந்தனர். சுதா, சுமனிடம் ஜாடையாக கேட்க, அவனும் தலை அசைப்பதை நந்தினி கவனித்தாள். சுதாவும் தன்னை தயார் செய்துக் கொண்டு நந்தினியிடம், “அம்மா, நாங்கள் உங்களிடம் ஒரு முக்கியமான விசயம் பற்றிப் பேசவேண்டும். கோவப்படாமல், தப்பாக நினைக்காமல் பொறுமையாக முழுவதையும் கேட்க வேண்டும். இந்த வேளையில் மாமாவும் இருந்தால் நல்லது என்று அவரையும் அழைத்திருக்கோம்.” அவள் சொல்லுவதற்கும் மாமா வருவதற்கும் சரியாக இருந்தது.


நந்தினிக்கு விசயம் ரொம்ப தீவிரமோ, என்னவாக இருக்கும் என்று புரியாமல் கலங்கினாள். இருந்தும் கேட்கத் தயார்படுத்தி கொண்டாள்.

சுதா “அம்மா, நிதானமாக யோசித்து நீங்கள் சொல்லும் பதிலில்தான் நாங்கள் வெளிநாடு போவது பற்றி முடிவு எடுப்போம்.” நந்தினிக்கு ஒன்றும் புரியவில்லை. சுதா, “அம்மா நாங்கள் போனவுடன் மீண்டும் நீங்கள் தனிமையில் தள்ளப்படுவதை எங்களால் பார்க்க முடியாது. இத்தனை நாள் வாழ்வும், பிறருக்காகவும், சொந்த விருப்பு வெறுப்பை மனதில் புதைத்துக் கொண்டும் காலம் கடத்தி ஆகி விட்டது. இனிமேலாவது உங்கள் சுகத் துக்கங்களை பகிர்ந்துகொள்ளவும், கூடவே இருந்து தேவையும் புரிந்து தோழமையுடன் இருக்க ஒரு துணை அவசியம் எங்கள் இருவருக்குமே நீங்கள் இப்படித் தனியாகவே மீதி காலத்தையும் கழிப்பதில் உடன்பாடு இல்லை. உங்கள் மனதிற்கும், குணத்திற்கும் ஏற்றார் போல் நல்ல துணையுடன் நிம்மதியாக வாழ எல்லாத் தகுதியும் இருக்கு. நாற்பதுக்குப் பிறகுதான் ஒருவருக்கொருவர் அனுசரணையாக இருக்கும்படியான துணை இன்னும் தேவை. எங்களுக்கு உங்கள் பேரில் உண்மையான அன்பும், அக்கறையும் இருப்பதால்தான் இவ்வளவு சொல்கிறோம். இதற்கு நீங்கள் கட்டாயம் சம்மதிக்க வேண்டும். உங்களுக்கு என்று ஒருவர் இருந்தால், எங்களாலும் சந்தோசமாகவும், நிம்மதியாகவும் வெளி நாடு செல்ல முடியும்.” என்றாள்.

நந்தினிக்கு உணர்ச்சி மிகுதியால் பேச்சே வரவில்லை. தன் மேல் அவர்களுக்கு உள்ள அக்கறையைக் கண்டு வியந்தாள். இப்பேர்பட்ட மருமகளையும், மகனையும் பெற கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று நினைத்தாள். அவளின் அண்ணனுக்கும் ச்சே! நமக்கு ஏன் இந்த யோசனைத் தோன்றவில்லை என்று வெட்கினான். வயதில் சிறியவர்களாக இருந்தாலும் எவ்வளவு உயர்ந்த சிந்தனை என்று பெருமைப்பட்டார். நந்தினியிடம், “இப்படிப்பட்ட குழந்தைகளை அடைந்ததிற்கு நீ உண்மையிலே பெருமைப்பட வேண்டும். அவர்கள் சொல்வது முற்றிலும் உண்மை. இனி உன் வாழ்கையை அர்த்தம் உள்ளதாகவும், மகிழ்ச்சியாகவும் அமைத்து கொள்வது உன் கையில்தான் உள்ளது.” என்றார்.

நந்தினிக்கு மனதில் சொல்ல முடியாத பயம், கலக்கம் சந்தோசம் எல்லாம் போட்டிப் போட்டது. யோசித்து சொல்ல அவகாசம் கேட்டாள். கண்டிப்பாகத் தன்னையும், குழந்தைகளின் எதிர்காலத்தையும் மனதில் கொண்டு நல்ல முடிவைத்தான் எடுப்பாள் என்று நம்புவோம்.



எதிர்வரும் தைத்திருநாளை
முன்னிட்டு
உங்கள் மலைமுரசில்
புதிய தொடர்கதை ஆரம்பம்

கவிஞர்.வி.மைக்கல் கொலினின்

வீணையடி நீ எனக்கு ...

(கிழக்குப் பல்கலைக்கழக வாழ்வியலை மையம் கொண்டு சமகால தமிழர் பேசும் உன்னத காதல் காவியம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமுரசு



## மனம் துடிக்கும்

– ஜீவன் –

நிலவு பிடிக்கும்
நிலவெறிக்கும் நாளில் வரும் – உன்
நினைவு பிடிக்கும்
நினைவுகளில் வந்தொலிக்கும்
கொலுசு பிடிக்கும்
கொலுசுகளைக் கூட்டிவரும் - உன்
பாதங்கள் நடந்துபோன
பாதைபிடிக்கும்- நீ
கடந்துபோன பின்னும் என்
சிந்தைவிட்டகலா உன்
சிரித்த முகம் பிடிக்கும்

காற்றுக் கலைத்துவிளையாடும் - உன்
காதோரக் கூந்தல் பிடிக்கும்
கதைகள் சொல்லி இடையில்
'கடி'க்கையில் சிவக்கும் - உன்
கன்னம் பிடிக்கும்

கவிதைசொன்ன வேளைகளில் - நீ
கண்ணிமைக்காதிருந்த
கணங்கள் பிடிக்கும்
திடீரெனக் கண்டதில்
சிந்தை தடுமாறிப் பின் நீ
சிரிக்க முன்சிரித்த
வளையல் பிடிக்கும்

கைகள் பேசிய
மொழி பிடிக்கும்
கண்கள் சொல்லிய
கவி பிடிக்கும்
தென்றல் திருடிவரும் உன்
மணம் பிடிக்கும்
திருமணம் முடித்திடுவென்று என்
மனம் துடிக்கும்.

## புதுமை படைப்போம்

மதியைக் கெடுக்கும்
மதுவை வெறுத்து
புதுமை படைப்போம்!

மனதைக் கெடுக்கும்
ஆசையை அடக்கி
மதியினை வளர்ப்போம்!

சுத்தத்தை கெடுக்கும்
அசுத்தத்தைக் கழைந்து
சுகத்தைக் காண்போம்!

கசடறக் கற்று உயர்
கல்வியை பெற்று
சாதனை படைப்போம்!


இனிய செந்தமிழில்
இயல் இசை நாடகம்
எழுதிக் குவிப்போம்!

கவிக்குயிலன்,
சேனையூர்

## சுனாமி நினைவு

## உண்டு

தாமரைத் தீவான்
சூச்சந்தீவு, கிண்ணியா.



பாழ்படுத்தும் இயற்கையால்
படைப்பு மோசம் ஆனதால்
கேள்விக்குறியும் ஆனதே,
கேடு கெட்ட வாழ்க்கையே!

நிலநடுக்கம் எப்பவோ?
நீர்கிளம்பல் எப்பவோ?
கலக்கச் சேதி எப்பவோ?
காற்று வேகம் எப்பவோ?

முன்னிருட்டு வேளையோ?
மூச்சயர்ந்த நேரமோ?
பின்னிருட்டுச் சாமமோ?
பேச்சில் உண்மை தேறுமோ?

உண்டுடுத்துத் திரியினும்,
உறங்கிமூச்சிழுப்பினும்
உண்டு என்ற எண்ணமே
உளத்திருத்திக்கிடப்பமே!

## இருவர்

காளி கோவில்
திருவிழாவிற்கு

முற்போக்காளர் முன்னுக்கும்
பிற்போக்காளர் பின்னுக்கும்

துணைவி மாருடன்
துணைக்கு போகின்றார்கள்

முன்னவர் துணைவியிடம்
நகை நட்டு வெறுமை ..

பின்னவர் துணைவியிடம்
நகை மாளிகையே ...

முற்போக்கும் பிற்போக்கும்
கோவிலுக்கு போகின்றது
முன்னுக்கும் பின்னுக்குமாய்

திருமலை சுந்தா

## அழிவற்ற....

உன் நினைவுகளிலிருந்து
என் எண்ணங்களை விலக்கி
நீண்ட தூர நிலவில்
புதைத்துக் கொண்டேன்

நிலவின் நெஞ்சிலும்
கறுப்புக்கறுப்பாய்
அதன் காதலின் நினைவுகள்


எங்கு புதைப்பேன்
உன் நினைவுகளை - விலக்க
என் எண்ணங்களை?

மாயன்
மலைமுரசு ஆசிரியர்



வரலாற்றுப் பக்கம்

# திருஞானசம்பந்தரின் தமிழ் பக்தி இயக்கத்தில் திருக்கோணேஸ்வரம்





தமிழ் இலக்கிய வரலாற்றில் "பல்லவர் கால பக்தி இயக்கங்கள்" பரந்துபட்ட மக்கள் இயக்கமாக விபரிக்கப்படுகிறது. இவ்வியக்கம் சைவம், வைணவம் என்னும் இருபிரதான கிளைகளாக ஓங்கி அக்காலப்பகுதியில் தமிழர்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த சமண, பௌத்த சமயங்களுக்கு எதிராகச் செயற்பட்டு அவற்றினைத் தோற்கடித்தது.

கிறிஸ்துவுக்கு சற்று முற்பட்ட காலப்பகுதியில் தமிழகத்தின் தொன்மைச் சமயங்களான சைவமும்,வைணவமும் ஏனைய சமயங்களுக்கு எதிராகத் தொடங்கிய தத்துவப் போராட்டமே பக்தி இயக்கத்தின் ஆரம்பமாகும். எனினும் அவ்வியக்கம் முழுவீச்சில் எழுச்சிபெற்றது கி.பி.6 ஆம் நூற்றாண்டில்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் தமிழகத்தில் பல்லவ மன்னர்களின் ஆட்சி நிலைபெற்றிருந்தது. கி.பி.600 முதல் கி.பி.900 வரையிலான இக்காலப்பகுதியில் பக்தி இயக்கங்களை உருப்பெறச் செய்தவர்கள் நாயன்மார்களும், ஆழ்வார்களுமாவர்.

நாயன்மார்களும், ஆழ்வார்களும் தம்சமயக் கொள்கைகளை எல்லோரும் விளங்கக்கூடிய வகையில் இனிய தமிழில் பண்ணிசைத்துப் பாடல்களாகப் பாடினார்கள். இவ்வாறு இசைத்தமிழால் இறைவனைப் பாடி தமிழர்களின் சமயத்தினை மீழ்எழுச்சி செய்வதற்கான போராட்டத்தினை முதலில் தொடங்கி வைத்தவர் ஒரு பெண் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. அவர் தமிழுக்கு "அந்தாதி" என்னும் இலக்கண முறையை அறிமுகம் செய்த "காரைக்கால் அம்மையார்" ஆவர். இவருடைய பதிகங்களின் முறையைப் பின்பற்றியே பின்னாட்களில் தேவாரங்கள் இயற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

காரைக்கால் அம்மையாருடன், திருமூலரும், முதல் ஆழ்வார்களும் பக்தி இயக்கத்தினை 6ஆம் நூற்றாண்டில் தொடங்கி வைத்தவர்களாகக் கொள்ளப்படுகின்றனர். இவர்களைத் தொடர்ந்து கி.பி 7ஆம் நூற்றாண்டில் சமய எழுச்சிக்கான போராட்டத்தினை பரந்துபட்ட மக்கள் போராட்டமாக்கிய பெருமை திருநாவுக்கரசரையும், திருஞானசம்பந்தரையும் சாரும். இவர்கள் சைவ பக்தி இயக்கத்தின் தலைமையை ஏற்று தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் செய்து தமிழிசை மூலம் சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினர்.

இவ்விருவரின் பின்னால் காரைக்கால் அம்மையார் தொடங்கி வைத்த பணியினை திலகவதியார், மங்கையற்கரசியார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசகர் மற்றும் ஆழ்வார்கள் தொடர்ந்து வழிநடத்திச் சென்றனர். இதனால் அதுவரை காலமும் அரசர்களையும், செல்வந்தர்களையும் பாடுவதற்குப் பயன்பட்ட பாடல்கள் தமிழ் கடவுளைப் பாடுவதற்கு மட்டுமே இனிப் பயன்பட வேண்டும் என்ற கொள்கை வளர்ந்தது. சாதிமுறை வலுவாக நிலவிய அந்தக்காலத்தில் அனைத்து மக்களும் சமம், இறையடியார்கள் அனைவரும் வணங்கத்தக்கவர்கள் போன்ற சீர்திருத்தக் கருத்துக்கள் வலிமை பெற்றன.

கற்றவர்களுக்கு மட்டுமே உரிமையாக்கப்பட்டிருந்த இலக்கியங்கள் எல்லாம் மக்கள் இலக்கியங்களாக மாற்றம் பெற்றன. நாயன்மார்களும், ஆழ்வார்களும் பேச்சு வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களை அவர்களது பாடல்களில் உயிர்த்துடிப்புடன் கையாண்டனர். அத்துடன் நாட்டார் மரபுகளையும் அவர்கள் பயன்படுத்தினர். இவற்றுடன் இனிய இசையும் இணைந்து கொண்டதால் அவை இலகுவாக மக்களைச் சென்றடைவது சாத்தியமாயிற்று. இவர்கள் தமது பக்தி இலக்கியத்தில் தமிழ் மொழியை தெய்வமொழியாக உணர்ச்சிப் பெருக்குடன் பாடும் புதிய பண்பையும் உருவாக்கினர்.

இத்தகைய பின்னணியிலேயே திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரின் பக்தி இயக்கப்பணிகள் நோக்கத்தக்கது. தமிழ்ப்பக்தி இயக்க வரலாற்றில் தூர சிந்தனையுடன், மிகவும் திட்டமிட்ட முறையில் தனது போராட்டத்தை மக்கள் மயப்படுத்தி வழி நடத்திச் சென்றவர் சமய குரவர்களுள் முதல்வராகக் கருதப்படும் திருஞானசம்பந்தர். அதனால்தான் பெரிய புராணத்தைப் பாடிய சேக்கிழார் சுவாமிகள் தமது நூலில் பெரும்பகுதியை சம்பந்தருக்கு ஒதுக்கிச் சிறப்பித்திருக்கிறார். 4286 செய்யுள்களைக் கொண்ட பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தரின் வரலாறு மட்டும் 1256 செய்யுள்களில் அமைந்துள்ளது அவரின் சிறப்பினை நமக்கு உணர்த்துகிறது.

பெரியபுராணத்தில் பிள்ளையாகிய திருஞானசம்பந்தருக்கு கொடுக்கப்பட்ட இடத்தினைக் கொண்டு "பிள்ளைபாதி, புராணம்பாதி" என அழைக்கும் வழக்கம் உருவானதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தொடரும்.....

வைத்திய கலாநிதி
த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவாலுடைய 100 நாட்கள்

**சகல** நிறைவெற்று அதிகாரம் கொண்ட ஆறாவது சனாதிபதியாக மைத்திரிபால ஸ்ரீசேன பதவிப்பிரமாணம் செய்துள்ளார்.

அவர் இலங்கை மக்களின் செல்லுபடியான வாக்குகளில் அறுபது விழுக்காடுகளுக்கு மேல் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டவராக உள்ளார்.

அறுபது விழுக்காடுகளுக்கு மேல் அவருக்கு மக்கள் வாக்களித்ததன் காரணம் அவருடைய தேர்தல் விஞ்ஞாபனமான நூறு நாள் வேலைத்திட்டமே. இந் நூறு நாள் வேலைத்திட்டத்தின் படி இலங்கை இன்றில் இருந்து சரியாகத் தொன்னூற்று ஒன்பதாவது நாளில் மிகவும் மாற்றம் பெற்றதோர் நாடாக உருவாகிவிடும் என்ற தோற்றப்பாட்டை அவர் வெற்றிகரமாக மக்களின் மனங்களில் உருவாக்கியுள்ளார்.

அவருடன் இந்நூறு நாள் வேலைத்திட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சியின் அதிருப்தியாளர்கள் ஆகியோர் இணைந்து உருவாக்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூறு நாள் வேலைத்திட்டமானது எவ்வாறு மக்கள் மனங்களில் இடம்பிடித்தது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியது முதற் கண் முக்கியமானது.

அதற்குப் பெரும்பங்காற்றியவர் முன்னாள் சனாதிபதி மகிந்த ராசபக்சவே. புதிய சனாதிபதியின் நூறுநாள் வேலைத்திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பெரும்பாலான விடயங்கள்.... அதாவது அடுத்துவரும் நூறுநாட்களுக்குள் செய்து முடிக்கப்படவேண்டிய விடயங்கள் எனக் குறிப்பிடப்பட்டிருப்பது மகிந்தவின் ஆட்சியில் காணப்பட்ட பலவீனங்களே.

வெற்றி பெற வேண்டுமாயின் எதிரியின் பலவீனங்களை (Weakness) முதல் அறிந்துகொண்டு அவற்றைத் தமக்குப் பலமாக (Strength) எண்ணாமல் வாய்ப்பாக (Opportunity) மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது மிக அடிப்படையான கருதுகோள்.

இந்த அடிப்படையான கருதுகோளிளை மிக அழகாக நூறுநாள் வேலைத்திட்டமாக எதிரணி வடிவமைத்த போது அப்போதைய சனாதிபதி மகிந்த ராசபக்சவின் தோல்வியின் முதல் ஒலி எழுப்பப்பட்டது. இதனை உறுதியாக்கும் முகமாக அன்றைய காலத்தில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட முதலில் ஒரு திகதியைக் குறித்திருந்த மகிந்த ராசபக்ச, நூறுநாள் வேலைத்திட்டம் வெளியிடப்பட்ட போது அதற்கேற்பத் தனது விஞ்ஞாபனத்தை உடனடியாக மாற்றியமைக்க வேண்டிய தேவை எழுந்ததை அடுத்து விஞ்ஞாபனம் வெளியிடும் திகதியில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியிருந்தார்.

எதிரணியின் பலமாக வெளிப்பட்ட அந்த நூறுநாள் வேலைத்திட்டத்தைப் பலவீனமாக்க அவர் முயற்சித்தாரேயொழிய தனது விஞ்ஞாபனத்தில் அவர் அந்நூறுநாள் வேலைத்திட்டத்தைத் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தத் தவறியிருந்தார்.

ஆனால் இப்போது ஆட்சிக் கட்டில் ஏறியுள்ள புதிய சனாதிபதிக்கு அந்த நூறுநாள் வேலைத்திட்டமானது ஒரு சவால் மிக்கதொன்றாக மாறியுள்ளது என்பது மிகையாகாது.

ஏனெனில் தனது தேர்தல் பரப்புரைகளில் மகிந்த ராசபக்ச, நூறுநாள் வேலைத்திட்டத்தை பலவீனமாக்க முயற்சி செய்து தோல்வி கண்டுள்ள அவர் இனி புதிய சனாதிபதியினால் அந்த நூறுநாள் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு அச்சுறுத்தலாக இருக்கப் போகின்றார் என்பதே இச் செயற்பாட்டைச் சவால் மிக்கதொன்றாக மாற்றப் போகின்றது.

இந்தத் தேர்தல் யுத்தம் மிகத் தெழிவாகவொன்றை அனைவருக்கும் வெளிப்படுத்தியுள்ளது.

அதாவது மகிந்த ராசபக்சவின் வாக்கு வங்கியானது இந்தத் தேர்தலில் பெருமளவு மாற்றம் எதனையும் சந்திக்காத நிலையிலேயே அவர் தோல்வியடைந்துள்ளார். அதாவது 2010ம் ஆண்டின் தேர்தல்களில் அவர் பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையானது அறுபது லட்சத்துப் பதினையாயிரத்தித் தொளாயிரத்து முப்பத்தி நாலாகவும் (6,015,934) தற்போதைய தேர்தலில் அவர் பெற்ற வாக்குகள் ஐம்பத்தியேழு லட்சத்து அறுபத்தியெட்டாயிரத்துத் தொன்னுஸறு வாக்குகளாக உள்ளது.(5,768,090). அதன்படி அவரது வாக்கு வங்கி நிலையாக இருக்க, அவருடன் 2010ல் கூட்டுச் சேர்ந்தவர்கள் 2014ல் வெயியேறியதால் ஏற்பட்டுள்ள சரிவாக வெறும் மூன்று லட்சத்துச் சொச்ச வாக்குகளை குறிக்கலாம்.

ஆனால் பொது எதிரணியானது பல கட்சிகளின் கூட்டாக இருந்ததுடன் முக்கியமாக ஐக்கிய தேசியக் கட்சியின் மொத்த வாக்கு வங்கியையும், தமிழத் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் வாக்கு வங்கிகளையும் கொண்டே வெற்றியடைந்துள்ளது.

அதாவது தனியொரு மனிதனுக்கு எதிராக பலர் தொடுத்த போராலேயே இவ் வெற்றி அனுபவிக்கப்பட்டுள்ளது.

எனவே நூறுகாள் வேலைத்திட்டத்தில் மிகப் பெரும் சவாலாக இருக்கப்போவது மகிந்த ராசபக்சவும் அவருக்குரிய மக்களின் செல்வாக்குமே.

அதனைத் தகர்த்து எறிந்து முன்செல்ல வேண்டுமாயின் பெரும் அரசியல் தந்திரோபாயமொன்றினைப் பொது எதிரணி பின்பற்ற வேண்டிய தேவை முன்நிற்கின்றது.

பொது எதிரணியில் இணைந்துள்ள கட்சிகளுக்கிடையே முதலில் ஒற்றுமைப்பட்ட பண்பை உருவாக்க வேண்டிய கடப்பாடு உள்ளது.

இவ்வாறு பொது எதிரணிக் கட்சிகளுக்கிடையே ஒற்றுமையை உருவாக்க முயற்சிக்கும் போது எழப் போகின்ற மிகப் பெரும் இடர்ப்பாடு முஸ்லிம் கட்சிகளின் சிறுபான்மை அரசியல் நோக்கிய நகர்வுகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய அரசியல் நோக்கிய நகர்வுகளுமே.

ஒற்றுமையை உருவாக்க முயற்சிக்கும் போது முஸ்லிம் கட்சிகளின் பேரம் பெரும்பாலும் அமைச்சுப் பதவிகளும் அவை சார் நலன்களுமாகவே முன்நிலைப்படும்.

இலங்கையின் வரலாற்றில் இதுகால வரையிலும் அவ்வாறான குறுங்கால நன்மைகளை இலக்காகக் கொண்டு முஸ்லிம் கட்சிகள் செயற்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. என்றாலும் அண்மையில் அவர்களால் முஸ்லிம் நிர்வாக அலகொன்றைக் கிழக்கில் உருவாக்க வெளிப்படையாகவும் திரைமறைவிலும் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் அவர்களும் தமக்கானதொரு தேசிய அரசியல் நகர்வை முன்னெடுக்கத் தலைப்படுகின்றனரோ என்ற தோற்றப்பாட்டை உருவாக்கியிருந்தது.

எனினும் அவ்வாறானதொரு சிந்தனையானது அடிப்படைகள் எதுவுமற்ற நிலையில் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டு அடி மட்டத்தில் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

**மக்கள் வாழ்க்கைத் தரத்தை சனநாயக வழிக்குக் கொண்டு வந்து சமூகப் பொளாதார மறுசீரமைப்புக் கொண்ட சமூகம்**

**-நூறு நாள் வேலைத்திட்டம் -**



ஆனால் தமிழர்களின் மிக் முக்கிய தலைமைத்துவக் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ தனது தேசிய அரசியல் நிலைப்பாட்டில் சிறிதும் பிசகாதிருப்பதை தேர்தலுக்கு முன்னரே வெளிப்படுத்தியிருந்தது.

தாயகம், தேசியம், சுயநிர்ணயம் ஆகிய தேசிய அரசியல் நிலைப்பாடுகளுக்காகக் குறுங்கால நன்மைகளைப் பெற்றுத்தரும் அரசியல் அமைச்சுப் பதவிகளைத் தாம் ஏற்கப் போவதில்லை என தமிழத் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சுமந்திரன் கருத்தறிவித்திருந்தார்.

எனவே முஸ்லிம் கட்சிகளை, அரசியற் பதவிகள் ஊடாக ஒற்றுமைக் கோட்டில் நிலைப்படுத்த எதிரணியினருக்கு இருக்கும் சந்தர்ப்பம் போல தமிழ் தேசியக் கூட்டமைப்பை அவ்வொற்றுமைக் கோட்டிற்கு இழுத்துவரும் வாய்ப்பு எதிரணிக்கு ஏற்படப் போவதில்லை.

அவ்வாறாயின் தொ்தலுக்கு முன்னர் எவ்வித உடன்பாடுகளையும் யாருடனும் செய்துகொள்ளவில்லை எனத் தெரிவித்திருந்த பொது எதிரணி, தனது ஆட்சியைத் தக்க வைப்பதற்காக உடன்பாடுகளை உருவாக்க வேண்டிய தேவை எழுகின்றது. அவ்வாறானதொரு உடன்பாட்டை எட்டினாலொழிய நூறுநாள் வேலைத்திட்டமானது சாத்தியமாய் இருக்கப் போவதில்லை.

எனினும் இங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படும் உடன்பாடானது பொது எதிரணியின் கடும்போக்குவாதிகளான ஜாதிக ஹெல உறுமய மற்றும் சரத் பொன்சேகா ஆகியோரின் உள்ளக எதிர்ப்பலைகளை எதிர்கொள்ள வேண்டியிருப்பதுடன், மகிந்த தலைமையிலான உறுதியானதொரு எதிரமைப்பின் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.


எனவே நூறு நாள் வேலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மக்கள் நலன்சார் வேலைத் திட்டங்களுக்கு ஆதரவை புதிய அரசு பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கலாம். ஆனால் அரசியலமைப்புத் திருத்தம், புதிய சட்டமூலங்களின் உருவாக்கம், சர்வ கட்சி அமைச்சரவை மற்றும் தேசிய ஆலோசனைச் சபை போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளில் பெரும் சவாலை அடுத்துவரும் நூறு நாட்களின் பொது எதிரணியும், புதிய சனாதிபதியும் எதிர்கொள்ள வேண்டும் என்பதே உண்மை!

**— வெட்டியான் —**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

## MOBILE



ஐ போனில் இயங்கும் ஸ்மார்ட் பேனா என்ற புதிய தொழில்நுட்பம் விரைவில் சந்தைப்படுத்தப்பட உள்ளது.

இந்த ஸ்மார்ட் பேனா ஐபோன் மூலம் இணைக்கப்பட்டு பேப்பரிலோ அல்லது ஏதாவது ஒரு பொருளில் மீது எழுதினால் அது அப்படியே ஐ போன் திரையில் பிரதிபலிக்கும்.

இதற்கான அப்ளிகேசனை ஐபோனில் நிறுவும் போது பேனாவின் அசைவை உள்வாங்கி ஐபோன் அந்த எழுத்துக்களை அப்படியே காட்சிபடுத்தும். இந்த புதிய தொழிநுட்பம் சந்தைக்கு விரைவில் வரவிருக்கிறது.



மைக்ரோசொப்ட் நிறுவனம் Microsoft Nokia 215 எனும் புதிய கைப்பேசி ஒன்றினை குறைந்த விலையில் அறிமுகம் செய்கின்றது. 29 டொலர்களே ஆன இக்கைப்பேசியில் 2.4 அங்குல அளவு, 320 x 240 Pixel Resolution உடைய திரை, 0.3 மெகாபிக்சல்களை உடைய கமெரா மற்றும் 8MB சேமிப்பு நினைவகம் என்பன தரப்பட்டுள்ளன. இக்கைப்பேசியில் பேஸ்புக் மற்றும் மெசெஞ்சர்களுக்கான அப்பிளிக்கேஷன்கள் நிறுவப்பட்டுள்ளமை விஷேட அம்சமாகும்.

டிவிட்டரில் கணக்கை பயன்படுத்தாத போது தவற விட்ட முக்கிய டிவிட்டுகளை பார்ப்பதற்கு டிவிட்டர் புதிய அம்சத்தை அறிமுகப்படுத்தவுள்ளது.

while you are away என இதற்கு பெயரிடப்பட்டிருக்கும் புதிய அம்சம் மூலம் பயனர்கள் ஆன்லைனில் இல்லாத சமயத்தில், அவர் பின் தொடர்பவர்கள் பகிர்ந்த முக்கியமான டிவிட்டுகளின் தொகுப்பை, அடுத்த முறை அவர் ஆன்லைனில் வரும்போது ஒரு தொகுப்பாக வழங்கப்படும்.

## INFOMATION TECHNOLOGY



சோனி நிறுவனம் 4K Ultra HD தொழில் நுட்பத்தினைக் கொண்ட வீடியோ கமெராவினை CES நிகழ்வில் அறிமுகம் செய்துள்ளது. Sony 4K FDR-X1000V எனப்படும் இக்கமெராவானது செக்கனுக்கு 30 பிரேம்கள் எனும் வேகத்தில் 3840 2160 Pixel Resolutionm உடைய வீடியோக்களை பதிவு செய்யக்கூடியதாக இருக்கின்றது. மேலும் 170 டிகிரியில் காட்சிகளை பதிவு செய்யக்கூடியதாகவும் இது காணப்படுகிறது.



Gogoro எனும் இலத்திரனியல் ஸ்கூட்டர் ஒன்று CES (Consumer Electronics Show) நிகழ்வில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. முற்றிலும் மின்கலத்தின் உதவியுடன் இயங்கும் இந்த ஸ்கூட்டர் மணிக்கு 95 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கக்கூடியதாக இருப்பதுடன் 4.2 செக்கன்களில் 50km/h எனும் வேகத்தினை அடையக்கூடியதாகவும் இருக்கின்றது.




ஸ்மார்ட் கடிகார உற்பத்தியில் Garmin எனும் நிறுவனமும் கால்தடம் பதித்துள்ளது. இந் நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ள Garmin Vivoactive கடிகாரமானது GPS தொழில்நுட்பத்தினைக் கொண்டுள்ளதுடன், விளையாட்டுத் துறை சார்ந்த விருத்திகளுக்கான அப்பிளிக்கேஷன் களையும் உள்ளடக்கியுள்ளது.




கறுப்பு மற்றும் வெள்ளை என இரு நிறங்களில் கிடைக்கக்கூடிய இக்கடிகாரத்தின் விலை 249.99 டொலர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் இதயத்துடிப்பு வீதத்தினை அறிந்து கொள்ளும் வசதியினையும் உள்ளடக்கிய கடிகாரம் 299.99 டொலர்களாகும்.

## OTHER




செல்போன் அலைவரிசை கிடைக்காத இடங்களிலும் மெசேஜ் மூலம் தொடர்பு கொள்ள வந்துவிட்டது கோ டென்னா என்கிற சிறிய கருவி.

ஸ்மார்ட் போன் ப்ளூடூத் இணைப்பின் வழியாக இந்த கருவி இயங்கும். மிக குறைந்த ரேடியோ அலைவரிசையிலும் இந்த கருவி இயங்குகிறது. ஒரு போனிலிருந்து அனுப்பும் செய்தியை இந்த கருவி வாங்கி எதிர்முனையில் இருக்கும் இன்னொரு கோ டென்னாவுக்கு அனுப்பும். அதன் மூலம் பெறப்படும் செய்தி தேவையானவர்களுக்கு சென்று சேரும். நெட்வொர்க் இல்லாத இடங்களிலும் 2 முதல் 6 கிலோ மீட்டர்கள் வரை இந்த கருவி செயல்படும்.



ஓர் இடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்கு சிறிய அளவிலான பொருட்களைத் தூக்கிச் செல்லக்கூடிய Quadcopter இல் உலகின் வேகம் கூடிய Quadcopter உருவாக்கப்பட்டுள்ளது. X PlusOne என பெயரிடப்பட்டுள்ள இச்சாதனம் மணிக்கு 100 கிலோமீற்றர்கள் வேகத்தில் பயணம் செய்யக்கூடியது. மேலும் இந்த வருடத்திற்கான CES (Consumer Electronics Show) நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள இந்த Quadcopter இன் விலை 479 அமெரிக்க டொலர்கள் ஆகும்.



சம்சுங் நிறுவனம் அதிநவீன தொழில்நுட்பத்தினைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட சரவுண்ட்ஸ் (Surround) ஸ்பீக்கரினை அறிமுகம் செய்யவுள்ளது. 360 டிகிரியில் எங்கிருந்தும் ஒலியினைக் கேட்கக்கூடிய வகையில் இருத்தல் WAM7500/6500 எனும் இந்த ஸ்பீக்கரின் விசேட அம்சம் ஆகும்.

இவற்றில் இருவகை வடிவமைப்புக்கள் காணப்படுகின்றன. எனினும் இவற்றின் விலை தொடர்பான தகவல்கள் வெளியிடப்படாத நிலையில், இவ்வருடம் இடம்பெறவுள்ள CES நிகழ்வின்போது அறிமுகம் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குறுக்கெழுத்து புதிர் 043

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | 16 ணி | ■ | 4 | 17 | 18 | 19 | 20 |
| ■ | 2 | | 21 | வ | | 5 | | |
| 3 ர | | | வ | | ■ | 6 | ப | |
| | ■ | ■ | 7 | | 22 | | | ■ |
| 8 | 23 | தி | | | | 9 | | ■ |
| | | ■ | | ■ | 10 | | | ■ |
| 11 | | 24 | | | ரி | ■ | ■ | ■ |
| ■ | | | ■ | 12 | | | | |
| 13 | | | | ப | ■ | 14 | | |

### இடமிருந்து வலமாக

1. மனித மூளைக்கு ஒப்பானது
2. சுருங்குதல் பெண்டிருக்கு அழகு
3. இதற்காகப் போராடுபவர்கள் சிலர்- குழம்பியுள்ளது
4. உள்ளார்ந்த மன உணர்வு
5. காகிதத்தின் மூலப்பொருள் - பின்னிருந்து முன்னாக உள்ளது- குழம்பியுள்ளது.
6. ...... பழம்-
7. தேயிலைக் கொழுந்து
8. சாணக்கியனுக்கு எதிரானவன்
9. நீரள்ளப் பயன்படும்
10. முத்தின் ஆங்கிலப் பெயர்
11. தர்மத்திற்கு எதிரானது குழம்பியுள்ளது.
12. பொருள் தரும் கடவுளின் பெயர்
13. பலவாத்தியங்களை இணைத்து இசைப்பது - குழம்பியுள்ளது.
14. நரம்பிசைக்கருவியை மீட்டிப் பாடுபவன் குழம்பியுள்ளது.

### மேலிருந்து கீழாக

15. உயிர்கள் வாழ்வதற்கு இன்றியமையாதது - குழம்பியுள்ளது
16. மிருகங்களைப் பிடிக்க வைப்பது - தலைகீழாக
04. இளமைப்பருவம் - குழம்பியுள்ளது
17. படைப்புக் கடவுளின் பின்னிரு எழுத்துக்கள்
18. இலங்கையின் உற்ற நண்பன் - நடுஎழுத்துக் குழம்பியுள்ளது
19. விடுப்புக் கதைப்பதை இப்படியும் சொல்லலாம் - குழம்பியுள்ளது
20. வயல் செய்யும் இடம்
21. புகழ்பெற்ற அமெரிக்க விண்ணோடம்குழம்பியுள்ளது
03. இயேசுபிரானை இப்படியும் அழைப்பர்
22. பண்டாரவன்னியனைக் கொன்ற படைத்தளபதியின் கடைசி எழுத்து குழம்பியுள்ளது
23. இதன் இரண்டு பக்கத்திற்கும் அடி- ஓர் எழுத்து குழம்பியுள்ளது
24. ....... இராணி

***விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :***
***மலைமுரசு. இல - 159ஏ,***
***கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.***

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## புதிர் 042 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தே | ர் | 16 த | ல் | ■ | ■ | 2 ச | 17 ங் | கு |
| க் | ■ | ள | ■ | 3 அ | ந் | த | மா | ன் |
| கு | ■ | 4 வா | னி | லை | ■ | 5 ம் | கா | ய |
| 6 சு | 18 வ | டி | ■ | 7 வ | டை | ■ | ய் | ■ |
| ந் | ம் | ■ | 8 அ | ரி | 19 மா | 9 க | ட் | 20 சி |
| 10 த | ப | சு | 11 க | சை | ய | டி | ■ | று |
| 12 ர | ன் | ■ | ட் | ■ | ன் | 13 கா | தி | வ |
| ர் | ■ | ■ | டா | ■ | 14 அ | ர | ச | ன் |
| 15 அ | தி | ர | டி | ■ | டி | ம் | ■ | ■ |

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

*திருமதி. பாக்கியவதி*
*மத்தியவீதி, திருகோணமலை.*

*திரு. ச. பன்னீர்செல்வம்,*
*கோபாலபுரம், திருகோணமலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரை விமர்சனம்



## இயக்குனர் மிஷ்கினியின் "பிசாசு"

### நாகா, பிரயாகா நடிக்கும்

சினிமுரசு

படம் தொடங்கியவுடனே ஹீரோயின் சாலை விபத்தில் இறந்துவிடுகிறார். ஹீரோயின் நினைவாக இருக்கும் ஹீரோவின் வீட்டுக்கு பேயாக வருகிறார் ஹீரோயின். பேயை விரட்டுவதற்காக ஹீரோ ஒரு பேய் ஓட்டும் ஒரு பெண்ணை அழைத்து வருகிறார். ஆனால் அந்த பெண்ணையே பேய் கொன்றுவிடுகிறது.

அதுமட்டுமின்றி பக்கத்து வீட்டில் மனைவியை அடித்து நொறுக்கும் குடிகாரன் ஒருவனையும் பேய் பயமுறுத்துகிறது. மேலும் ஹீரோவின் அம்மாவை அடிக்கடி பயமுறுத்துகிறது. மகனின் காதலியை நேரில்கூட பார்த்திராத ஹீரோவின் அம்மாவை பேய் ஏன் பயமுறுத்துகிறது என்பதுதான் மிஷ்கின் ஸ்டைல் டுவிஸ்ட்.

ஹீரோவாக புதுமுகம் நாகா படத்தில் வசனம் மிகவும் என்பதால் இவர் தப்பித்துவிடுகிறார். ஆனாலும் சண்டைக்காட்சியில் ரிஸ்க் எடுத்து நடித்துள்ளார். புதுமுகம் பிரயாகா நல்ல அழகு. ஆனால் நடிக்க வாய்ப்பு குறைவு. இவரை மிஷ்கின் இன்னும் கொஞ்சம் அதிகமாக பயன்படுத்தியிருக்கலாம்.

முழுக்க முழுக்க பேய்க்கதையாகவே கொண்டு செல்லும் மிஷ்கின் கடைசி சில நிமிடங்களில் த்ரில்லிங் மற்றும் சஸ்பென்ஸுடன் முடித்துள்ளார்.

மொத்தத்தில் பிசாசு பயப்பட வைக்கிறது.



## கவர்ச்சி வேணாம் கதைதான் வேணும்



தனுஷ் தயாரிக்க விஜய் சேதுபதி நாயகனாகவும், நயன்தாரா நாயகியாகவும் நடிக்கவுள்ள படம்தான் "நானும் ரவுடிதான்". கதைப்படி காத்து கேட்காத பெண்ணாக, உணர்வுகளை கொட்டி நடிக்கும் ஒரு பெண்ணாக நயன் வருகிறாராம். வித்தியாசமான கதையாக களமிறங்கவுள்ள நானும் ரௌடிதான் படம் நயனுக்கு பெரும் புகழும் பெயரையும் பெற்றுக் கொடுக்கும் என்கிறார் இயக்குனர் விக்னேஷ் சிவன்.

## "தல" க்கு மிரட்டல்

தென்னிந்திய நகரம் ஒன்றின் "ஐ" பட தியேட்டர் உரிமையை பெற்ற ஒரு முக்கிய புள்ளியின் மிரட்டலால்தான் என்னை அறிந்தால் படத்தின் ரிலீஸ் தேதி தள்ளி வைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இவர் ஏற்கனவே கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அஜீத்தை மிரட்டியவர் என்றும் கிசுகிசுக்கப்படுகிறது.

இருப்பினும் தல திரைப்படத்தை யாருடைய மிரட்டலுக்கும் அஞ்சி ரிலீஸ் தேதியை தள்ளி வைக்கவில்லை என்றும், அஜீத்தை மிரட்ட யாராலும் முடியாது என்றும் தெளிவாக கூறியுள்ளனர் படக்குழுவினர்.

## த்ரிஷா திருமணத்திற்கு எதிர்ப்பு



த்ரிஷா நேற்று தனது நிச்சயதார்த்த தேதியை வெளியிட்டார். இவர் பிரபல தயாரிப்பாளர் வருண் மணியனை திருமணம் செய்யவுள்ளார்.

தற்போது வந்த தகவலின் படி இவரது நடிப்பில் என்னை அறிந்தால், பூலோகம் என இரண்டு படங்கள் வெளிவரவுள்ளது. இப்படங்கள் வெளியாகுவதற்கு முன்பு இவரது திருமணம் நடந்தால் அது படத்திற்கு பெரிய பாதிப்பை உண்டாக்கும் என்பதால் திருமணத்தை கொஞ்சம் தள்ளிப்போடுங்கள் என்று தயாரிப்பாளர்கள் தங்கள் எதிர்ப்பை காட்டியுள்ளனர்.

## முப்பதிலும் ரசிகர்கள்

முப்பதிலும் கலக்கிக் கொண்டிருக்கும் தமிழ், தெலுங்கின் முன்னணி நடிகையான அனுஷ்கா, 'என்னை அறிந்தால், பாகுபலி, ருத்ரமாதேவி' ஆகிய திரைப்படங்களின் வெளியீட்டை எதிர்நோக்கியுள்ளார். ஆனால் தற்போது கன்னடத்தில் தர்ஷன் ஜோடியாக நடிக்கும் வாய்ப்பு தேடி வந்துள்ளதாம். அதற்கு அனுஷ்கா சம்மதிப்பாரா என்பது இனிமேல்தான் தெரிய வரும். திரையுலகில் அறிமுகமாகி பத்து வருடங்கள் கழித்தாவது தாய்மொழி திரைப்படத்தில் நடிக்க அனுஷ்கா சம்மதிப்பாரா என கன்னட ரசிகர்கள்

## மீண்டும் ஜோதிகா, சூர்யா



பலரின் வேண்டுகோளும் அன்பான வற்புறுத்தலாலும் சூர்யாவின் அனுமதியோடு மலையாளத்தில் மிகப் பெரிய வெற்றி பெற்ற "HOW OLD ARE YOU" படத்தின் தமிழ் ரீமேக்கில் நடிக்கிறார் ஜோதிகா. இந்தப்படம் முடிந்த கையேடு, இயக்குனர் பாண்டிராஜ் சிறுவர்களுக்கான ஒரு படத்தை இயக்குகிறார். இதில் முக்கியமான பாத்திரத்தில் ஜோதிகா நடிக்க, அவரோடு சூர்யாவும் இப்படத்தில் தோன்றவுள்ளார் என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பாலிவுட் செல்லும் தமிழ் வெற்றிப்படம்

கடந்த வருடம் தமிழ் சினிமாவின் புதிய முயற்சியாக வெளிவந்த படம் ர. இப்படம் வெளிவந்து ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது மட்டுமின்றி பயத்தில் உறைய வைத்தது. மேலும், இப்படத்தில் ரெட் டோர் என புது வி'யத்தை கூறி மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினர். தற்போது வந்த தகவலின் படி இப்படம் பாலிவுட்டில் ரீமேக் ஆகவிருக்கிறதாம்.

## புலியாகும் விஜய்



சிம்புதேவன் இயக்கும் விஜய் நடிக்கும் திரைப்படத்துக்கு "புலி" என்று பெயர் வைத்துள்ளனர். இந்த தலைப்பு இரசிகர்களை வெகுவாக கவர்ந்துள்ளது. இந்த திரைப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக ஸ்ருதிஹாசன், ஹன்சிகா ஆகியோர் நடிக்கின்றனர். சரித்திர பின்னணியில் உருவாகும் இப்படத்தில் விஜய் இரட்டை வேடத்தில் நடிக்கிறார். முன்னாள் கதாநாயகி ஸ்ரீதேவியும், "நான் ஈ" புகழ் சுதீப்பும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகின்றனர்.

## லிங்கா வெற்றியா தோல்வியா



விநியோகஸ்தர்கள் லிங்கா படம் குறித்து கூறுகையில், எப்படியோ தயாரிப்பாளர்களுக்கு மட்டும் நல்ல லாபம் கிடைத்துள்ளது. இந்த லாபத்தில் சிறு தொகையை தான் நாங்கள் கேட்கிறோம். அதையும் தர மறுத்தால் நாங்கள் என்ன செய்வது?. மேலும் ரஜினியின் கவனத்திற்கு கொண்டு செல்லவே உண்ணாவிரதம் இருக்கவிருக்கிறோம். அவரே நேரடியாக வந்து பதில் சொன்னால் தான் எங்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும்' என்றும் கூறியுள்ளனர்.

## பெரிய நடிகராம்

இயக்குனர் மிஸ்கின், கதை சொல்வதற்காய் விஜய் சேதுபதியிடம் சென்றுள்ளார். கதையைக் கேட்க முன்னமே, சேதுபதி "சார்! உங்க கதையோட் நாயகர்கள் எல்லாம் கொஞ்சம், யதார்த்தத்துக்கு முரணாக, அதாவது இயற்கையான முறையில் இல்லாத பாத்திரங்களாக படங்கள்ல வந்திருப்பாங்க. அது எனக்கு செட் ஆகாது" என்று திருப்பி அனுப்பியிருக்கிறார். இந்த நடவடிக்கையால் கோபமடைந்த மிஸ்கின், முதலில் எவ்வளவு பெரிய ஹீரோ என்றாலும் அடுத்தவரை மதிக்கத் தெரிந்திருக்கணும் என்று புலம்புகின்றாராம்.

## பொங்கல் தரும் ஆம்பள

சுந்தர் சி. இயக்கத்தில் விஷால், ஹன்சிகா நடிப்பில் தயாராகிய "ஆம்பள" திரைப்படத்தின் படப்பிடிப்பு முடிந்துவிட்டது. இப்படத்தின் இறுதிக் கட்டப் படப்பிடிப்பு இத்தாலியில் நடந்தது. பொங்கலுக்கு இத்திரைப்படத்தை வெளியிடுவதாக அறிவித்துவிட்டுத்தான் படத்தின் படப்பிடிப்பைத் தொடங்கினார் விஷால்.

சென்ற வாரம்



நான் யாரு??



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் - 35

# அரசியல்வாதிகளும் கல்விமான்களும்



(வி.என்.சந்திரகாந்தி)

ஒரு நாடு சர்வதேச மட்டத்திற்கு உயர்ச்சியடைய வேண்டுமாயின் அங்கு நல்லாட்சியும் நாகரீக வளர்ச்சியும் நீடிக்கவேண்டும். இந்த இரண்டு அம்சங்களுக்குமே அடிப்படைக்காரண கர்த்தாக்களாக இருக்க கூடியவர்கள் அரசியல்வாதிகளும் கல்விமான்களுமாகும்.

ஒரு நாட்டின் நிர்வாகம் அரசியல் முறைமையிலும் அதனை கொண்டு நடாத்தும் அரசியல்வாதிகளினதும் கையில் தான் உள்ளது. அண்மைக்கால அரசியல் பின்னணிகளை நோக்கினாலும் கூட மன்னராட்சியில் இருந்து சோசலிச ஆட்சி வரையிலான நிர்வாகத்தின் கீழ் பல நாடுகள் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. அதே சமயம் இராணுவ பலத்துடனான சர்வாதிகார ஆட்சி மக்களையும் நாட்டையும் அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றமைக்கான ஆதாரங்களும் உள்ளன. நீண்ட கால அரசியல் நோக்கில் பார்க்குமிடத்து ஜனநாயகமானது சர்வதேச மட்டத்தில் சிறப்பான இடத்தை பிடித்திருக்கின்றது எனலாம். ஜனநாயகம் என்பதன் பொருள் மக்கள் மக்களை மக்களுக்காக ஆட்சி செய்யும் அரசியல் முறையாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பாராளுமன்ற முறைமையின் கீழ் நாட்டை நிர்வகிப்பர். தீர்மானங்கள் பெரும்பான்மை பலத்தை வைத்து முடிவு செய்வர். ஜனநாயகமுறை ஆட்சியில் பல குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. அதில் ஒன்று ஒன்பது கல்விமான்களின் தீர்மானத்தை நிராகரித்து பத்து அறிவிலிகளின் முடிவை ஏற்று அமுல்படுத்துவதாகும். அடுத்து மக்களின் பிரதிநிதியாக ஒருவர் தெரிவு செய்யப் பட்டுவிட்டால் மறுதேர்தல் வரை அவரை தட்டிக்கேட்டு என்பது இயலாதகாரியம்.

இன்று எமது நாட்டில் நடந்து கொண்டிருப்பது இந்த இருவகை தவறுகளுமே ஆகும்! ஆதனால் தான் பள்ளிவாசல்களும், தேவலாயங்களும், மற்றும் கோயில்களும் தகர்க்கப்படுவதும் கூட ஏதோ ஒரு விதத்தில் யாரோ ஒரு சாராருக்கு நியாயப்படுத்தப்படுகின்றது!



அடுத்து எமது தேசம் பல்லின மக்களை கொண்டது. சிங்களம் மட்டும் எழுபத்தியிரண்டு சதவீதம் ஆகும். இந்த நிலையில் இந்த நாட்டில் எடுக்கப்படும். எந்த முடிவும் பெரும்பான்மையினத்தவரின் அபிலாசைகளை அடிப்படையாக கொண்டதாக அமையுமே அல்லாமல் எந்த சிறுபான்மையினத்தவரின் எந்த ஒரு குறைந்த பட்ச கோரிக்கை யாயினும் நிறைவேற்றும் வகையில் அமையாது. அதனால் தான் வடக்கு கிழக்கு இணைப்பும், இந்திய தமிழர்களின் தனிவீட்டு வசதிக்கோரிக்கையும் வெற்றியளிக்கவில்லை. இந்த நிலைமைக்கு சிறுபான்மையினர் உள்ளாகக்கூடாது என்பதற்காக தான் ஜி.ஜி.பொன்னம்பலம் போன்ற அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தில் 50க்கு 50 என்ற பிரதிநிதித்துவத்தை கோரினார்கள். அது மறுக்கப்பட்டதன் விளைவையே இன்று நாம் அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம்.

பெரும்பான்மை அரசியல்வாதிகள் பகுத்தறிவுடன் முடிவெடுக்காமல் ஆட்பலத்தை மட்டும் வைத்து முடிவெடுக்கும் நிலைமை முற்றாக மாறவேண்டும். முன்நாட்களில் எமது தமிழ் அரசியல்வாதிகள் சட்டத்தரணிகளாக இருந்துள்ளார்கள். அதனால் அரசியல் வானில் நன்கு பிரகாசித்தனர். இது நல்தொரு நோக்கத்தை அடிப்படையாக கொண்டதென்றே கூறவேண்டும். அரசியல்வாதிகள் தமது கல்வியறிவை மேம்படுத்துவதன் மூலம் தாம் பெரும்பான்மை இனத்துக்கு மட்டும் செய்யும் சேவையினை இந்நாட்டு சிறுபான்மை இனத்தவருக்கும் எட்ட செய்யவேண்டும்.

அப்போதுதான் தமிழர்கள், முஸ்லீம்கள், இந்திய தமிழர்கள் கூட தமது மத கலாச்சாரங்களை பேணிப் பாதுகாக்கும் அதே நேரத்தில் 'நாம் இலங்கையர்கள்' என்ற கோஷத்துடன் ஒன்றிணைவர். அடுத்து எமது நாட்டு கல்விமான்கள் எமக்கு எவ்வளவு தூரம் சேவை யாற்றுகின்றார்கள் என்பதை பார்ப்போம்.

'Brain Drain' என்று ஒரு ஆங்கில சொல் உண்டு. ஒரு நாட்டின் தொழில்நுட்ப வல்லுனர்களும் விஞ்ஞானிகளும் கல்விமான்களும் அயல் நாட்டுக்கு போய் விடுவதை இச் சொல் குறிக்கும். இலங்கையில் அன்றுதொட்டு இலவசக்கல்வி நடைமுறையில் உள்ளது. எமது நாட்டில் தொழில் நுட்ப வல்லுனர்களும் விஞ்ஞானிகளும் உருவாக வேண்டும் என்ற எதிர்பார்ப்பே அந்த ஊக்குவிப்புக்கு காரணம். ஆனால் என்ன நடக்கின்றது? பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் போதே வெளிநாட்டுக்கு எப்படி போகலாம் என்ற சிந்தனைதான் மாணவர்களின் மனத்தில் இருக்கின்றது.

கற்கை முடிந்தபின் குறிப்பிட்ட காலம் நாட்டில் சேவையாற்ற வேண்டும் என்ற ஒப்பந்தத்திற்கும் மாறாக தந்திரமாக நாட்டை விட்டு பலர் வெளியேறிவிடுகிறார்கள்.

அதே சமயம் கற்கை விசாவில் வெளிநாடு செல்லும் மாணவர்கள் தமது கற்கை முடிந்து தாம் திரும்ப வேண்டிய நேரம் வந்ததும் அந்த நாட்டில் மாறிவிடுகிறார்கள். பணம் சம்பாதிப்பதும் சொகுசு வாழ்க்கையும்தான் அவர்கள் நோக்கமாக இருக்கிறதேயல்லாமல் எமது நாட்டுக்கும் சமூகத்துக்கும் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் கிஞ்சித்தும் கிடையாது.

பொறியியல், மருத்துவம் இரண்டுமே மிக முக்கியமான துறைகள். இத் துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள் எம் மத்தியில் இல்லையென்றால் விஞ்ஞானிகள் எப்படி உருவாக முடியும்? அதனால்தான் பாலங்கள் அமைப்பதற்கும் கட்டடங்கள் வீதிகள் அமைப்பதற்கும் ஜப்பானியர்களையும் சீனர்களையும் வரவழைக்கிறோம்.

இனி வெளிநாட்டில் மருத்துவ கற்கை நெறியை கற்கும் எமது மழலை செல்வங்கள் தமது திறமையை வெளிக்காட்ட எமது சமூகத்துடன் வந்தா இணைகின்றார்கள்? இல்லவே இல்லை!

இந்த இடத்தில் ஒரு அனுபவத்தை பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கின்றேன். எனது நண்பனின் மருமகள் முறையான சிறுமி ஒருத்தி தனது ஆரம்ப கல்வியை கனடாவில் மேற்கொண்டார். ஆங்கிலத்தில் தனது பட்டப்படிப்பை முடிக்கும் தறுவாயில் அவளது நண்பி ஒருத்தியுடன் இணைந்து அமெரிக்காவில் மருத்துவ கல்வியை தொடர்ந்தாள். அது இலவசக்கல்வி அல்ல. பெரும் பணச்செலவுடன் கற்கை நெறியை பூர்த்தி செய்ய ஐந்து வருடங்கள் ஆயின. எமது நாட்டில் என்றால் உடன் அரச நியமனமும் உயர்சம்பளம், அலவன்ஸ் மற்றும் விடுதி வசதிகள் வழங்கப்படும். அமெரிக்காவில் அப்படியல்ல. அங்கு தனியார் வைத்திய நிலையங்கள் ஏராளமாக இருக்கின்றன. அதேசமயம் மக்கள் தமது மருத்துவ வசதிகளுக்காக காப்புறுதி செய்திருப்பார்கள். வைத்திய நிலையங்கள் ஒவ்வொன்றும் குறிப்பிடப்பட்ட குடும்பங்களின் மருத்துவ தேவைகளை பொறுப்பேற்று பராமரிக்கும். அதற்கான கொடுப்பனவுகள் எவருக்கும் நோவின்றி காப்புறுதி 'கம்பனி'களால் வழங்கப்படும்.

இப்படியான வைத்திய நிலையங்கள் புதிதாக வெளிவரும் மருத்துவதுறை மாணவர்களை இணைத்துக்கொள்ள வருடமொரு தடவை ஒன்றுகூடல் விருந்துபசாரம் ஒன்றை வழங்குவார்கள். அவர்கள் மற்றவர்களுடன் இணைந்து செயல்படும் முறையை அவதானித்து தமது நிறுவனங்களில் இணைத்துக்கொள்ள விரும்பும் மாணவர்களின் பெயரை பட்டியலிட்டு முடிவை இணையத்தில் அறிவிப்பர். அதில் ஒரு வருடம் தெரிவாகாவிட்டால் அடுத்தடுத்த வருடங்களுக்காக காத்திருக்க வேண்டி ஏற்படும். தெரிவு செய்யப்பட்டால் குடும்ப வைத்தியர்களாக பணிபுரிந்து சம்பாதிக்கலாம்.

எல்லாமே எமது தலைவிதி தான் என்று எண்ண தோன்றுகின்றதா?

# பிரிந்தது ஓர் உயிர்

சஞ்சயன் செல்வமாணிக்கம்

அவன் எனக்கு அறிமுகமாகியது 2008ம் ஆண்டு யூலைமாதம் என்றே நினைவில் இருக்கிறது. என்னைப் போல் அவனும் கறுப்பன்.

காலம் எம்மை பலமாய் இணைத்துப்போட்டது. நான் எங்கு சென்றாலும் அதிகமாக என்னுடயே வருவான். நானின்றி அவன் எங்கும் சென்றது கிடையாது. எனது சுமைகளை எதுவித முகச்சுளிப்பின்றியும் தாங்கிக்கொள்ளும் பெரிய மனது அவனிடமிருந்தது. நானும் அவனின் சுமைகளை சுமந்து திரிந்திருக்கிறேன். என்னைக் கண்டவர்கள் அனைவரும் அவனையும் நிட்சயமாகக் கண்டிருப்பார்கள். அவ்வளவு ஒற்றுமை எம்மிடையே இருந்தது. நாம் இணைந்து வெளிநாட்டுப் பயணங்களும் செய்திருக்கிறோம்.

நான் களைத்துப்போகும் போதெல்லாம் அன்புடன், தோளில் கைபோட்டு எதையாவது உண் அல்லது குடி என்று கூறும் நண்பன் அவன். இன்று என்னை தெம்பூட்டும் நண்பனை இழந்திருக்கிறேன். வாழ்க்கை என்பது நிலையில்லாது என்பதை வாழ்க்கை மீண்டும் எனக்கு கற்பித்திருக்கிறது. மரணத்தைப் போன்றதோரு ஒரு சிறந்த ஆசான் எதுவுமில்லை. அது. தன்னை பல மனிதர்களின் மனதில் ஆழமாகப் பதிந்து போகிறது. என் நண்பனின் பிரிவும் அப்படியானதே.

நான் அவனை முதன் முதலில் சந்தித்தபோது மிகவும் திடகாத்திரமான உடம்புடன் தான் இருந்தான். காலப்போக்கில் சில பல நோய்கள் அவன் உடல்நிலையை பலவீனமாக்கின. மருந்து மாத்திரைகளில் நாட்டமற்ற மனிதன் அவன்.

அவன் எப்போதுமே ஆழமான மௌனத்தைக் கடைப்பிடிப்பவன். என்னைப் போல் அலட்டித்திரியும் குணம் அவனிடமில்லை. அவனுக்குள் பலதும் இருக்கும். பலதையும் உள்ளடக்கியவனே அவன். முக்கியமாய் புத்தகங்களை தன்னுடன் எப்போதும் வைத்திருப்பான். இறுதியாய் அவன் வைத்திருந்த புத்தகம் புஸ்பராணியின் "அகாலம்". அவன் காலமும் அத்துடன் அகாலமாகியது தான் வேதனை.

ஒரு நாள் ஒரு நண்பன் தலையிடிக்கிறது என்றான். இந்தா என்று குளிசையை நீட்டினான். வேறொரு நாள் நாம் ஆப்பிள் சாப்பிடும் போது எமக்குக் கிடைத்த அப்பிள் பழத்தை இரண்டாக வெட்டவேண்டியேற்பட்டது. தன்னிடம் இருந்த சிறு கத்தியை நீட்டினான். இன்னொரு நாள் ஒரு நண்பர் எழுதுவதற்காக பேனை தேடினார், அதுவும் அவனிடமிருந்தது. குடை, நீர், கணணி இப்படி எதையும் தன்னோடு கொண்டலையும் அற்புதமான ஜீவன் அது.

முடியாது என்று அவனிடம் இருந்து வார்த்தை வெளிப்பட்டது இல்லை. எதையும் தன்னை வருத்தியென்றாலும் செய்யும் குணம் நான் அவனை சந்தித்த முதல்நாளில் இருந்தே அவனிடம் இருந்தது. அவனிடம் இருந்து நான் கற்றுக்கொள்வதற்கு அதிகமிருக்கிறது.

ஒரு வருடத்திற்கு முன் அவனுடம்பில் ஏற்பட்ட சில காயங்கள் அவனது உடலை பலமாய் பாதித்தது. ஒரு காயம் ஆறுவதற்கு முன் மறுகாயம், அது ஆறுவதற்கு முன் இன்னொன்று என்று விதி அவனுடன் விளையாடிக்கொண்டே இருந்தது. அவனின் கட்டுமஸ்தான உடலும் காலப்போக்கில் வலுவிழந்து அவனை முன்பைப்போல் சுகதேகியாய் நடமாட முடியாது முடக்கிப்போட்டது. இருப்பினும் என்னுடன் அலைந்து திரிந்தான்.

நானும் என்னாலானதைச் செய்து பார்த்தேன். விதி சில முடிவுகளை எடுக்கும் போது நான் அல்ல யார் எதைச் செய்தாலும் அது விதியின் படியே செல்லும் என்று நான் கடந்துவந்தபாதை எனக்கு அறிவித்திருக்கிறது. நண்பனின் வாழ்க்கையிலும் அப்படியே நடந்தது.

நண்பனும் நானும் இரண்டு நாட்களுக்கு முன் ஒஸ்லோவின் வீதியொன்றில் நடந்து கொண்டிருந்து போது எனது ஒரு பக்கத்து தோளில் கையை ஊன்றியபடியே வந்துகொண்டிருந்தான். அவனின் சுகயீனத்தின் கனத்தை நான் எனது தோளில் உணர்ந்தேன்.

கண்ணிமைக்கும் நேரத்தில் தோளில் இருந்து அவன் கை சறுக்கியதை உணர்ந்து திரும்பிப் பார்த்தேன். மூச்சுப் பேச்சற்று வீதியில் கிடந்தான். அள்ளியெடுத்து அணைத்துக்கொண்டேன் அவனை. உடல் குளிர்ந்தது போலிருந்தது. எம்மைக் கடந்து சென்றவர்கள் பரிதாபத்துடன் என்னைப் பார்த்தார்கள்.


அவனைத் தூக்க சிலர் உதவினர். நெஞ்சோடு அணைத்தபடியே அருகில் இருந்த கடைத் தொகுதிக்குள் அவனைக் கொணடுபோனேன் போனேன். பலரும் என்னைத் திரும்பிப் பார்த்தார்கள். உதவிக்கு எவரும் வரவில்லை.

அருகில் இருந்த கடைக்குள் அவனைக்கிடத்தினேன்.

அக் கடையில் அமர்ந்திருந்த அழகி நட்புடன் புன்னகைத்தாள். ஏதும் உதவி வேண்டுமா என்றாள். ஆம் என்று தலையாட்டினேன். அருகில் உட்கார்ந்து நண்பனை பரிசோதித்தாள். மௌனமாய் நிமிர்ந்து பின்பு உதட்டைப் பிதுக்கினாள்.

உனது தோள் பை இனிபாவிக்க முடியாதளவுக்கு கிழிந்துவிட்டது. இதனால் இனி எதுவித பிரயோசனமும் இல்லை என்றாள். அத்துடன் பயப்படாதே, அங்கே பல புதிய தோள்பைகள் இருக்கின்றன என்றாள்.

அவள் காட்டிய திசையில் சென்று, நான் எனது புதிய நண்பனை தேடத்தொடங்கினேன்.



எனது பழைய தோள் பை (சரஉமளயஉம)யின் ஆத்மா சாந்தியடையக் கடவதாக! நீங்கள் என்னை கொல்லாமலும் இருக்கக கடவதாக!

சாதாரணமானவனுக்கோர் புது நண்பன்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நடப்பு

# அனைத்தும் நன்மைக்கே



எந்தப் பெற்றோரும் தம் பிள்ளைகளுக்கு நன்மையே புரிவார்கள். பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக திட்டமிட்டு எப்படி அவர்கள் நடக்க வேண்டுமென்று அறிவுரைகள் வழங்குவதுடன் நின்றுவிடாது அவர்களை நல்ல வழிக்கு இட்டும் செல்வார்கள். ஆனால் சில பிள்ளைகளுக்கு பெற்றோர்களின் கடும் கண்டிப்பு, அறிவுரை, வழிகாட்டல் என்பன சுத்தமாக பிடிக்காமல் தம் இஷ்டத்திற்கே நடக்க ஆரம்பித்து படுகுழியில் விழுந்து வாழ்க்கையில் அவஸ்தைப் பட்டவர்களை நாம் அறியாமலல்ல.

எந்தப் பெற்றோரும் தம் பிள்ளைகள் வாழ்க்கையில் துன்பப்படுவதை என்றுமே விரும்ப மாட்டார்கள். சில பிள்ளைகளுக்கு பெற்றோரின் புத்திமதி அவசியம் தேவை. ஆனால் சிலருக்கு அது அறவே தேவைப்படாது. சிலர் தம் பெற்றோருக்கே அறிவுரை வழங்குவார்கள்.

சில குடும்பங்களில் தம் பிள்ளைகள் திருமணமாகி குழந்தைகளை பெற்றாலும் தம் பிள்ளைகளை என்றுமே கைவிட்டு விட மாட்டார்கள். சிறு வயதில் அவர்களுக்கு எப்படி புத்திமதி கூறி வழிநடத்தினார்களோ அதே போன்று தொடர்ந்தும் அவர்களையும் அவர்களது பிள்ளைகளையும் நல்வழியில் செல்ல தேவையான நடடிக்கைகளை மேற்கொண்டு வருவார்கள்.

சில குடும்பங்களில் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை க்வனிப்பது இல்லை. அவ்வாறே பிள்ளைகளும் பெற்றோரை கவனிப்பது இல்லை. அப்படியான குடும்பங்களில் இருந்து வந்தவர்களே இன்று சமூகத்திற்கு எந்தவிதத்திலும் பயனற்றவர்களாக வாழ்கின்றனர். வாழையடி வாழையாக அக்குடும்பங்கள் சீரழிந்து வாழ்வதை நாம் அன்றாடம் கண்டு வருகின்றோம்.

மேலும் நாட்டில் குற்றச் செயல்கள் தலைத்தோங்க சமூகத்திடையே வழிசமைப்பர்களும் அவ்வாறான குடும்பங்களை சார்ந்தவர்களே. நல்ல ஒரு பிரஜைக்கு வாழ்க்கைக்கு எவை முக்கியமானதோ அவை அனைத்தையும் இழந்தவர்களாக காணப்படுபவர்களும் அவர்களே.

லதாவின் தகப்பனார் ஒரு நீண்டகால நோயாளி அவரின் உடம்பிற்குள் புகுந்து கொண்ட அந்த வியாதியை அப்பகுதியிலுள்ள எந்தவொரு மருத்துவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவ்விதம் அந்த நோய் கண்டு பிடிக்கப் பட்டாலும் அதை குணமாக்கும் அளவுக்கு அக்குடும்பத்தி னரிடம் பணவசதிகள் இருக்கவில்லை. வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் அவர்களுக்கு ஏது வசதி?

குறித்த வியாதியால் அவர் கஷ்டப்படும் பொழுது அருகிலுள்ள அரசினர் மருத்துமனைக்கு வழமையாக எடுத்துச் செல்லப்படுவார். அங்கு சுமார் ஒரு வாரம் இருந்து விட்டு மீண்டும் வீட்டுக்கு வருவார். இப்படியே மாதத்தில் ஓரிரு வாரங்கள் அந்த மருத்துவமனையிலே காலத்தை கழிப்பார் லதாவின் தகப்பனார்.

லதா குடும்பத்தில் இரண்டாவது பிள்ளை. லதாவின் தகப்பனார் கந்தளாய் சீனித் தொழிற்சாலையில் இயந்திர இயக்குனராக கடமையாற்றியவர். இயந்திரசாலையிலிருந்து வெளியாகும் கரும்புகையே அவரின் நீண்டகால நோய்க்கு காரணமென அங்கு பலர் காரணம் கூறினர். "அப்படியென்றால் அந்நோய் இயந்திரசாலையில் கடமையாற்றிய அனைவருக்கும் வந்திருக்க வேண்டுமே" என சிலர் தங்கள் கருத்தை முன்வைத்த பொழுது "இல்லை அது காரணம் அல்ல அவருக்கு உடலில் நோய் எதிர்ப்பு சக்தி மிகக் குறைவு" என இன்னும் சிலர் கருத்துக்களை முன்வைத்தனர். மருத்துவர்களால் கண்டுபிடிக்க முடியாததை சாதாரண மக்களால் கண்டுபிடித்துவிட முடியுமா?

அது என்னவாக இருந்தாலும் லதாவின் தகப்பனாருக்கு இருந்து வந்த நோயினால் அவர் நாளுக்குநாள் மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டார். பணவசதி இருந்தால் நாட்டில் உள்ள ஏனைய பிரசித்த மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றிருக்கலாம். மேலும் கந்தளாய் சீனித் தொழிலகத்திலிருந்து கிடைக்கப்பெற வேண்டிய கொடுப்பனவுகள் கூட லதாவின் தகப்பனாருக்கு உரிய வேளையில் கிடைக்கவில்லை. அவை தொடர்பான முயற்சிகளுக்கும் பலன் அற்றுப்போயின.

இன்று எமது நாட்டில் பல அங்கீகரிக்கப்பட்ட தொழிலகங்கள் அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களை இறுதிக் காலங்களில் ஏமாற்றிக் கொண்டுவருவது புதிய விடயமல்ல. அரச நிறுவனங்களில் தொழில் புரிந்தால் இறுதிக் காலத்தில் ஓய்வூதியமாவது கிடைக்கும். அரச சார்பற்ற நிறுவனங்களில் மற்றும் தொழில் நிலையங்களில் தொழில் புரிந்தால் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றுக்கு குறித்த தொழிலாளர்களே சட்டப்படி ஏற்புடையவர்கள். ஆனால் அவை கூட இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன.

ஊழியர்களுக்கான குறித்த கொடுப்பனவுகள் கட்டாயம் வழங்கப்படல் வேண்டுமெனவும், அவ்வாறு வழங்கப்படாத பட்சத்தில் சம்பந்தப் பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், தொழில் சட்டவாக்கங்களில் மிக தெளிவான ஏற்பாடுகள் மூலம் சுட்டிக்காட்டப் பட்டிருந்தாலும் இன்று பல அப்பாவி தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டுள்ளதை இங்கு கோடிட்டுக் காட்டுதல் பொருத்தமானதே.

ஊழியர்கள் தொடர்பான குறித்த சட்டங்களையும், அதன் ஏற்பாடுகளையும் உருவாக்கிய பல அரச நிறுவனங்களே தங்களுக்கு கீழ் இயங்கும் பல தொழிலகங்களுக்குரிய ஊழியர்களை இக்கொடுப்பனவுகள் விடயத்தில் அம்போ என கண்ணைக் கட்டி காட்டில் விட்ட பல சம்பவங்களை அன்று தொடக்கம் நாம் அறிந்துள்ளதுடன் இன்றும் அவ்வாறானவற்றை அறிந்து கொண்டே இருக்கின்றோம்.

மேலும் ஊழியர்களின் சம்பளப்பட்டியலில் குறித்த நீதியங்களுக்கான பங்குப்பணங்கள் கழிக்கப்பட்டு மத்திய வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளாதாக களனி மற்றும் ஆவணப் பதிவுகளில் பதியப்பட்டிருந்தாலும் அ்வாறான பணங்கள் தங்களுக்கு வந்து சேரவில்லை என மத்திய வங்கி கையை விரித்த சம்பவங்களும் பல. குறித்த நிதியங்களுக்கு ஊழியர்கள் சார்பில் அங்கத்துவப் பணம் செலுத்த வேண்டுமென சட்டத்தினால் கூறப்பட்டாலும் அதை சரியாக கடைப்பிடிக்கும் தொழில்தருனர்கள் தான் எத்தனை பேர்?

அதே நிலைதான் லதாவின் தகப்பனாருக்கும் ஏற்பட்டிருந்தது. அவர் ஓய்வு பெற்றாலும் அவருக்குரிய எந்தவித நடவடிக்கைகளையும் அவரின் தொழிலகம் மேற்கொண்டிருக்க வில்லை. அந்த நெருக்கடி காரணமாக அக்குடும்பத்தின் முழுச் சுமைகளையும் லதாவின் மூத்த சகோதரனுக்கு சுமக்க நேரிட்டது. கந்தளாய் சிவன் கோவிலில் அவன் கணக்குப் பிள்ளையாக வேலை செய்து வந்தான். நிர்வாகம் அவனது குடும்ப கஷ்டத்தை கவனத்தில் எடுத்து நியாயமான வேதனத்தை மாதா மாதம் வழங்கி வந்தாலும் அது அக்குடும்பச் செலவுக்கும், மருத்துவச் செலவுக்கும் போதுமானதாக இருக்கவில்லை.

எது என்னவாக இருந்தாலும் லதாவின் பள்ளிப் படிப்பை அவளது சகோதரன் நிறுத்தவில்லை. குடும்ப கஷ்டத்தின் நிமித்தம் அவனால் மேற்கொண்டு படிக்க முடியாமல் போனாலும் லதாவை எப்படியும் படிப்பிக்க வேண்டுமென்று அவன் மாத்திரமல்ல அவனது பெற்றோரும் விரும்பி இருந்தனர். அன்று தகப்பன் நல்ல நிலைமையில் இருந்திருந்தால் நிச்சயம் அவரின் இரண்டு பிள்ளைகளையும் நன்றாகப் படிப்பித்திருப்பார். சகல முயற்சிகளுக்கும் தடைகளை ஏற்படுத்தியது அந்த குணமாக்க முடியாத அவரின் வியாதியே.

மேலும் அவரது போதாத காலம் அவரை நிரந்தர படுக்கையில் போட்டுவிட்டது. அவர் நடமாடக்கூடிய நிலையில் இருந்திருந்தால், லதாவின் மூத்த சகோதரன் குடும்பத்திற்காக உழைப்பைத் தேடிச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது.

தற்பொழுது லதாவுக்கு வயது பதினாறு மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டிய வயதென்றாலும் பாடசாலை அருகில் இருப்பதால் அவளை கண்காணிக்க வேண்டிய அவசியம் அவள் குடும்பத்தாருக்கு இருக்கவில்லை. அவள் முழுக்க முழுக்க படிப்பில் கவனம் செலுத்துகிறாள் என்பதை அவளின் வீட்டார் தெளிவாக நம்பி இருந்தனர். ஆனாலும் அவளின் வயது, என்றாவது கோளாறை ஏற்படுத்தும் என்பதைக் கூட அவர்கள் அறியாமல் இருந்தமை மிகவும் பாரதூரமான ஒரு பிரச்சினையை ஏற்படுத்தியது.

ஒரு நாள் லதா கந்தளாய் நீர்ப்பாசன திணைக்களத்தில் காவலாளியாக கடமைபுரியும் ஓர் இளைஞனுடன் ஓடிப்போய்விட்டாள் என்ற செய்தி அப்பகுதியில் சிறகு கட்டி பறந்தது

பிள்ளைகளின் ஒவ்வொரு அசைவு களையும் அவதானித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது சகல பெற்றோரினதும் முக்கிய கடமை என்பதனை பெற்றோர்கள் மறந்து விடுகின்றனர். பதினாறு வயது நிரம்பிய லதா அன்று தனது காதலனுடன் வீட்டை விட்டு ஓடிப்போகும் முன் தனது எதிர்காலம், குடும்ப சூழ்நிலை என்பவற்றை சிந்திக்கவே இல்லை. காதல் தோன்றியதும் அவளால் வேறு விடயங்கள் பற்றி சிந்திக்கக் கூட தெரியவில்லை. தொலைக்காட்சி நாடகங்களையும், திரைப்படங்களையும் பார்த்துவிட்டு இவ்வாறான முடிவுகளை மெற்கொள்கின்றனர்.

இருப்பினும் இலங்கையின் விவாக சட்டப்படி தேவையான வயதை அவள் பூர்த்தி செய்திருக்கவில்லை. காதலனின் தாயார் லதா மீது மகவும் அன்பாக இருந்தார். காரணம் அவருக்கு பெண் பிள்ளைகள் இல்லாதிருந்தமை ஆகும். அவள் காதலனின் வீட்டில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாலும், அவளின் மூத்த சகோதரன் கொடுத்த புகாரின் பேரில் அவள் நீதிமன்றம் முன் நிறுத்தப்பட்டாள். எவ்வித பலவந்தங்களும் இன்றி தன் சொந்த விருப்பில் தான் சென்றாள் எனவும், அங்கு அவள் மட்டற்ற மகிழ்ச்சியில் இருக்கின்றாள் எனவும் நீதிமன்றம் எடுத்துக் கொண்டபின் சரியான வயது வரும்வரை லதாவை அவளது பெற்றோருடனே இருக்குமாறு அறிவுரை வழங்கி அனுப்பி வைத்தது நீதிமன்றம்.

பின்னர் இரு குடும்பத்தாருக்கும் ஏற்பட்ட சமூக நிலையின் பேரில் அத்திருமணம் மகிழ்ச்சியுடன் மங்களகரமாக நடந்தேறியது.

**- பாலையூற்றான் -**

இப்படியும் நடக்கலாம்

## மிகப்பெரிய கப்பல்



உலகின் மிகப்பெரிய கப்பல் என்ற பெருமையை பெற்ற சி.எஸ்.சி.எல் குளோப் என்ற கப்பல் கடந்த டிசம்பர் 8ஆம் தேதி சீனாவில் இருந்து தனது முதல் பயணத்தை தொடங்கியது. நான்கு கால்பந்தாட்ட மைதானத்தின் அளவு பரப்பளவு கொண்ட இந்த பிரமாண்ட கப்பல் 20 அடிகள் உயரமுள்ள 19100 கண்டெய்னர்களை தனது முதல் பயணத்தில் ஏற்றிக்கொண்டுள்ளது. இந்த கப்பலின் உயரம் 1014 அடி ஆகும். நீளம் 1312அடி ஆகும். இதில் ஏற்றிக்கொண்டு வரும் கண்டெய்னர்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக்கொண்டே போனால் அது எவரெஸ்ட் சிகரத்தைவிட அதிக உயரமாக இருக்கும்

## மனைவி முன் சுட்டு தற்கொலை

அமெரிக்காவை சேர்ந்த Darryl Jouett என்பவர் தனது மனைவியுடன் இரவு உணவை முடித்துவிட்டு லிப்ட்டில் இறங்கி வந்து கொண்டிருந்தார். அப்போது அவர் பையில் உள்ள துப்பாக்கியை எடுத்து மற்றொரு பையில் மாற்றி வைக்கும்போது எதிர்பாராமல் அந்த துப்பாக்கி வெடித்து ஒரு குண்டு அவருடைய இடுப்பு பகுதியை தாக்கியது. மனைவியின் கண் முன்னே இந்த சோக நிகழ்ச்சி நடந்தது.

## உள்ளங்கை குழந்தை

கனடாவில் உள்ள பவுல்-மோரிஸ் என்ற தம்பதிக்கு கடந்த வருடம் 25 வாரங்களிலேயே குறைபிரசவமாக பிறந்ததால் உள்ளங்கை அளவில் மட்டுமே இருந்தது. குழந்தையின் எடை வெறும் 635 கிராம் என்பது குறிப்பிடத்தக்கது. பிறக்கும்போதே நுரையிரல் நோய் மற்றும் மஞ்சள் காமாலையுடன் பிறந்த ஜெட் மோரீஸ் என்ற அந்த குழந்தையை பெற்றோர்கள் மிகவும் பாசத்துடன் வளர்த்தனர். தற்போது முழு ஆரோக்கியத்துடன் ஜெட் மோரீஸ் தனது முதலாவது பிறந்த நாளை கொண்டாடினர்.



- பூமியை போன்று மனிதர்கள் வசிப்பதற்கு ஏதுவாக இரண்டு புதிய கிரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. புதிய கிரகங்களை கண்டு பிடிப்பதற்காக கெப்ளர் மிஷன் என்னும் தொலை நோக்கியை கடந்த 2009ம் ஆண்டு நாசா விண்வெளிக்கு அனுப்பியது குறிப்பிடத்தக்கது.
- அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மகள் மலியாவின் படம் இணையத்தில் வைரஸாக பரவி வருகிறது. அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மூத்த மகள் மலியா, மிகவும் சாதாரணமான முறையில் டி சர்ட்டுடன் காணப்படும் புகைப்படம் ஒன்று இன்ஸ்டாகிராம் வழியாக பரவி வருகிறது.
- 1951ம் ஆண்டு முதல் உலக அழகியாக மகுடம் சூடப்பட்ட கிகி ஹகன்சன், நீச்சல் உடையில் பரிசினை வென்றார். இந்நிலையில் கடந்த 2001ம் ஆண்டு இந்த சுற்று போட்டியை மேடையில் நடத்த வேண்டாம் என போட்டி அமைப்பாளர்கள் முடிவு செய்தனர். கடந்த வாரம் லண்டனில் பெண்களுக்கு ஆதரவானவர்கள் ஒன்று கூடி, நீச்சல் உடை சுற்று செக்சியானது என்றும் பெண்களை அது அவமதிக்கிறது எனவும் போராட்டம் நடத்தினர். இந்நிலையில் இனிமேல் நீச்சல் உடை சுற்று இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை எப்போதும் ஆறாத வடுவா?

அரசியல் ஆய்வு

"இனப்பிரச்சினைக்கு நாளைக்கே வேண்டுமானாலும் தீர்வை தரத் தயாராக இருக்கிறேன். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை ஏற்றுக்கொள்ளாது" என்று வார இதழ்களின் ஆசிரியர்களுடன் நடத்திய சந்திப்பின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். இந்தப் பத்தி எழுதப்படும்போது, ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நடந்துகொண்டிருந்தது. இது அச்சிலும் இணையத்திலும் வெளிவரும்போது, ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் தெளிவான நிலையை காட்டியிருக்கும்.

இந்தத் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றால், அவர் கடந்த வாரம் குறிப்பிட்ட மேற்கூறிய கருத்து மிகவும் முக்கியமானதாக இருக்கும். அதாவது, இனப்பிரச்சினைக்கான தீர்வு அரசாங்கத்தின் கையில்தான் இருக்கிறது என்பதை அவரது கூற்று எடுத்துக்காட்டியிருக்கிறது. "இனப்பிரச்சினைக்கு அரசிடம் தீர்வை காண அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும். ஆனால், அதை பெற்றுக்கொள்வதற்கான தேவையோ, அக்கறையோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடையாது. அமெரிக்கா, இந்தியா அல்லது ஜெனீவா மூலம் தீர்வை பெற்றுக்கொள்ளலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நினைக்கிறது.

தீர்வு வழங்கப்பட்டுவிட்டால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அரசியல் செய்யமுடியாது. அதனாலேயே, அவர்கள் தீர்வு காணும் விடயத்தில் ஆர்வமின்றி செயற்படுகின்றனர். தமது அரசியல் தேவைகளுக்குதான் இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை காண்பதற்கு முன்வராமல், அதை பிச்சைக்காரன் புண்போல வைத்துக் கொண்டிருக்கின்றனர். நாளைக்கே வேண்டுமென்றாலும், எம்மால் தீர்வை தரமுடியும். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்" என்று குறிப்பிட்டிருந்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது முதலாவது பதவிக்காலத்தில் எதனைக் கூறினாரோ, அதனை தனது இரண்டாவது பதவிக்காலத்தில் செய்திருக்கவில்லை. போர் இறுதிக்கட்டத்தை அடைந்திருந்த காலகட்டத்தில், "இனப்பிரச்சினைக்கு என்னிடம ஒரு தீர்வு உள்ளது. விடுதலைப் புலிகளுடனான போரை முடிவுக்கு கொண்டுவந்த பின்னர், தமிழ் மக்களுக்கு அந்த தீர்வை வழங்குவேன்" என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாக்குறுதியளித்திருந்தார்.

எனினும், போர் முடிவுக்கு வந்த பின்னர், இரண்டாவது பதவிக்காலத்தில் அவரது நிலைப்பாடு தலைகீழாக மாறியிருந்தது. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தன்னிடம் கிடையாதென்றும் அதனை தீர்மானிக்கவேண்டியது நாடாளுமன்ற தெரிவுக்குழுவே என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துவந்தார். தன்னிடமோ, தனது அரசாங்கத்திடமோ இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான எந்தத் திட்டமும் இல்லை. அனைத்துக்கட்சிகளும் இடம்பெறும் நாடாளுமன்ற தெரிவுக்குழுதான் தீர்வு யோசனையை தயாரிக்கவேண்டும் என்ற பிடிவாதத்திலேயே ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக்காலத்தின் பெரும்பகுதியும் உருண்டோடியது. இதற்கென நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றும் அமைக்கப்பட்டது. ஆனால், அதில் அரச தரப்பினரை தவிர வேறெந்தக் கட்சியும் இணைய முன்வராத நிலையில், அந்த தெரிவுக்குழு முடங்கிப்போய் கிடக்கிறது. தெரிவுக்குழு மூலமே இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் தயாரிக்கப்படுமென்ற அரசாங்கத்தின் பிடிவாதத்தின் காரணமாகத்தான், இந்த முடக்கநிலை ஏற்பட்டது.

இந்நிலையில், தனது மூன்றாவது பதவிக் காலத்துக்கான தேர்தலை சந்திக்கவிருந்த சூழலில், மீண்டும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நாளைக்கே வேண்டுமானாலும், இனப்பிரச்சினைக்கு தீர்வை வழங்கத் தயாரென்று கூறியிருக்கிறார். ஆனால், அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளாது என்றும் அவர் ஆருடம் கூறியிருக்கிறார். அரசாங்கம் நாளைக்கே ஒரு தீர்வை வழங்கத் தயாரென்றால், அதனிடம் ஒரு தீர்வுத்திட்டம் இருக்கிறது என்றுதான் பொருள் கொள்ளவேண்டும். அவ்வாறாயின், அதனை ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் அரசாங்கம் முன்வைக்கத் தவறியதென்ற கேள்வி இந்தச் சந்தர்ப்பத்தில் எழுகிறது.

அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுக்களின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால், அரசியல் தீர்வு குறித்த சில யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றை பரிசீலித்துவிட்டு பதில் கூறுவதாக கூறிச் சென்ற அரச தரப்புக்குழுவினர் அதற்குப் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்திக்கவில்லை. அதுபோலவே, அரச தரப்புடனான பேச்சுக்களின்போது, தீர்வு யோசனையை முன்வைக்குமாறும் அவற்றை தாம் பரிசீலிக்கத் தயாரென்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திரும்பத் திரும்ப வலியுறுத்தியது.

ஆனால், இழுத்தடித்து வந்த அரச தரப்பு, பின்னர் ஒரேயடியாக தீர்வுத்திட்டத்தை தம்மால் முன்வைக்க முடியாதென்றும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவே அதனை முன்மொழிய வேண்டுமென்றும் கூறிவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின்போது, அரசாங்கத் தரப்பு போதிய முன்னாயத்தங்களை மேற்கொள்ளவில்லையென்று, அரச தரப்பின் பேச்சுக்குழுவில் இடம்பெற்றிருந்தவரும் மைத்திரிபால சிறிசேனவுடன் அரசாங்கத்திலிருந்து வெளியேறியவருமான கலாநிதி ராஜீவ விஜேசிங்க அண்மையில் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது, பேச்சுக்குழுவின் செயலராக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன, அதற்குரிய எந்த ஏற்பாடுகளையும் கவனிக்கவில்லை என்றும் அவர் செயலராக இல்லாமல், பேச்சுக்குழு உறுப்பினராகவே நடந்து கொண்டதாகவும் அவர் கூறியிருக்கிறார். அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போதிய தயார் நிலையிலேயே எப்போதும் பேச்சுக்கு வந்ததாகவும் கலாநிதி ராஜீவ விஜேசிங்க குறிப்பிட்டிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பேச்சுக்களை குழப்பியதாக அரசாங்கம் கூறிவந்தது. ஆனாலும், அது எத்தகைய சூழலில் முடங்கியது என்பது இப்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. இத்தகைய நிலையில், நாளைக்கே தீர்வு ஒன்றை வழங்கத் தயாரென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கருத்து, நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அப்பால், ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்கத் தயார் என்பதையா உணர்த்துகிறது? என்று தெரியவில்லை. அத்தகையதொரு நிலைப்பாட்டில் அரசாங்கம் இருந்திருந்தால், எதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் அதனை இதுவரை காலமும் முன்வைக்காமல் தட்டிக்கழித்து வந்ததென்ற கேள்வி எழுகிறது.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தீர்வு யோசனையை முன்வைக்காமலேயே, அதனை அவர்கள் ஏற்கமாட்டார்கள் என்று அரசாங்கமே முன்கூட்டிய தீர்மானம் எடுத்திருப்பது ஆச்சரியமான விடயம். ஐ.நா. விசாரணை தொடர்பாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முன்கூட்டியே தீர்மானித்துவிட்டு செயற்படுவதாக குற்றஞ்சாட்டும் வழக்கத்தைக் கொண்ட அரசாங்கத்துக்கு, தாம் வழங்கும் தீர்வை கூட்டமைப்பு ஏற்காதென்று தாமே கூறுவது முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒரு விடயம் என்பது தெரியாமல் போனது எப்படியென்று தெரியவில்லை. ஒருவேளை, தம்மிடம் உள்ள தீர்வுத்திட்டம், தமிழ் மக்களின் அபிலாஷைகளை தீர்க்காது என்பதை தெரிந்துகொண்டு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவ்வாறு கூறியிருக்கலாம். அரசாங்கம் வழங்க முன்வரும் ஒரு தீர்வுத்திட்டத்தை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பரிசீலனை செய்த பின்னரே அதுபற்றி தீர்மானிக்கமுடியும். அதற்கான சந்தர்ப்பத்தை அவர்கள் கோரியபோதிலும், அரசாங்கமே வழங்காமல் இருந்துவந்தது.

அதேவேளை, இனப்பிரச்சினை என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரச்சினை அல்ல. அது தமிழ் மக்களின் பிரச்சினையேயாகும். தமிழ் மக்களின் உரிமைகள் சார்ந்த அந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வை தேட தமிழ் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கிறதே தவிர, அது அவர்கள் மட்டும் சார்ந்த ஒரு பிரச்சினையல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு அவர்களுடன் மட்டும் பேச்சு நடத்தமுடியாதென்று கூறிவந்த அரசாங்கத்துக்கு, இந்த விபரம் கூடப் புரியாதென்று கருதமுடியாது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க அரசாங்கம் முன்வந்தால், அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூடத் தேவையில்லை.

தமிழர்களுக்கு தேவையான உரிமைகளையும் அதிகாரங்களையும் அரசாங்கமே கூட தன்னிச்சையாக பகிர்ந்தளிக்கமுடியும். அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது வேறெந்த தரப்பினரோ தடைவிதிக்க முடியாது. ஆனால், அரசாங்கம் அதனை செய்வதற்கு ஒருபோதுமே தயாராக இருந்ததில்லை. அதை விட, தமிழ் மக்களுக்கு ஏற்புடையதொரு தீர்வை அரசாங்கம் வழங்கிவிட்டால், அதனை கூட்டமைப்பு ஆதரிக்காது போனாலும், தமிழ் மக்கள் ஆதரிப்பார்கள். தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்ற ஒரு தீர்வை வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் அரசியல் செய்யமுடியாது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் வெற்றிகரமாக அரசியல் செய்ய முடியாதுள்ளமைக்கு, நடைமுறைச் சாத்தியமற்ற விடயங்களை முன்வைப்பதே முக்கிய காரணம். அதுபோலத்தான், தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதொரு தீர்வு முன்வைக்கப் பட்டுவிட்டால், அதை எதிர்த்து கூட்டமைப்பினால் அரசியல் செய்யமுடியாது.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினையை வைத்து அரசியல் செய்வதாகவும் அது தீர்க்கப்பட்டுவிட்டால், அவர்களால் அரசியல் நடத்தமுடியாது என்றும் அரசாங்கம் கூறும் குற்றச்சாட்டு அர்த்தமுடையதாக தெரியவில்லை. அரசாங்கத்தின் கையில்தான், இனப்பிரச்சினயை தீர்க்கின்ற பொறுப்பும் வல்லமையும் இருக்கின்றன. அதனை செயற்படுத்தும் துணிவும் முடிவும்தான் அவர்களிடத்தில் இல்லாத நிலை காணப்படுகிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பொறுத்தவரையில் தனது இரண்டாவது பதவிக்காலத்தில், மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தையும் கூட நாடாளுமன்றத்தில் கொண்டிருந்தவர். அந்தக் காலகட்டத்தில், அவர் இனப்பிரச்சினைக்கான தீர்வை கண்டிருக்கமுடியும். அதிகாரப்பகிர்வை சட்டமாக்கியிருக்க முடியும். அதனை செய்திருந்தால், இந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவை அவரால் சுலபமாக பெற்றிருக்க முடியும்.

போரினால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகளுக்கு கொஞ்சமேனும் பிராயச்சித்தம் தேடியிருக்கலாம். ஆனால், தமிழ் மக்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளித்தாலோ, இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை வழங்கினாலோ, சிங்கள மக்கள் தன்னை நிராகரித்துவிடுவார்களோ என்றுதான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பயந்தார். அவர் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் ஆதரவை தக்கவைப்பதில் கவனம் செலுத்தினாரே தவிர, தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்த்துவைப்பதில் அக்கறை கொண்டிருக்கவில்லை. அதனால்தான், இரண்டு பதவிக்காலங்கள் அவர் ஜனாதிபதியாக இருந்த போதிலும், தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணமுடியாது போனது.

அதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றால், அவர், தான் கூறியபடி நாளைக்கே தீர்வை வழங்க முன்வந்துவிடுவார் என்று எதிர்பார்க்கமுடியாது. ஏனென்றால், அவர் இதனை கூறியது தேர்தல் காலத்தில். தேர்தல் காலத்தில், அரசியல்வாதிகளும், அரசியல் கட்சிகளும் கொடுக்கின்ற வாக்குறுதிகள் எல்லாமே நடைமுறைக்கு வருவதோ, நிறைவேற்றப்படுவதோ இல்லை. அதுபோலத்தான், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த தேர்தலில் வெற்றி பெற்றால் கூட, அவர் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து மீண்டும் பழைய நிலைப்பாட்டுக்கே சென்றுவிடுவார். அல்லது, தனக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இல்லை என்று கூறி நழுவப்பார்க்கலாம்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் உறுதியாக ஆட்சி செலுத்திய போதே, இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை காண முயற்சிக்காத ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மீண்டுமொரு பதவிக்காலத்தை ஆளும் வாய்ப்பு கிடைத்தால், அதனை நிறைவேற்றுவார் என்று எதிர்பார்க்கமுடியாது. இனப்பிரச்சினையை வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் நடத்துகிறதோ, இல்லையோ தென்னிலங்கை அரசியல் சக்திகள் நன்றாகவே அதனை வைத்து அரசியல் நடத்துகின்றன என்பதே உண்மை. இந்தத் தேர்தலில் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள், எழுப்பப்பட்ட சர்ச்சைகள் எல்லாமே, தமிழர் பிரச்சினையுடன் தொடர்புடையவைதான் என்பதை வைத்துப்பார்க்கும்போது, இந்த முடிவுக்கு வரமுடிகிறது.

ஆக, இனப்பிரச்சினையொன்று இல்லாது போய்விட்டால், இலங்கையின் அரசியல் சக்திகள் எல்லாமே வலுவிழந்து போய்விடும். அதனாலேயே, இதனை தீர்க்க எந்த ஒரு அரச தரப்பும் தயாரில்லாமல் இருக்கிறது.



-- கே.சஞ்சயன் --

www.tamilmirror.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. $m + n = 9,\ mn = 5$ எனின், $m^2 + n^2$ இன் பெறுமதியைக் காண்க.

02. காரணிப்படுத்துக. $x^2 + 7xy + \frac{49}{4}y^2$

03. 5 மாணவர்களின் எடை (Kg) இல் வருமாறு. 45, 47, x, 50, 43.
    1. இவற்றின் ஆகாரம் 50 எனின் x இன் பெறுமானம் என்ன?
    2. இத்தொகுதியின் இடையத்தைக் காண்க.

04. 37 என்ற அடி பத்து எண்ணை அடி இரண்டில் தருக.

05. 4, 8, 12, 16 .......... என்ற கூட்டல் விருத்தியில் 18வது உறுப்பைக் காண்க.

06. கமலாவின் வயதின் மூன்று மடங்குடன் விமலாவின் வயதைக் கூட்ட 7 கிடைக்கும். கமலாவின் வயதின் இரு மடங்கிலிருந்து விமலாவின் வயதைக் கழிக்க -2 கிடைக்கும். எனின், ஒருங்கமை சமன்பாட்டைத் தீர்ப்பதன் மூலம் கமலா மற்றும் விமலாவின் வயதுகளைக் காண்க.

07. ரவி ரூ 50 பங்குகளை ரூ 60 வீதம் வாங்குவதற்கு ரூ12,000 ஐ முதலீடு செய்தார். அவர் அதிலிருந்து பெற்ற வருமானம் முதலீட்டின் 15% ஆகும்.
    1. அவர் பெற்ற வருமானம் எவ்வளவு?
    2. அவர் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை யாது?
    3. கம்பனி வழங்கும் பங்குகளின் எண்ணிக்கை யாது?
    4. ரவி அதே பணத்தை 20% வட்டி தரும் நிலையான வைப்பு ஒன்றில் முதலீடு செய்திருந்தால் அவருக்கு கிடைக்கும் வருட வருமானம் யாது?

08. தீர்க்க $a + b = 9,\ 2a - b = 24$

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### நீதிப் பாடல்கள் (புதிய பாடத்திட்டம்)

### விவேக சிந்தாமணி

இந்நூல் எக்காலத்திற்கு உரியது யாரால் எழுதப்பட்டது என்பது தொடர்பாக தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. நாயக்கர் காலத்திற்குரிய சிற்றிலக்கியம் என்றும் கூறுவர். நீதிக்கருத்துகள் சிருங்காரச்சுவை நிரம்பிய பாடல்களை உள்ளடக்கிய இவ்விலக்கியம் தனிப்பாடல்களின் தொகுப்பு என்ற கருத்தும் நிலவுகிறது.

தண்டா மரையுடன் பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டுகம்
வண்டோ கானகத்திடையிருந்து வந்து
கமல மதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலும் அறியார்
புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்
கலப்பர் கற்றோரே.

**பாட்டின் பொருள்** - தவளைகள் குளிர்ச்சி பொருந்திய தாமரையுடன் தண்ணீரில் ஒன்றாக பிறந்து அதிலேயே இருந்தாலும் அத்தாமரை மலரிலுள்ள தேனை உண்பதற்கு அறியாதவனாக இருக்கும். ஆனால் வண்டுகளோ தாம் வாழும் காட்டிலிருந்து இங்கு வந்து அத்தாமரை மலரில் தேனை உண்ணும். அது போல நீண்ட நாட்கள் பழகியிருந்தாலும் அறிவற்றவர்கள் நல்லவர்களின் உயர்ந்த குணத்தை அறியமாட்டார்கள். ஆனால் அறிவுடையோர் நல்லவர்களின் குணங்களை தாம் பார்த்த போது அறிந்து அவர்களுடன் உறவு கொண்டு சேர்ந்து மகிழ்ந்து வாழ்வார்கள்.

**வினா** : விவேக சிந்தாமணிப்பாடல்களில் அறிவுடையோர் அறிவற்றவர் ஆகியோரின் செயல்கள் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது என்பதை விளக்குக?

தொடரும்...

**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## பாடம் : விஞ்ஞானம்

01. மாயவன் ஒருவன் வீட்டு முற்றத்தில் தட்டையான பாறை மீது இருந்த இலைச்சருகுகளை சேர்த்து மூட்டினான். அது எரிந்து முடிந்ததும் பெருமழை பெய்தது. அடுத்த நாள் அக்கல்லில் வெடிப்புகள் காணப்பட்டன. இது எதற்கு உதாரணமாக அமையும்.
    1. பாறைகள் வானிலையால் அழிதல்
    2. பாறைகளின் தகனம்
    3. பாறைகள் உருவாதல்
    4. பாறைகள் இரசாயனப் பொருளால் அழிதல்

02. சிறுநீரகத்தில் அதீத வடிகட்டலுக்காக கொண்டுள்ள சிறப்பியல்பாக அமையாதது எது?
    1. அதிகளவு குருதி மயிர்க்குழாய்களைக் கொண்டிருத்தல்
    2. குருதி மயிர்க் குழாய்கள் மடிப்படைந்த நிலையில் காணப்படல்
    3. உட்காவுப் புன்னாடியின் விட்டம் வெளிக்காவுப் புன்னாடியின் விட்டத்திலும் பார்க்க பெரியது.
    4. உட்காவுப் புன்னாடியின் நீளம் வெளிக்காவுப் புன்னாடியின் நீளத்திலும் பார்க்க குறைந்தது.

03. இலங்கையை உலுக்கிய டெங்கு நோக்காவியான நுளம்பு மனிதனுக்கு எந்த நேரம் அதிகளவில் பாதிக்கின்றது?
    1. காலை 4.30 முதல் 10.30 வரையும், மாலை 4.00 முதல் 7.00 மணி வரையும்
    2. காலை 6.30 முதல் 10.00 வரையும், மாலை 3.30 முதல் 6.30 மணி வரையும்
    3. காலை 5.30 முதல் 9.30 வரையும், மாலை 4.00 முதல் 8.00 மணி வரையும்
    4. காலை 7.30 முதல் 9.30 வரையும், மாலை 5.00 முதல் 8.00 மணி வரையும்

04. உயிர் வாழும் சுவடுகள் என அழைக்கப்படுபவை எத்தகையவை?
    1. சுவட்டு சான்றுகளிற்கு மத்தியில் உருவான அங்கி
    2. இயக்கமில்லா நிலையில் உள்ள அங்கி
    3. பல மில்லியன் வருடங்களாக தொடர்ந்து மாறாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் அங்கி
    4. பல மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்து அழிந்த அங்கிகளின் பரம்பரை அலகுகள் அறியப்பட்டு அதே போன்ற அங்கிகள் குளோனின் முறையில் உருவாக்கப்பட்டு பெறப்பட்ட அங்கி

05. குருதியிலுள்ள நீரின் அளவு குறைவடையும்போது எவ்வோமோனின் செயற்பாடு காரணமாக மீண்டும் சிறுநீரகங்களினால் அகத்துறிஞ்சப்படும்?
    1. TSH
    2. ACTH
    3. ADH
    4. FSH

06. சுவாசத்தின் போது வெளிவிடப்படும் சக்தி எதனுள் சேமித்து வைக்கப்பட்டுள்ளது?
    1. குளுக்கோசு
    2. காபோவைதரேற்று
    3. அடினோசின் மூ பொசுப்பேற்று
    4. அமினோவமிலம்

07. தற்காலத்தில் செயற்கை சுவையூட்டியாக பயன்படுத்தப்படும் பொருள் எது?
    1. மொனோ சோடியம் குளுற்றாமேற்று
    2. ஐதரொட்சி தொலுயீன்
    3. பியூற்றலேற்றட்
    4. அப்பச்சோடா

08. கீழே தரப்பட்ட உப்புக்களில் $25^{\circ}c$ இல் கரைதிறன் குறைந்த உப்பு எது?
    1. வெள்ளி குளோரைட்டு
    2. பொற்றாசியம் சல்பேற்று
    3. கல்சியம் நைத்திரேற்று
    4. கல்சியும் காபனேற்று

## பாடம் : வரலாறு

01. புவியியலின் அமைப்புக் காரணமாக நிலை பெற்ற இராசதானி
    1.அநுராதபுர
    2.பொலநறுவை
    3.கண்டி
    4.சீதாவாக்கை

02. பின்வருவனவற்றுள் தொல்பொருள் மூலாதாரமாக கருத முடியாதது
    1.அம்பகமுகல்வெட்டு
    2.வெஸ்ஸகிரி கல்வெட்டு
    3.சமந்தபாஸாதிகாவ
    4.கல்பொத்த

03. வல்லிபுர பொற்சாசனம் மூலம் வெளிப்படும் விடயம்
    1 .விஜயபாகு காணிகளை பகிர்ந்தளித்தமை
    2. வசபனின் சுரங்கவழி நீர்ப்பாசனம்
    3. வசப மன்னனின் நாகதீப ஆட்சிப்பரம்பல்
    4. மகாசேனனின் நீர்ப்பாசன திட்டப்பணி

04. இறந்தவர்களுக்கான மரணச்சடங்கு சம்பிரதாயங்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெற்ற இடங்கள்
    1. கித்துல்கல,பாகியன்கல,பட்ட தொம்ப
    2.பட்டதொம்ப,அலுலென,பெல்லன்பதிபெல்லச
    3. பாகியன்கல,நில்கல,பெலிகல்கே
    4.இராவணன் எல்ல,நில்கல,கித்துல்கல

05. பின்வருவனவற்றுள் முதல் தேசிய அரசு
    1. ஸ்பானியா
    2. போர்த்துக்கல்
    3. இங்கிலாந்து
    4. ஒல்லாந்து

06. இத்தாலிய இணைவின் போர்வீரன் என அழைக்கப்படும்நபர்
    1. பீஸ்மார்க்
    2. கரிபாஸ்டி
    3. கவூண்கவுர்
    4. ஜோசப் மஸினி

07. அலைச் செயற்பாடு காரணமாக குளக்கட்டின் அரிப்பைத் தடுக்கும் குளத்தின் பகுதி
    1. கலிங்கற்தொட்டி
    2. சுருங்கை
    3. அலைதாங்கி
    4. கலிங்கல்

08. இலங்கையினல் ஆங்கிலேயர் ஆட்சினால் ஏற்பட்ட விளைவு அல்லாதது
    1. பெருந்தோட்டபயிர்ச் செய்கை அறிமுகம்
    2. ஏற்றுமதி இறக்குமதி பொருளாதார கோலம் உருவாக்கம்
    3. மத்தியதர வர்த்தகம் உருவாக்கம்
    4. பரீஷ் பாடசாலை(கோவில்பற்று)தோற்றம்

09. இந்திய சுகந்திர போராட்டத்தில் பஞ்சாப் சிங்கம் என வர்ணிக்கப்படும் தேசிய வீரர்
    1. லாலா லஜ்பதிராய்
    2. தாதாபாய் நபுரோஜி
    3. பாலகங்காதரதிலகர்
    4. சுபாஸ் சந்திரபோஸ்

10. இரண்டாம் உலகமகாயுத்தத்தில் "அச்சு நாடுகளின்" கூட்டணி
    1. ரஷ்யா, யப்பான், ஜேர்மனி
    2. பிரான்ஸ் யப்பான், ஜேர்மனி
    2. ரஷ்யா, இற்ராலி, ஜேர்மனி
    4. இத்தாலி, யப்பான், ஜேர்மனி

## Grammar

Ex 01 :-

***Fill in the blanks with the correct forms of "be" in the following passage. You may have to use a word more than once.***

| am, is, are, was, were |
|---|

Polonnaruwa ........................ second great capial of ancient Srilanka after Anuradhapura and ...................... located about 100km to the south east of the island. It ..................... a famous capital for about 300 years. During this period many Buddhist structures .................................. built. But while they ...................... built in a later age, these structures .................... smaller in size and magnificence to those of more ancient times. Most of these ...................... beautiful and magnificent. By the 13th century it .................................. attacked by the Indian invaders. As a result, polonnaruwa ...................... eventually abandoned. This ancient city ................ recognized as a 'World Heritage' site by UNESCO.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைப்பு

சி.சின்னையா

திருகோணமலை கன்னியாவில் கடந்த சனிக்கிழமை (03.01.2015) கிராம இளைஞர் முன்னேற்ற கழகம் வரிய மக்களின் சுமைகளை குறைக்கும் முகமாக பிள்ளைகளுக்கான பாடசாலை உபகாரணங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பத்மநாபா E.P.R.L.F அமைப்பாளர் சத்தியன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். கிராம இளைஞர் முன்னேற்ற கழகத்தின் தலைவர் "மோகன்" இறைவணக்கத்துடன் இந் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதனை தொடர்ந்து சத்தியன் பேசுகையில் "இளைஞர்களின் பங்களிப்பே வளர்ச்சி கண்ட சமுதாயத்தை உருவாக்க முடியும். இளைஞர்கள் தங்களை யாரும் கவனிப்பதில்லை என்று ஆரம்பத்தில் சிறு சிறு குற்றங்களை ஆரம்பிப்பார்கள். அதுவே காலபோக்கில் பெரிய குற்றங்களாக வளர்ந்து விடும்" என்பதை சுட்டி காட்டியதுடன், "தவறுகளை எப்போதும் திருத்த முடியும். ஆகவே கடந்த கால வாழ்க்கையை நினைத்து எதிர் காலத்தை மண்ணாக்காமல் இன்றே எமது சமூதாயத்தின் முன்னேற்றத்திற்காக சமுக சேவை செய்யும் நோக்குடன் வாழ பழகி கொள்ள வேண்டும்" என்று இளைஞர்களை கேட்டு கொண்டார்.







# திருக்குடமுழுக்கு பெருஞ் சாந்தி விழா

- சசிகுமார் -

வரலாற்றுச்சிறப்பு மிக்க திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலயத்தின் திருக்குடமுழுக்கு பெருஞ் சாந்தி விழா நிகழுவதற்கு முகூர்த்தம் 11.02.2015 அன்று திருருள் கூடியுள்ளது. அதனையொட்டி 07.02.2015 தொடக்கம் 10.02.2015 ரை எண்ணெய்க்காப்பு நிகழ்வு இடம்பெறும். எண்ணெய்க்காப்புக்கு சாத்தும் எண்ணெயை கோவிலிலேயே பெற்றுக்கொள்ளலாம் என ஆலய நிர்வாக சபை தெரிவித்துள்ளது.

கும்பாபிஷேகத்தினை தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறும். அத்துடன் மண்டலாபிஷேகம் செய்ய விரும்பும் கோணேச அடியார்கள் முன்கூட்டியே பதிவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டிக கொள்ளப்படுகின்றீர்கள். இலங்கை யில் மிகப்பிரசித்தி பெற்ற திருகோணமலையில் அமைந்துள்ள பல அற்புதங்களைக் கொண்டுள்ள திருக்கோணேஸ்வரக் கோவிலின் மஹா கும்பாபிஷேகத் திருவிழாவினை கண்டுகளித்து திருக்கோணேஸ்வரரின் அருட் கடாட்சத்தைப் பெற்றுச் செல்லுமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றார்கள் திருகோணமலைகோணேஸ்வர ஆலய பரிபாலனசபையினர்.




# உலர் உணவு உதவி

அம்கோர் நிறுவனத்தின் முதலாவது வேலைத்திட்டமாக 2014 மார்கழி மாதம் மட்டக்களப்பில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு "வேளைக்குஉணவு" எனும் அடிப்படையில் ஒருவாரத்துக்குத் தேவையான உலர் உணவு வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. வெல்லாவெளி, களுவாஞ்சிக்குடி, செங்கலடி ஆகிய பிரதேசசெயலாளர் பிரிவுகளிலுள்ள தும்பங்கேணி, திக்கோடை, எருவில் தெற்கு - கோடைமேடு, மகிழூர் முனை, பங்குடாவெளி, ஐயங்கேணி, தளவாய் ஆகிய ஏழு கிராமங்களில் சுமார் 3500 குடும்பங்களுக்கு சராசரியாக 2500 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

# உபகரணங்கள் வழங்கப்பட்டது

"மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படுகின்ற வறுமையை ஒழிப்பதாக இருந்தால் இந்த மாவட்டத்தில் கல்வி மறுமலர்ச்சியும் விழிப்புணர்வும் ஏற்பட வேண்டும்" என ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மத் ஹனீபா தெரிவித்தார். ஏறாவூர் சமூக ஆய்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் வறிய மாணவர்களுக்கு பொருளாதார மற்றும் உளவியல் ரீதியிலான உதவிகளைச் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை (05.01.2015) அறபா வித்தியாலயத்தில் ஏறாவூர் சமூக ஆய்வு நிறுவனத்தின் தலைவர் எம்.எம்.அஷ்ரப் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த வறிய தமிழ் முஸ்லிம் மாணவர்கள் 100 பேருக்கு தலா 1300 ரூபாய் பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.



# தைத்திருநாளாம் – பொங்கல் திருவிழா
## அனைவருக்கும் தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!!

மஞ்சள் தோரணங்கள் கட்டி, புது அரிசியில் பொங்கல் பொங்கி, கரும்பு உண்டு கொண்டாடப்படும் பொங்கல் விழா தைப்பொங்கல். தை 1 அன்று தமிழர்களால் சிறப்பாக கொண்டாடப்படும் ஒரு தனிப்பெரும் விழா. தமிழர் திருநாளாக இவ்விழா சமயங்கள் கடந்து அனேக தமிழர்களால் கொண்டாடப்படுகிறது.

பொங்கல் பண்டிகை நான்கு நாள் பண்டிகையாகும். மார்கழி கடைசி நாளன்று போகி கொண்டாடப்படுகிறது. அந்நாளில், பழையன கழித்து புதியன புகுத்தல் வழக்கம்.

தை முதல் தேதியன்றே தமிழ்ப் புத்தாண்டு தொடங்கும் நாள் என்று மூத்த தமிழ்ச் சான்றோர்களின் வாக்கினைப் பின்பற்றி, தை முதல் தேதியை தமிழ்ப் புத்தாண்டாக கடைபிடிக்கப்படுகிறது. "பொங்கல் பண்டிகை" என்பது அறுவடைத் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. ஆண்டு முழுவதும் நமக்கு உதவி புரியும் இயற்கை சூரியனுக்கும், விவசாயத் திற்குப் பயன்படும் கால்நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் நாளாக பொங்கலைக் கொண்டாடி மகிழ்கிறோம்.

பொங்கல் என்பதற்கு "பொங்கி வழிதல்", "பொங்குதல்" என்பது பொருள். அதாவது புதிய பானையில், புத்தரிசியிட்டு, அரிசியில் இருந்து பால் பொங்கி வழிந்து பொங்கி வருவதால், தை பிறந்துள்ள புத்தாண்டு முழுவதும் நம் வாழ்வும், வளமும் அந்தப் பால் போன்று பொங்கி சிறக்கும். மகிழ்ச்சியும், திளைப்பும் ஒருசேரப் பல்கிப் பெருகுவதோடு, அறுவடை மென்மேலும் அதிகரிக்கும் என்பதே இந்தப் பண்டிகையின் மேலோங்கிய தத்துவமும், தொன்றுதொட்டு வரும் நம்பிக்கையுமாகும்.

பொங்கல் தினத்தன்று வயல்களில் விளைந்து, அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிர்களில் சிறிதளவைக் கொண்டு வந்து வீட்டில் படைத்து வணங்குவதும் வாடிக்கையாக உள்ளது. தவிர, காடுகளில் விளையக்கூடிய அனைத்து வகை காய்கறிகளையும், பூமிக்குள் விளையும் கிழங்கு வகைகளையும் படைத்து வழிபடுகிறார்கள்.

அறுவடை தொடங்கியதைக் குறிக்கும் வகையில், பயிர் விளைச்சலுக்கு உதவிய மழை, சூரியன், கால்நடைகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு நன்றி தெரிவித்து அவர்களுக்கு வேண்டியதைச் செய்யும் நாளே தைப் பொங்கல் திருநாள் எனலாம்.

பொங்கல் தினத்தன்று வீட்டின் வாசலில் வண்ணக்கோலமிட்டு, அதன்மீது அடுப்புக் கல்லை வைத்து அவற்றில் புதிய பானைகளில் வெண்பொங்கலும், சர்க்கரை பொங்கலும் தனித்தனியே செய்து, சூரியனுக்குப் படைத்து வழிபடுகிறோம்.

இயற்கை வளத்தால், மும்மாரி மழை பொழிந்தால் மட்டுமே விவசாயம் பெருகும். காடு, வயல் நனையும். சூரிய வெளிச்சம் பட்டால்தான் பயிர் வளர்ச்சியடைந்து சாகுபடி சிறக்கும்.

விளைந்த பயிரை அறுவடை செய்து தானியமாக்குவதற்கு தொழிலாளர்கள் உதவுகிறார்கள். பயிர் நடுவதற்கு ஏதுவாக உழவுக்கும், அறுவடைக்குப் பின் போரடிப்பதற்கும், விளைந்த தானியங்களை உரிய இடத்திற்குக் கொண்டு செல்வதற்கும் கால்நடைகள் பெரிதும் உதவுகின்றன. எனவே தான் விவசாயத் தொழிலாளர்களை வீடுகளுக்கு அழைத்து, சூரியனுக்குப் படைத்த பொங்கல் உள்ளிட்டவற்றை அளித்து வயிறாரச் சாப்பிடச் செய்வதுடன், அவர்களுக்குத் தேவையான வேட்டி, துண்டு, சேலை உள்ளிட்ட துணிகளையும் வழங்கி கௌரவிக்கின்றனர்.

பொங்கல் திருநாளில் உறவினர்கள் ஒருவரையொருவர் சந்தித்து, பேசிக் கொள்வதுடன் நீண்ட காலம் பார்க்காமல் இருப்பவர்களும் சந்திக்க ஏதுவாகிறது. இதனால் உறவினர்களுக்கு இடையேயான உறவும் வலுப்படும்.

"உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்பதற்கேற்ப ஆண்டு முழுவதும் விவசாயத்திற்கு பயன்படும் எருதுகள் உள்ளிட்ட கால்நடைகளுக்கு பொங்கல் வைத்து படைத்து, அவற்றுக்கும் அளித்து, நாமும் உண்டு மகிழ்கிறோம். இதற்காகவே மாட்டுப் பொங்கல் என தனியாக ஒரு நாளில் கொண்டாடி மகிழ்கிறோம்.

மாடுகளின் கொம்புகளுக்கு வர்ணம் தீட்டி, சிங்காரித்து அவற்றின் கழுத்தில், உரிமையாளரின் வசதிக்கேற்ப கரும்பு முதல் வடைமாலை வரை கட்டி சாலைகளில் ஓட விடுவதும் மாட்டுப் பொங்கலின் சிறப்பாக அமைகிறது. துள்ளித்திரிந்து ஓடிவரும் மாடுகளைப் பிடிக்கும் கட்டிளங்காளைகளாக விடலைகளும், விடலைகளை வேடிக்கை பார்க்கும் இளம் பெண்களும் மகிழ்ச்சி பூரிப்பில் திளைப்பதும் தைப் பொங்கல் முடிந்த மறுநாளில் தான்.

தமிழர் திருநாளாம் பொங்கலை இன்றளவும் கொண்டாடுவதில் இருந்தே பண்டைய காலத்தில், வாழ்ந்த தமிழ் மக்களின் தொன்மைச் சிறப்புகளை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. தற்கால இளைய சமுதாயத்தினருக்கும், பல்கிப் பெருகிவிட்ட பெருநகர வாழ்மக்களுக்கும் தமிழர்களின் பாரம்பரிய கலாசாரத்தை பறைசாற்றுவதாகவும் தைப் பொங்கல் விளங்குகிறது என்பதை மறுப்பதற்கில்லை.




முற்றும் . . .

- தன்யா --

## மக்கள் முரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 02

01. ஒரு வாகனத்தரிப்பிடத்திலுள்ள முச்சக்கர வண்டியின் சில்லுகளின் எண்ணிக்கை 84 எனின், தரிப்பிடத்திலிருந்த முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை எத்தனை?
(1) 24 (2) 28 (3) 38

02. வரதனை விட சுதன் 20 ரூபா அதிகம் பெறக்கூடியவாறு 120 ரூபாவை இருவருக்கும் பங்கிட்டால் வரதன் பெறும் பணம் யாது?
(1) 50 ரூபாய் (2) 70 ரூபாய் (3) 60 ரூபாய்

03. "கரகம்" என்ற சொல் 5354 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது எனவே பரதம் என்ற சொல் குறிப்பது?
(1) 9314 (2) 4324 (3) 2354

**கீழே தரப்பட்ட கருத்திற்கேற்ற பழமொழியைத் தெரிவு செய்து கோடிடுக.**

04. வீண் செலவு ஆயினும் அதனை அளவோடு செய்ய வேண்டும்.
(1) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
(2) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
(3) அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

05. அவரவருக்கு அவரவர் உடைமைகள் சிறந்தனவாகவே இருக்கும்.
(1) அழுதாலும் பிள்ளையை அவளே பெறவேண்டும்
(2) காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
(3) ஆனைக்கும் அடிசறுக்கும்

**முதலில் தரப்பட்ட தொடர்பினை அவதானித்து 06ஆம், 07ஆம் வினாக்களில் சரியான கருத்தைத் தரும் விடையைத் தெரிவு செய்க.**

06. பலாப்பழம் : பழம் எனின், பசுக்கன்று : ..............................
(1) குட்டி (2) பிள்ளை (3) கன்று

07. பால் : பாற்கட்டி (சீஸ்) எனின், தண்ணீர் : ............................
(1) நெய் (2) மோர் (3) பனிக்கட்டி

**08 - 10ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களை வாக்கியங்களில் எவ்விதத்தில் பயன்படுத்தலாம் என்பதைக் குறிக்கும் விடையின் கீழ்க் கோடிடுக.**

08. பெரிய, நல்ல, நீல
(1) அடைமொழியாக (2) வினையெச்சமாக (3) பெயரெச்சமாக

09. இலை, அணில், ஓணான் ஆகிய சொற்களுக்கு முன்னால் இடவேண்டியது,
(1) ஒரு (2) ஒன்று (3) ஓர்

10. காடு, வண்டு, நாய் ஆகிய சொற்களுக்கு முன்னால் இடவேண்டியது,
(1) ஒரு (2) ஒன்று (3) ஓர்

**பின்வரும் பாடலை வாசித்து விடையளிக்குக.**

வண்ண வண்ண பூச்சியே
வட்டம் இட்டு பூக்களில்
என்ன தேடித் திரிகிறாய்
எடுக்கத் தேனா பார்க்கின்றாய்

மெல்லக் குழாயை வைக்கவும்
மெதுவாய் தேனை உறிஞ்சவும்
செல்ல வண்ணப் பூச்சியே
சொல்லித் தந்ததாரோ சொல்

என்ன என்ன வண்ணங்கள்
இருக்கும் உந்தன் செட்டையில்
எண்ண எண்ண ஆசைதான்
எனக்கு விரல் போதாதே

- வித்துவான் சி. குமாரசாமி -

1. இப்பாடலில் எப்பிராணியைப் பற்றிக் கூறப்படுகிறது? (..................................)
2. முன்னிலை ஒருமைப் பெயர்ச் சொல்லை எழுதுக? (..................................)
3. "மெல்ல" என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக? (..............................)
4. இப்பாடலை இயற்றியவர் யார்? (............................)
5. பாடலிலுள்ள சினைப் பெயரை எழுதுக? (..............................)
6. ஆசை என்பதன் ஒத்த சொல்லை எழுதுக? (..................................)
7. தேனை எவ்வாறு உறுஞ்சுகிறது? (..................................)
8. "பார்க்கின்றாய்" என்பது எக்காலத்தைக் குறிக்கிறது? (..................................)
9. வண்ணங்கள் எங்கே உள்ளன? (..........................................)
10. "எனக்கு விரல் போதாதே" என்பதனால் கருதப்படுவது யாது? (.....................)



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

## சிறுவர் முரசு



## கொடுத்துப் பெறுதல்



ஒரு புத்த மடாலயத் தலைவர் மிகவும் கவலையில் இருந்தார். ஒரு காலத்தில் அவரது மடாலயம் அந்தப் பகுதியிலேயே சிறப்பும் மதிப்பும் பெற்று விளங்கிய ஆலயம். தற்போது மதிப்புக் குறைந்து பாதாளத்திற்குப் போய்க் கொண்டிருந்தது அவருக்குத் தெளிவாக விளங்கியது. மடத்தின் உள்ளேயே பிக்ஷுக்கள் யாரும் ஒருவரை ஒருவர் மதிக்காமல் தன்னிச்சையாகச் செயல் பட்டுக் கொண்டிருந்தார்கள்.

பொறுக்க இயலாமல் ஒரு நாள் நம் தலைவர் தன்னை விட அனுபவத்தில் சிறந்த ஒரு குருவைத் தேடிப் போனார். தன் பிரச்சினையை எடுத்துச் சொன்னார்.

அந்தக் குருவும் சற்று நேரம் ஆழ்ந்து யோசித்து விட்டு இவர்களுக்கு உண்மையை உணரவைப்பதற்காக பொய்யை தான் உரைக்க வேண்டும் என சிந்தித்து விட்டு, பிறகு தலைவரைப் பார்த்து "உங்கள் மடத்தில் புத்தரே வந்து தங்கியிருக்கிறார். நீங்கள் எவரும் அவரைக் கண்டு கொள்ளவும் இல்லை. மதிக்கவும் இல்லை. பின் எப்படி சிறப்பு செழிக்கும்?" என்று கேட்டார்.

இதைக் கேட்ட நம் தலைவர் வியப்பு மாறாமலே மடத்திற்குத் திரும்ப வந்து அங்கே இருந்த புத்த பிக்ஷுக்களுக்கு விபரம் சொன்னார். அவர்களுக்கும் ஆச்சரியம். அந்தக் கணத்தில் இருந்து சுற்றியிருப்பவர்களில் ஒருவர் கடவுளாக இருக்கக் கூடும் என்ற அனுமானத்தில் எல்லோரையும் பணிவாகவும், அன்பாகவும், மிகுந்த மரியாதையுடனும் ஒவ்வொருவரும் அணுகினார்கள். நாளடைவில் மடத்தின் சிறப்பு பல மடங்கு உயர்ந்து போனது என்பதைச் சொல்லத் தேவையே இல்லை!

கூடிச் செயல் படும் போது கொடுத்துப் பெறுதல் அவசியமான ஒரு சூட்சுமம் ஆகும்.

**- - அனைவரையும் நேசித்தால் வீடும், நாடும் செழிக்கும் - -**


குட்டிக்கதை



## நானும் என்னுடைய பொம்மையும்

எனது பொம்மு குட்டியை என் அம்மாதான் எனக்கு பரிசாக தந்தார். எனது பொம்மு எப்போதும் என் கூடவே தான் இருப்பாள். பாடசாலைக்கு செல்லும் போது அவளை பிரிந்து செல்ல மனமில்லாமல் செல்வேன். தூங்கும்போது, சாப்பிடும் போது, விளையாடும் போது மற்ற எல்லா நேரங்களிலும் என் பொம்மு என் கூடவே இருப்பாள்.

*க. பிருந்தவி, தரம் -04*
*திருகோணமலை*



*ஏபாத்திமா நஜா,*
*மொகமட்யா வித்தியாலயம்.*

**சிந்திக்க .. ..**
நீ யாருக்காக வாழ்கின்றாயோ
அவருக்காக சிலவற்றை விட்டுக்கொடு
உனக்காக யார் வாழ்கின்றாரோ
அவரை ஒரு போதும் விட்டுக்கொடுக்காதே

## வாழ்க்கையில் வளம்பெற

அறிவை வளர்த்துக் கொள்ள
அவசியம் வாசிப்பு தேவை
ஆற்றலை பெருக்கிக் கொள்ள
அவசியம் முயற்சி தேவை!

அமைதியை ஏற்படுத்த
அலை பாயும் மனதை
அடக்குதல் அசியம்!

சண்டையை தவிர்த்திட
சமரசம் அசியம்
சற்குணனாய் வாழ
நற்குணம் அசியம்!

வாழ்க்கையில் வளம்பெற
ஊழலற்ற உண்மை
உழைப்பு அவசியம்!

- கவிக்குயிலன்



## பொது அறிவு - 04

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும்.

01. உலகின் முதல்தர இணையத்தேடுதல் மையம் எது? Google
02. உலகின் முன்னணி மென்பொருள் ஏற்றுமதி நிறுனம்? மைக்ரோசொப்ட் நிறுவனம்
03. நடைமுறைச் சொத்தில் திரவத்தன்மை குறைந்தது எது? சரக்கிருப்பு
04. 2014இல் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட தபால் அட்டையின் விலை யாது? ரூ8
05. தமிழ் விக்கிப்பீடியா எப்போது ஆரம்பிக்கப்பட்டது? செப்படம்பர் 2003 இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய....

பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

நடந்து முடிந்த தேர்தலில் நாடளாவிய ரீதியில் அறுபத்தியிரண்டு லட்சத்தப் பதினேழாயிரத்து நூற்று அறுபத்தியரண்டு வாக்குகளைப் பெற்ற மைத்திரி மொத்தச் செல்லுபடியான வாக்குகளின் 51.28வீழக்காட்டைத் தனதாக்கி இவ்வெற்றியை சப்படுத்தியுள்ளார். மகிந்த ராசபக்ச ஐம்பத்தியேழுலட்சத்து அறுபத்தியெட்டாயிரத்துத் தொன்னூறு வாக்குகளைப்பெற்று மொத்தச் செல்லுபடி வாக்குகளின் 47.58 வீதத்தைப் பெற்றுள்ளார்.

இலங்கையின் சனாதிபதி வரலாற்றில் யாராலும் தமது இரண்டாவது பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் சனாதிபதியாக இருக்க முடியாது என்பது இம்முடிவுகளின் ஊடாக உறுதியாகியுள்ளது.

மூன்றாவது தடவையாகவும் பதவியேற்கக் கூடியவாறு 18வது அரசியல் அமைப்புத் திருத்தம் ஊடாக அரசியலமைப்பில் ஏற்பாடுகளைச் செய்திருந்த மகிந்த ராசபக்சவால் தனது மூன்றாவுது பதிவிக்காலத்தை வெல்ல முடியவில்லை. மேலும் இரண்டு வருடங்கள் ஆட்சியில் இருக்கக்கூடிய வாய்ப்பிருந்தும் சனாதிபதித் தேர்தலை உடனடியாக நடத்தி முடித்ததால் தனது சனாதிபதவியை மகிந்த ராசபக்ச இழந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஆட்சி மாறும்...

வேட்பாளரான புதிய சனாதிபதி ஆட்சி ஏறியிருப்பதுடன் அவருக்கு தமது முழு ஆதரவையும் முஸ்லிம் காங்கிரஸ் வழங்கியிருப்பதாலும் ஏனைய மாகாணங்களை விட கிழக்கு மாகாண ஆட்சியே ஆட்டம் காணும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12ம் திகதி கூடவுள்ள கிழக்கு மாகாண சபையின் அமர்வுகளில் 2015ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண வரவு செலவுத் திட்டமும் சமர்ப்பிக்கப்படவுள்ளமை பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆட்சிக் கவிழ்க்கப்படுமாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்தே அடுத்த ஆட்சி உருவாகும் வாய்ப்பபுக்கள் கிழக்கில் உள்ளது. ஏற்கனவே பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பதில் முஸ்லிம் காங்கிரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒன்றுபட்டிருந்ததுடன் சம்பந்தருடன் இணைந்து பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாக ஹக்கீம் ஒரு முறை தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஏமாற்றப்பட்ட...

மாவட்டச் செயலகத்தில் மீள் குடியேற்றத்திற்குப் பொறுப்பாகவிருக்கும் நிர்வாக அதிகாரியும் கடந்த வாரம் தேர்வு செய்யப்பட்ட முகாம் மக்கள் சிலரை மீள்குடியேறக் கூடிய இடங்களை அடையாளம் காட்டுவதற்காக அழைத்துச் சென்றிருந்தனர். அப்போது அப்பிரதேசத்தின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல்வாதிக்கும் விலை பேசப்பட்டதாகவும், அவரும் மீள் குடியேற்றம் நடைபெறுமாயின் தான் ஆதரவு வழங்குவதாகவும் உறுதியிளித்திருந்தாராம்.

எனினும் குடியேற்றுவோம் என்ற உறுதி மொழிக்கமைய அப்போதைய சனாதிபதிக்கு வாக்களிக்க வேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்ட போது அவை மக்களால் நிராகரிக்கப்பட்டிருந்தன.

தற்போது சம்பூரில் ஏழாம் வட்டாரத்தில் காளிகோயிலுடன் இணைந்த பிரதேசங்களில் சுமார் ஐம்பது குடும்பங்கள் இருக்கக்கூடியதான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் இரண்டு குடும்பங்கள் தமது காணிகளில் தற்காலிகக் கொட்டகைகளை அமைத்துக் குடியேறியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

படிப்படியாகக் குடியேற்றம் நிகழும் எனக் கடந்த சனாதிபதித் தோதலில் வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும் வாய்ப்புக்கள் இருக்கின்றதா எனத் தெரியவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

## விசாரணைகள்....

கட்சியென அடையாளப்படுத்தப்பட்டதுமான ஜாதிக ஹெல உறுமய

தமது ஆதரவின் பின்னரான ஊடகவியலாளர் அறிக்கையில் இவர்கள் மற்றும் வடக்கில் சமூகப் பணியாற்றிக் கொண்டிருப்பதாகக் கூறப்படும் கே.பி எனப் பிரபலமாக அறியப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னால் ஆயுதத் தரகர் எனச் சர்வதேசத்தால் சந்தேகிக்கப்படும் குமரன் பத்மநாதன் ஆகியோரின் மீத விசாரணைகள் நடாத்தப்படும் என தெரிவித்திருந்தது.

அதேவேளை தனது சனாதிபதிப் பரப்புரையின் போது தேவையேற்படின் உள்நாட்டு விசாரணையொன்றை முன்னெடுக்கத் தாம்

## மே வரை....

தற்போதைய நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அங்கத்தவர்கள் தமக்கான அரச ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் ஐந்து வருடங்களைப் பூர்த்திசெய்ய வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

அவ்வாறான நாடாளுமன்ற உறுப்பினர்களே நாடாளுமன்றைக் கலைக்க வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதனை முன்னைய சனாதிபதி ஏற்றுக்கொண்ணடதாகவும் தெரிகின்றது. செய்யப்பட்டுள்ள

## தேர்தல் ஆணை...

காட்சிகளை ஒலிபரப்ப இவர்கள் எடுத்த முயற்சியைத் தடுக்க முனைந்த தேர்தல் ஆணையாளரின் மீதே தாக்குதல் நிகழ்த்தப்பட்டிருந்தது. அத்துடன் அவரது கையடக்கத் தொலைபேசியும் சேதமாக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் தமது உடமைகளுக்கு அவர் சேதம் விளைவித்ததாகத் தோதல் ஆணையாளருக்கு எதிராக எதிரணியினர் காவல்துறையில் குற்றச்சாட்டுக்களைப் பதிவு செய்துள்ளனர்.

ஆணையாளரைத் தாக்கிய இரு செயலாளர்களையும் காவல்துறை நீதிமன்றில் முன்நிலைப்படுத்திய போது அவர்களை எதிர்வரும் 12ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஷிராணி...

சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களால் அவர் பதவி பறிக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து முன்னாள் சனாதிபதிக்கு நெருக்கமானவர் என சந்தேகங்கள் தெரிவிக்கப்பட்ட முன்னாள் அற்றோனி ஜெனரல் மொஹான் பீரிஸ் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டிருந்தார். தற்போது மீண்டும் ஷிராணி பண்டாரநாயக்க தமது பழைய பதவிக்கு நியமிக்கப்படும் வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன.

அதேவேளை அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள மற்றொரு முக்கியமானவரான முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா மீண்டும் பதவிநிலைக்கு உள்வாங்கப்படுவார் எனத் தெரிகின்றது.

2010ம் ஆண்டில் நடைபெற்ற சனாதிபதித் தோதலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த அவர் பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகி பதவி நிலைகள் அனைத்தையும் இழந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் தற்போதைய அரசின் கீழ் அவர் இலங்கையின் முதலாவது ஐந்து நட்சத்திர ஜெனரலாகவும், பீல்ட் மார்சல் என்ற அதியுயர் இராணுவப் பதவி நிலையையும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் புதிய அரசின் பாதுகாப்புச் செயலாளர் யார்? என்ற கேள்விக்கு தற்போதுவரை விடைகள கிடைக்கவில்லை.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளரான கோட்டாபாய இராசபக்சவின் பதவி புதிய சனாதிபதி பதவியேற்றதும் தானாகவே இல்லாது போய்விட்டது குறிப்பிடத்தக்கது.

## விடைத்தாள்....

ஒப்புநோக்குனர்கள் தெரிவித்தனர்.

திருகோணமலை மாவட்டத்தின் பிரபல்யமான பெண்கள் பாடசாலையில் சிற்றுண்டிகளின் விலைக்கேற்ப அதன் அளவு இருக்கவில்லை எனத் தெரிவித்துள்ள ஆசிரியர்கள் இதே அளவான சிற்றுண்டியைக் குறைந்த விலையில் அப்பாடசாலைக்கு முன்னுள்ள உணவகங்களிற் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்ததாகத் தெரிவித்தனர். ஆனால் விடைத்தாள் திருத்தும் பணிகளில் ஈடுபட்ட ஆசிரியர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படாமையால் அவர்கள் பாடசாலையின் சிற்றுண்டியகத்திலேயே சிற்றுண்டிகளைப் பெற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தனர் எனத் தெரிவித்துள்னர்.

அத்துடன் ஏன் இவ்வாறு விலை கூட்டி விற்கின்றீர்கள் என விசாரித்தபோது மேலதிகப் பணம் அப்பாடசாலையின் ஆசிரிய நலனோம்பு நிதிக்கு சேர்க்கப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளதாகவும் அவ்வாசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதே வேளையில் சிற்றுண்டிகளை வினியோகிக்கப் பாடசாலை மாணவிகளே குறித்த ப்ாடசாலையால் பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிகின்றது.

## தேசிய அரசு...

"மலரும்" இணையத்துக்குத் தகவல் வெளியிட்டார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முழு அளவு ஆதரித்துள்ள நிலையில், அவரே இத்தேர்தலில் வெற்றிபெறும் நிலையை எட்டியுள்ளார். இந்தத் தேர்தல் வெற்றிகுறித்து கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் "மலரும்" இணையம் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்தத் தேர்தல் முடிவு குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:- மைத்திரிபால சிறிசேனாவின் தலைமை மீது மக்கள் அதிக எதிர்பார்ப்புகளை முன்வைத்து தமது முடிவைத் தெளிவாகவும், வெளிப்படையாகவும் உறுதியாகவும் கூறியிருக்கின்றார்கள். நாடு பழைய பாதையிலிருந்து விலகி வேறு வழியில் - நியாயமான தடத்தில் - பயணிக்கவேண்டியதன் அவசியத்தை தமது விருப்பமாக நாட்டு மக்கள் தெரியப்படுத்தியிருக்கின்றார்கள். நாட்டு மக்கள் அனைவரும் சமாதானமாகவும், சமத்துவமாகவும் கௌரவமாகவும் வாழ்வதற்கு உகந்த சூழல் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற தமது எதிர்பார்ப்பை அவர்கள் அப்பட்டமாக முன்வைத்திருக்கின்றார்கள். தமிழ் மக்களும் தமிழ்ப்பேசும் மக்களும் - குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்கள் - தங்களுக்கு நீதியும் நியாயமும் கிட்டும் என்று நம்பி இந்தத் தீர்ப்பை அளித்திருக்கின்றார்கள். அதனையே ஒட்டுமொத்தமாக இந்தத் தேர்தல் வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்தத் தேர்தல் ஜனநாயக மாண்புகளுக்கு, மக்களின் இறைமைக்குக் கிடைத்த மகத்தான வெற்றி. அந்த ஜனநாயக மாண்பின் வெற்றியில் தங்களுக்கு உள்ள உரிமை- அந்த இறைமையில் தமக்கு உள்ள நியாயமான உரித்து - உரிய முறையில் தங்களுக்கும் பகிரப்படும் என தமிழ் மக்கள் நம்புகின்றார்கள் எதிர்பார்கின்றார்கள். - என்றார்.

## தாயகத்தில்...

தேசிய ஒற்றுமைக்கு தமிழப் பேசும் மக்கள் என்றும் எப்போதும் சவாலாக இருந்ததோ இருக்கப்போவதோ இல்லை. மாறாக சுயநல பதவி மோகம் கொண்ட தென்னிலங்கை அரசியல்வாதிகளின் செயற்பாடே தேசிய அரசியலில் இருந்து தமிழ்ப்பேசும் மக்களை ஒதுக்கி வைத்துள்ளது என்பதற்கு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பல தசாப்த காலமாக தீர்க்கப்படாத இனப்பிரச்சினை நாட்டில் புற்றுநோயாக புரையோடிப்போயுள்ளது என்பதை உணர்த்தும் அதன் தீவிரத்தன்மை உணர்த்தும் அதன் தீர்வு தொடர்பான அரசியல் உணர்த்தும் அதுபற்றி பேசுவதற்கோ ஏன் மூச்சு விடுவதற்கோ எத்தரப்பும் விரும்பாத அரசியல் போக்கே ஜனாதிபதி தேர்தலை ஒட்டிய காலங்களில் நாம் தென்னிலங்கையில் தெளிவாகக் கண்டோம். எனினும் நாம் தென்னிலங்கை அரசியல் போக்குடன் கைகோர்க்க தயாராக உள்ளோம் என்பதை .இந்த தேர்தல் எடுத்துக்காட்டியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பதவி ஆசை

## அண்ணன் எப்ப சாவான்: திண்ணை எப்ப காலியாகும்

கடந்தவாரத் தொடர்ச்சி .. ..



### அபூபக்கர்(ச) அவர்கள் மக்காவைச் சேர்ந்தவர்கள்:

உமர் இப்னு கத்தாப், அல்லது அபூ உபைதா இப்னு அல்ஜர்ராஹ்விற்கு (தலைமைக்கான) விசுவாசப் பிரமாணம் செய்யுங்கள்' என்று கூறினார்கள்.

அப்போது உமர்(வ), 'இல்லை' நாங்கள் உங்களிடமே விசுவாசப் பிரமாணம் செய்கிறோம். நீங்கள் எங்கள் தலைவர் எங்களில் சிறந்தவர் எங்களிடையே அல்லாஹ்வின் தூதருக்கு மிகவும் பிரியமாயிருந்தவர்கள்' என்று சொல்லிவிட்டு, அவர்களின் கரத்தைப் பிடித்து அவர்களிடம் விசுவாசப் பிரமாணம் செய்தார்கள். மக்களும் அபூ பக்கர்(வ) அவர்களிடம் விசுவாசப் பிரமாணம் செய்தார்கள். அப்போது ஒருவர், 'ஸஅத் இப்னு உபாதா அவர்களை(ப் புறக்கணித்து அவரின் கருத்தை) நீங்கள் கொன்று விட்டீர்கள்' என்று கூறினார். அதற்கு உமர்(வ), 'அல்லாஹ் தான் அவரைக் கொன்றுவிட்டான்' என்று பதில் கூறினார்கள்.' (புஹாரி: 3668)

இதே செய்தி சற்றுக் கூடுதல், குறைவுகளுடன் பல ஹதீஸ் கிரந்தங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் 'அபூ மிஹ்னப்' எனும் பொய்யனான ஷிஆக் கொள்கையுடையவனால் அறிவிப்புச் செய்யப்பட்ட செய்திதான் மக்கள் மத்தியில் பெரிதும் பரவியுள்ளது.

இமாம் தபரி இவரது செய்தியை அறிவிப்புச் செய்துள்ளார். அதில், அன்ஸாரிகள்தான் தலைவர்களாக வர வேண்டும். அதை மறுப்பவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என 'ஹுபாப் இப்னுல் முன்திர்(வ)' அவர்கள் பேசியதாகவும் அபூபக்கர்(வ) அவர்களுக்கு பைஅத் செய்யப்பட்ட பேது ஸ.்.த் இப்னு உப்பாதா(வ) அவர்கள் அதை ஏற்காமல் கோபித்துக் கொண்டிருந்ததாகவும் அதன் பின்னர் அவர் ஜமாஅத்துத் தொழுகையிலும், ஜும்ஆவிலும் கலந்து கொள்ளவில்லை என்றும் நான் என் குடும்பத்தையும் என்னைப் பின்பற்றுபவர்களையும் ஒன்று திரட்டி உங்களுடன் போரிடுவேன் என்று கூறியதாகவும் இடம்பெற்றுள்ளது.


'உஸைத் இப்னு "ஹுழைர்' என்ற அன்ஸாரித் தோழர்தான் அபூபக்கர்(வ) அவர்கள் தலைவராக வர வேண்டும் என்று கூறி பைஅத்தும் செய்தார். இவர் அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்தவர். ஸ.்.த் இப்னு உப்பாதா கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர். தமது எதிர்க் கோத்திரத்தைச் சேர்ந்தவர் தலைவராக வருவதை விட மக்காவாசி தலைவராக வருவதே மேல் என்று கருதித்தான் அவர் அபூபக்கர்(வ) அவர்களுக்கு பைஅத் செய்ததாகவும் அபூ மிஹ்னப் எனும் ஷிஆ இட்டுக்கட்டியுள்ளான்.

தொடரும் .. ..




# பலகாரம்

## காலிஃபளவரில் போண்டா



**தேவையான பொருட்கள்**

காலி.்.ப்ளவர் - 1 கப், கடலை மாவு - 1 கப், பச்சை மிளகாய் - 2 (நறுக்கியது), மிளகாய் தூள் - 1தேகரண்டி, ஓமம் - 1 தே.கரண்டி, கரம் மசாலா - 1 தே.கரண்டி , பேக்கிங் சோடா - 1 சிட்டிகை, உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - 1 கப் (பொரிக்க), தண்ணீர் - 1 கப்

**செய்முறை**

முதலில் ஒரு பாத்திரத்தில் கடலை மாவைப் போட்டு, தண்ணீர் ஊற்றி கெட்டி சேராதவாறு நன்கு கலந்து கொள்ள வேண்டும். பின்னர் ஓமம், மிளகாய் தூள், உப்பு, பேக்கிங் சோடா, பச்சை மிளகாய் மற்றும் கரம் மசாலா சேர்த்து நன்கு கலந்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். பின்பு ஒரு தாச்சியை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், காலி.்.ப்ளவரை கடலை மாவில் பிரட்டி எண்ணெயில் போட்டு பொன்னிறமாக பொரித்து எடுக்க வேண்டும். சுவையான காலி.்.ப்ளவர் போண்டா தயார்.

## ஈஸியாக முகத்தை பளபளப்பாக்க

அழகுக் குறிப்பு

வீட்டிலிருந்தபடியே முகத்தை பொலிவுடன் வைக்க சிறந்தது முட்டைக்கோஸ் பேஷியல்.

**முட்டைக்கோஸ் பேஷியல்**

இந்த பேஷியலை செய்வதற்கு முதலில் காய்ச்சாத பாலால் முகத்தை நன்கு துடைக்க வேண்டும். பிறகு முட்டைக்கோஸை பச்சையாக அரைத்து அதில் சிறிது தண்ணீர் சேர்த்து நன்றாக பிழிந்து கொள்ளவும். இதன்பின் வடிகட்டி சாறு எடுத்து அந்த சாற்றை தனியாக வைக்கவும்.



பின் மசித்த முட்டைக்கோஸை கொண்டு முகத்துக்கு மசாஜ் செய்யவும். இடையிடையே முட்டைக்கோஸ் சாற்றை விரல்களில் தொட்டுக் கொள்ளவும். இருபது நிமிடங்கள் கழித்து ஈரமான பஞ்சால் முகத்தைத் துடைத்து விடவும்.

பிறகு முட்டைக்கோஸ் விழுது, பால் ஒரு ஸ்பூன் மற்றும் தேன் 1 கரண்டி சேர்த்து நன்றாக கலந்து முகத்திற்கு பேக் போடவும்.



மீண்டும் 20 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரால் முகத்தை கழுவினால் முகம் பளிச்சென்று ஜொலிக்கும்.

இந்த பேஷியலை பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை செய்து கொள்ளலாம்.

மேலும் பருக்கள் இல்லாதவர்கள் என்றால் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறையும் செய்து கொள்ளலாம்.



# மருத்துவம்

## அகத்தி தரும் நன்மைகள்

அகத்திக்கீரையில் இலை, பூ, காய், பட்டை, வேர் ஆகிய அனைத்தும் மருந்தாக பயன்படுகின்றன. இக்கீரை காய்ச்சலைக் குறைத்து உடல்சூட்டை சமப்படுத்தும் இயல்புடையது. குடல்புண், அரிப்பு, சொறிசிரங்கு, தொண்டைப்புண் மற்றும் தொண்டைவலி, தோல் நோய்கள் போன்றவற்றிற்கு இக்கீரையை சாப்பிடுவதன் மூலம் குணமாகும்.

- அகத்திக்கீரையைப் பச்சையாக மென்று சாற்றை உள்ளே விழுங்கும்போது தொண்டைப் புண், தொண்டை வலி ஆகிய நோய்கள் நீங்கும்.
- ரத்த பித்தம், ரத்த கொதிப்பு, ஆகியவை அகத்திக்கீரையை சாப்பிடுவதால் அகலும்.
- அகத்திக்கீரையை வாரம் ஒரு முறை சமைத்து உண்ண வெயிலில் அலைவதால் ஏற்படும் வெப்பம், மலச்சிக்கல், காபி, டீ, ஆகியவற்றைக் குடிப்பதால் ஏற்படும் பித்தம் ஆகியவை தீரும்.
- அகத்தி மரப்பட்டை, வேர்ப்பட்டை வகைகளை கைப்பிடியளவு எடுத்து 1/2 லிட்டர் நீரில் போட்டு சுண்டக்காய்ச்சி அதனை வடிகட்டி 100 மி.லி. அளவு என 2 வேளை குடித்து வர காய்ச்சல், கை கால், மார்பு, உள்ளங்கால், உள்ளங்கை எரிச்சல், நீர்க்கடுப்பு, நீர்த்தாரை எரிவு, அம்மைக் காய்ச்சல் குணமாகும்.
- இக்கீரையைப் பிழிந்து அதன் சாறை 2 துளி மூக்கில் விட்டால் காய்ச்சல் நீங்கும். அகத்தி இலைச் சாற்றை நெற்றியில் தடவி நெற்றியை இலேசாக அனலில் காண்பிக்க கடுமையான தலைவலி, சளி, ஜலதோசம் போன்றவை நீங்கும்.
- அகத்தி கீரை வயிற்றுப் புண் (அல்சர்) என்னும் நோயைக் குணப்படுத்தும். இதற்கு அகத்திக்கீரையை நன்றாக கழுவி இதில் 4 பங்கு சின்ன வெங்காயத்தை சேர்த்து அகத்திக்கீரை சூப் தயாரித்து தினமும் 1 வேளை குடிக்கலாம்.



# சேற்றுப்புண்

கொத்த மல்லி எண்ணெயினால் சேற்றுப் புண் பூரணமாகக் குணமானதாகக் கூறவில்லை. ஆனால் 14 முதல் 28 நாட்களுக்கு பூசப்பட்டபோது நோயின்அறிகுறிகள் பெருமளவு குறைந்தன.அத்துடன் அதனால் நோயளிகளுக்கு பிரச்சனைகள் ஏதும் ஏற்படவில்லை.

சேற்றுப் புண் என்பதை எமது பகுதியில் நீர்ச் சிரங்கு என்றும் சொல்லுவார்கள். இது ஒரு பங்கஸ் கிருமியால் எற்படும் நோயாகும்.

மருத்துவம் செய்யப்பட்ட அந்த சேற்றுப் புண்களை மருத்துவ ஆய்வு கூடப் பரிசோதனை செய்தபோது பங்கஸ் கிருமித் தொற்றுக் குறைந்திருந்தமை கண்டறியப்பட்டது.



எனவே கொத்தமல்லி எண்ணெய்க்கு பங்கஸ் கிருமிக்கு எதிரான குணமும் உண்டு என நம்பலாம்.

சேற்றுப் புண்ணிற்கு இன்றைய ஆங்கில மருத்துவத்தில் பங்கஸ்சுக்கு எதிரான பல பூச்சு மருந்துகள் உள்ளன. அதற்குக் குறையாத போது உள்ளெடுக்கும் மாத்திரைகளும் உள்ளன.



## இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். அநாவசியச் செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள்.

**ரிஷபம்** : வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. நட்பு வட்டம் விரியும். புது ஏஜென்சி எடுப்பீர்கள்.

**மிதுனம்** : கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். சகோதரங்களால் பயனடைவீர்கள். பூர்வீக சொத்து பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கும்.

**கடகம்** : தள்ளிப் போன வி'யங்கள் உடனே முடியும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். உடல் நிலை சீராகும்.

**சிம்மம்** : சின்ன சின்ன பிரச்னைகள் குடும்பத்தில் தலைத்தூக்கும். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள்.

**கன்னி** : பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கைமாற்றாக வாங்க வேண்டி வரும்.

**துலாம்** : பழைய சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**விருச்சிகம்** : உறவினர்கள், நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

**தனுசு** : இருந்த மனக்குழப்பம் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள்.

**மகரம்** : குடும்பத்தில் உள்ளவர்களுடன் வளைந்துக் கொடுத்துப் போவது நல்லது. அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதி மொழியும் தர வேண்டாம்.

**கும்பம்** : திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். ஆடை, ஆபரணம் சேரும்.


**மீனம்** : பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். விருந்தினர்கள் வருகை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## உள்ளூர் விளையாட்டு செய்திகள்

### கிரிக்கட் போட்டித் தொடர்



பி.துவாரகசீலனின் சகலதுறை ஆட்டத்தின் காரணமாக சென்.ஜோன்ஸ் கல்லூரி 6 விக்கெட்களால் ஜா – எல கிறிஸ்ட் கிங் கல்லூரி அணியை வெற்றி பெற்றது. இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் 19 வயதுப்பிரிவு பிரிவு 3 அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி தற்போது இடம்பெற்று வருகின்றது.

இந்த சுற்றுப்போட்டியின் போட்டியொன்று சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் ஜா – எல கிறிஸ்ட் கிங் கல்லூரி அணிக்கும் இடையில் கடந்த வெள்ளி (02.01.2015) மற்றும் சனி (04.01.2015) ஆகிய இரு தினங்கள் நடைபெற்றது. சென்.ஜோன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 196 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிறிஸ்ட் கிங் அணி, 83 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.


### பொங்கல் முன்னிட்ட போட்டி

யாழ். சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் வருடாந்தம் நடத்தும் தைப்பொங்கல் தினத்தையொட்டிய மாவட்ட ரீதியிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி 4ஆவது தடவையாக இவ்வருடம் இடம்பெறவுள்ளது. அணிக்கு 6 பேர் மற்றும் 5 ஓவர்களைக் கொண்ட இந்தச் சுற்றுப்போட்டி எதிர்வரும் சனி (10.01.2015) மற்றும் ஞாயிறு (11.01.2015) தினங்களில் மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## துடுப்பாட்ட பயிற்சி முகாமும் பொருட்கள் வழங்கி வைப்பும்

ஸ்ரீ லங்கா கிரிக்கெட்டின் ஏற்பாட்டில் திருகோணமலை பாடசாலை மாணவர்களுக்கும் கழக வீரர்களுக்கும் துடுப்பாட்டம் தொடர்பான பயிற்சி முகாம் ஒன்று செவ்வாய்க்கிழமை (06.01.2015) அன்று ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. பயிற்சி முகாமையாளர் சுனில் பெர்ணாண்டோ தலைமையில் மாகாண, மாவட்ட பயிற்றுவிப்பாளர்கள் ஒன்பது பேர் இதில் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர். 16 பாடசாலைகளையும், கழகங்களையும் சேர்ந்தவர்கள் இதில் பங்குபற்றினார்கள்.

திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இப்பயிற்சி முகாம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.










பிரிதானியா - இலங்கை கிரிக்கெட் சங்கத்தினால் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும் மாகாண பெண்கள் அணிக்கும் ஒரு இலட்சம் ரூபாய் பெறுதியான கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இப்பயிற்சி முகாம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





சசிகுமார் கதிரவன்

## முதலிடம் முறியடிப்பு



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் சதம் விளாசிய இந்திய அணித்தலைவர் கோஹ்லி, டிராவிட் சாதனையை முறியடித்துள்ளார்.

இந்திய, அவுஸ்திரேலிய அணிகள் மோதும் 4வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் நடந்து வருகிறது. இந்தப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் விராட் கோஹ்லி சதம் அடித்தார். அவர் 230 பந்துகளில் 147 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். இந்த தொடரில் இது அவருக்கு 4வது சதமாகும். இதன் மூலம் அவுஸ்திரேலிய மண்ணில் நடந்த ஒரு டெஸ்ட் தொடரில், அதிக ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரர் பட்டியலில், முன்னாள் அணித்தலைவர் டிராவிட்டை முந்தி முதலிடம் பிடித்தார்.

## தொடர் சதம்



அவுஸ்திரேலிய அணியின் புதிய அணித் தலைவர் ஸ்டீவன் ஸ்மித் இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரின் நான்கு போட்டிகளிலும் தொடர்ந்து சதமடித்து சாதனை படைத்துள்ளார்.

இந்த டெஸ்டில் அவுஸ்திரேலியாவின் முதல் 6 துடுப்பாட்ட வீரர்களும் 50-க்கும் மேல் ஓட்டங்களை எடுத்துள்ளனர். அவுஸ்திரேலியாவின் முக்கிய 6 வீரர்கள் அனைவரும் ஒரே இன்னிங்சில் 50 ஓட்டங்களுக்கு மேல் கடப்பது இதுவே முதல் முறையாகும்.

## பழையமுக புது நடிகர்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் நடிகராக புதிய அவதாரம் எடுக்கிறார். கிரிக்கெட்டில் பல சாதனைகளை படைத்த சச்சின், 200 டெஸ்டில் பங்கேற்றுள்ளார். மொத்தம் 664 சர்வதேச போட்டிகளில், 34,357 ஓட்டங்கள் எடுத்துள்ளார். கடந்த 2013 நவம்பர் மாதம் சச்சின் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார். ராஜ்ய சபா உறுப்பினராக இருந்த இவரது, கிரிக்கெட் சாதனைகளுக்காக 'பாரத ரத்னா' விருது கிடைத்தது.

இந்நிலையில் சச்சினின் வாழ்க்கை குறித்து, சினிமா உருவாகிறது. இந்த படத்துக்கு '200 நாட்–அவுட்' என, பெயரிடப்பட்டுள்ளது. இதில் கிரிக்கெட் வீரர் சச்சின் கதாபாத்திரத்தில், அவரே நடிக்கிறார்.

## இலங்கை அணி தெரிவு

உலகக் கிண்ணத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 15 பேர் கொண்ட இலங்கை அணி கிண்ணத்தை வெல்வதற்கு மிகச் சிறந்த அணி என தெரிவுக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.



இலங்கை கிரிக்கெட் சபையின் கேட்போர் கூடத்தில் 07.01.2015 (புதன்கிழமை) மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே தெரிவுக் குழுவின் தலைவர் சனத் ஜெயசூரியா இதனைத் தெரிவித்தார்.

## ரசிகர் - திருமணம்



பிரிஸ்பேன் ஓபன் டென்னிஸ் போட்டியில் ரசிகர் ஒருவர் ரஷ்யாவின் பிரபல டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவாவுக்கு ஃப்ரப்போஸ் செய்தார். முதல் சுற்றில் கஜகஸ்தானின் யாரோஸ்ல்வாவை 6-0, 6-1 என்ற செட் கணக்கில் வீழ்த்தி ஷரபோவா வெற்றி பெற்றார். அப்போது ஷரபோவாவின் மிகப் பெரிய ரசிகரான 29 வயதான டேமியன் டோர்ரி என்பவர் ஷரபோவா என்னை கல்யாணம் பண்ணிகிறீங்ளா? என்று பேனரை காட்டினார். இதற்கு 'சிரித்துக் கொண்டே சரி பண்ணிக்கிறேன்' என்று ரசிகருக்கு அதிர்ச்சி கொடுத்தார் ஷரபோவா.

## முதல் பெண் அணி தெரிவு



ஐரோப்பிய மகளிர் ஹென்ட்போல் சம்பியனான நோர்வே அணி பிரேஸிலில் நடைபெறவுள்ள ஒலிம்பிக்கில் விளையாடுவதற்கு தகுதி பெற்றுள்ளது. ஹங்கேரியின் தலைநகரமான புடாபெஸ்டில் ஐரோப்பிய மகளிர் ஹென்ட்போல் சம்பியன் போட்டி நடைபெற்றது.

சுவீடன் அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்ற நோர்வே ரியோ 2016 இல் விளையாடும் முதல் அணியாகத் தேர்வானது. போட்டியின் முதல் பாதியில் 12:10 என சுவீடன் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில எழுச்சிகண்ட நோர்வே 28: 25 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்றது. ஐரோப்பிய மகளிர் கைபந்து சம்பியனான நோர்வே தொடர்ச்சியாக மூன்றாவது முறை ஒலிம்பிக்கில் விளையாடத் தகுதி பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றப்பட்ட சம்பூர் மக்கள்



தமது முகாம் வாழ்வு முற்றுப் புள்ளியாகும் என நம்பியிருந்த சம்பூரில் இருந்து இராணுவ நடவடிக்கை மூலம் இடம் பெயர்த்தபட்ட மக்கள் மீண்டும் அரசியல் காரணங்களுக்கா ஏமாற்றப்பட்டுள்ளனர்.

கடந்தவாரம் மூதூரில் உள்ள இடைத்தங்கல் முகாம்களில் உள்ள சம்பூர் மக்களை மீண்டும் சம்பூருக்கு அழைத்துச் சென்று குடியமர்த்தப் போவதாக எழுந்த அலை அமைதியாக முடிவிற்கு வந்துள்ளது.

அம்பாறையில் இருந்து வருகை தந்த பிக்கு ஒருவரும் பிரதேசத்திற்குப் பொறுப்பான இராணுவ அதிகாரியும் திருகோணமலை 17

## தேர்தல் ஆணையாளரின் மீது தாக்குதல்

திருகோணமலையின் உதவித் தேர்தல் ஆணையாளரின் மீது கடந்த 5ம் திகதி தாக்குதல் நடாத்தப்பட்டிருந்தது.

தாக்குதலை நடாத்தியவர்கள் பொருளாதாரப் பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமேயின் செயலாளர்கள் இருவர் என அடையாளம காணப்பட்டுள்ளனர்.

தேர்தல் விதிகளை மீறி சனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களுள் ஒருவரான தகிந்த ராசபக்சவிற்கு ஆதரவான வீடியோக் 17

# ஆட்சி மாறும் ?

## கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சி அமையுமா?

கிழக்கு மாகாணசபையின் ஆட்சியில் பாரிய மாற்ற- மொன்றை சனாதிபதித் தேர்தல் முடிவுகள் உருவாக்கியுள்ளன.

கிழக்கு மாகாண சபையானது முன்னாள் சனாதிபதியான மகிந்த ராசபக்ச ஆட்சியில் இருந்தபோது அவரது ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிட்டு கிழக்கில் வெற்றயீட்டிய அங்கத்தவர்- களாலும், அந்த சனாதிபதிக்கு அப்போது ஆதரவளித்திருந்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு வென்றிவர்களின் கூட்டாலும் உருவாக்கப்பட்டிருந்தது.

தற்போது மத்தியில் எதிர்கட்சிகளின் பொது 17

# ஷிராணி மீண்டும் பிரதமநீதியரசர் ஆகின்றார்.... !?

## புதிய பாதுகாப்புச் செயலாளர் யார்?

புதிய சனாதிபதியின் பதவியேற்பானது இலங்கையின் பிரதம நீதியரசரின் முன்னிலையில் நடைபெறாமல் உயர் நீதிமன்ற நீதிபதியான ஸ்ரீபவன் அவர்களின் முன்னிலையில் நிகழ்ந்துள்ளதை





அடுத்து பிரதம நீதியரசர் 43 என சுதந்திர ஊடகங் களால் அழைக்கப்- பட்டுவரும் ஷிராணி பண்டாரநாயக்க மீண்டும் பிரதம நீதியரசராக நியமிக்கப்படுவார் என எதிர்வு கூறப்- பட்டுள்ளது.

திவிநெகும சட்டமூலத்தை உருவாக்கும் முயற்சியில் மாகாண சபைகளின் ஒப்புதல் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என அப்போதைய பிரதம நீதியரசரான ஷிராணி வழங்கிய தீர்ப்பை அடுத்து அவருக்கு எதிராக 17

## தாயகத்தில் இராணுவத்தை அகற்றுங்கள் - யோகேஸ்வரன்

## மாற்றத்திற்கேயொழிய, ஏமாற்றத்திற்கு அல்ல - ஜனா

வடக்குகிழக்கில் இராணுவ பிரசன்னத்தை இல்லாமல் செய்வதற்கு மைத்திரி அவர்கள் ஜனாதிபதியாக பதவியேற்றதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதையே வாக்களித்த வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேன அவர்களிடம் கோருகின்றனர் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

பொது எதிரணி ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிகுறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோளை ஏற்று மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்திருக்கின்றார்கள். ஆட்சி மாற்றத்தை கொண்டுவரவேண்டும் என்ற காரணத்தினாலேயே மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்திருக்கின்றார்கள். ஆட்சி மாற்றத்திற்காக வாக்களித்த அனைத்து மக்களுக்கும் நான் நன்றிகளை தெரிவித்துக கொள்கிறேன் என்றார் அவர்.

அதேவேளை கிழக்கு மாகாண சபை உறுப்பினரான ஜனா நாட்டின்

# பிதாமகன் பிரதமர் ரணில்



ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியத் தலைவர் திரு ரணில் விக்ரமசிங்க நேற்று மாலை பிரதமராகச் சத்தியப் பிரமானம் எடுத்துக்கொண்டார்.

பொது வேட்பாளரை சனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதற்கு இரண்டாவது தடவையாகவும் விட்டுக் கொடுத்து ஆட்சி மாற்றத்திற்கான பிதாமகனாக அவர் உருவெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



திருமலையில் வெற்றிப் பேரணி

மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில்...

## பொதுநலவாயத்தின் தலைமைத்துவத்தை இழந்தார்?

இலங்கையின் சனாதிபதி என்ற முறையில் பொதுநலவாய நாடுகளுக்கான தற்காலத் தலைவராக மகிந்த ராசபக்ச செயற்பட்டு வந்தார்.

தற்போது இலங்கையின் சனாபதியாக அவரது பதவி பறிபோயுள்ளதால் பொதுநலவாயத் தலைமைத்துவமும் இயல்பாகவே பறிபோய்விடும் என அவதானிகள் தெரிவித்தள்ளனர்.

எனினும் அடுத்ததாக தற்போதைய சனாதிபதிக்கு அத்தலைமைத்துவம் கிடைக்குமா? என்பது பற்றித் தகவல்கள் வெளியாகவில்லை.

# வாக்களிக்க வரும் திருகோணமலை அரசியல் பிரமுகர்கள்







மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தன) நிறுவனத்தால் 159 A, கடலமுக வீதி, திருகோணமலையில் இருந்து 10.01.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org